தமிழ் மஞ்சரி

மூன்றாம் புத்தகம்

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

தமிழ் மஞ்சரி

(மூன்றும் புத்தகம்)

'ஈழகேசரி'ப் பத்திராதிபர்
நா. பொன்னையா அவர்கள்
தொகுத்தது

சுன்னுகம்:
வட – இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

உரிமை பதிவு] 1958 [விலை ரூபாய் ~~1-25~~

திருத்திய முதற் பதிப்பு — 1958

எம்மால், இதுவரை ‘தமிழ் இலக்கியத் திரட்டு’ என்னும் பெயருடன் வெளியிடப்பட்ட இலக்கிய நூலிற் சிறிது மாற்றஞ் செய்து, ‘தமிழ் மஞ்சரி’ 3ஆம் புத்தகம் என்னும் பெயருடன் (இதனை) இப்பொழுது வெளியிடுகிறோம். தமிழ் மஞ்சரி முதலாம் புத்தகம் என்னும் பெயருடன் இதுகாறும் வெளிவந்த நூலைத் தொடர்ந்து தமிழ் மஞ்சரி 2ஆம் புத்தகம் என்னும் நூலும், தமிழ் மஞ்சரி 3ஆம் புத்தகமாகிய இந்நூலும் வெளிவருகின்றன.

வணக்கம்.

பதிப்பகத்தார்

சுன்னாகம் :
திருமகள் அழுத்தகம்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி				பக்கம்
i.	கலைமகள் வாழ்த்து		...	1
ii.	ஈசனுவக்கும் இன்மலர் மூன்று		...	2
iii.	ஔவையார் பாடல்	...	...	2
iv.	சந்திரமதி சுயம்வரம்	...	...	4
v.	நான்மணிக்கடிகை	...	...	8
vi.	குசேலோபாக்கியானம்	...	...	10
vii.	குறத்திப் பாட்டு	..	....	13
viii.	த்னிச் செய்யுட்டிரட்டு	...	...	14
ix.	தேவதாசன் பாம்பினுற் கடியுண்டிறத்தல்			16
x.	படிக்காசுப் புலவருடைய தமிழ்ப்பாடலருமையை வியந்து ஒரு புலவர் பாடியது			18
xi.	தண்டலையார் சதகம்	...	...	19
xii.	நீதிநெறி விளக்கம்	...	...	20
xiii.	விநோத கவிகள்	...	...	23

வசனப் பகுதி				
1.	கல்வி	...	...	25
2.	தமிழ்த் தாய்	...	...	29
3.	கண்ணகி கதை	...	...	35
4.	பாஷாலங்காரம்	...	...	47
5.	வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை			50
6.	திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு		...	55
7.	நச்சினார்க்கினியர்	...	...	59
8.	மின்சார விளக்கு	...	...	62
9.	சமந்தகூடம்	...	...	74
10.	சரித்திர நூல்களைக் கற்பதனுல் வரும் பயன்			82
11.	நச்சுப் பொய்கை	...	...	86
12.	வாலி வதம்	...	...	91
	உரைப் பகுதி	...	...	105

பதிப்புரை

இந்நூல், இலங்கையிலுள்ள தமிழ் ஆங்கில பாட சாலைகளிற் கற்கும் கனிட்ட மேல்வகுப்பு மாணவர்களுக்கு இலக்கிய பாட புத்தகமாக உபயோகிக்கப்படத்தக்கது.

இந்நூலிலுள்ள செய்யுட்பகுதிப் பாடல்கள் பல்வேறு சுவைகள் பொருந்தியனவாய், இரசமான சம்பவங்களுடன் தொடர்புபட்டு மாணவருக்குப் புதுமையும் இன்பமும் தருவனவாய் அமைந்திருக்கின்றன.

காதைச் செய்யுள்கள், அவ்வக் கதைப் பகுதியிற் பிர தானமானவையாயும் இனிமையுடையனவாயும் உள்ள செய்யுள்களாற் தொகுக்கப்பட்டிருப்பதால், இந்நூல் மூலம் கதையின் ஒரு பகுதியை மாத்திரம் மாணவர் கற்பினும், அந்நூற் சம்பவம் முழுவதையும் அறியச் சந்தர்ப்பம் ஏற் படுகிறது.

செய்யுட் தொகைகளை மிகுதியாக்காமலும், குறை வாக்காமலும் அளவுபடுத்தி அமைத்திருப்பது, இந்நூற் செய்யுட் பகுதியிற் காணப்படும் மற்றொரு நல்ல அம்ச மாகும்.

இந்நூலிலுள்ள வசனபாகம், கட்டுரைச் சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்திருப்பது இந்நூல் வசனப் பகுதியை வாசிப்போர்க்கு நன்கு புலப்படும். இப் பகுதியி லுள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் மிகச் சிறந்த தமிழ் அறிஞர்களால் எழுதப்பட்டவை. அவை பல்வேறு பொருள்கள்பற்றி எழுதப்பட்டிருத்தலின் மாணவர்க்கு உற்சாகமும், விடய அறிவும் தரவல்லன.

சம்பாஷணைகளும், நாடகங்களும் வசனப்பகுதியில் அமைந்திருப்பது மாணவருக்கு மிகவும் உற்சாகமூட்டுவ தாகும்.

நூலின் இறுதியிற் செய்யுட்பாடக் குறிப்புக்களும், அரும் பத விளக்கமும் எழுதப்பட்டிருக்கின்றன. இவை மாண வர்க்கும் ஆசிரியர்க்கும் பெரும் பயன் அளிக்கும்.

வ. இ. தமிழ்நூற் பதிப்பகத்தார்

தமிழ் மஞ்சரி

செய்யுட் பகுதி

I

கலைமகள் வாழ்த்து

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 1

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 2

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. 3

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 4

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 5

— குமரகுருபரசுவாமிகள்

II

ஈசனுவக்கும் இன்மலர் மூன்று

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனுர் வேண்டுவது. 1

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்லக் கழுநீர்த் தொடையுமல்லக்
கூப்பியகைக் காந்தளடி கோமகனுர் வேண்டுவது. 2

பாட்டளிசேர்பொற்கொன்றையோ பாரிலில்லாக்கற்பகமோ
வாட்ட முறுதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்லப் பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனுர் வேண்டுவது. 3

—சுவாமி விபுலாநந்தர்

III

ஔவையார் பாடல்

உழவு

ஏரு மிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால்
என்று முழவே யினிது. 1

எல்லார்க்கும் ஒவ்வோன் றேளிது

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது. 2

ஈயாமை

சுற்றுங் கருங்குளவி சூரைத்தூ ருரியப்பேய்
எற்றுஞ் சுடுகாட் டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னுக்குந்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம். 3

பெரியார் சிறியார் இயல்பு

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வர்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார். 4

இன்னார்க்கு இது துரும்பெனல்

போந்த வுதாரனுக்குப் பொன்துரும்பு சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறுதுரும்பாம்—ஆய்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பா மில்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு. 5

இதனோடு இது நீங்கும் எனல்

தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோஞ்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
வுற்றா ருடன்போம் உடற்பிறப்பாற் றோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம். 6

நாலு கோடி கவி பாடியது

ஒரு நாள் சோழராசன் தன் சமஸ்தான வித்துவான்களை அழைப்பித்து "நீங்கள் நாளைய வுதயத்துக்கு நாலு கோடிக்குப் பாடல் பாடி வரவேண்டும்" என்று கட்டளையிட்டான். அதைக் கேட்ட அவ் வித்துவான்கள் "நாலு கோடிக்கு எங்ஙனம் பாடுவது?" என ஒன்றுந் தோன்றாது அதிக வியாகுலத்துடனே சென்றார்கள். ஔவையார் அவ் வழியாக வரும்போது அவர்கள் விசனமுற்றிருப்பதைக் கண்டு, "ஏன் முகம் வாடி ஏக்கமுற்றிருக்கின்றீர்கள்?" என்று கேட்க, அவர்கள், "அம்மணீ! சோழராசன் எங்களை நாளைய உதயத்திற்குள்ளே நாலு கோடிக்குப் பாடல்

பாடி வரும்படி கட்டளையிட்டிருக்கிறார். இன்னும் ஒரு பாட்டுக்கும் வழியில்லை. ஆதலின் இன்றிராத்திரிக்குள் நாலு கோடி எவ்வண்ணம் பாடப்போகிறோம் என்று திகைத்திருக்கின்றோம்" என்றனர். அதைக் கேட்ட ஔவையார், "ஓ புலவீர்காள்! நீவிர் வருந்துதல் ஒழிமின்; இதோ ஒரு நொடியிற் பாடித் தருகிறேன்" என்று பின் வரும் பாடல்களைப் பாடிக் கொடுத்தார். அவற்றைக் கேட்டவுடனே வித்துவான்கள் யாவரும் சூரியனைக் கண்ட தாமரை மலர்போல முகமலர்ந்து அப் பாடலைப் பெற்றுக் கொண்டுபோய் அரசன்முன் வைக்க, அரசன் மகிழ்வெய்தினன்.

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும். 1

உண்ணீருண் ணீரென்றே உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி யுறும். 2

கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும். 3

கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி யுறும். 4

IV

சந்திரமதி சுயம்வரம்

(அரிச்சந்திரபுராணம்—விவாக காண்டம்)

1

சோலை யெங்குந் தொழுதிக ளார்த்தன
ஆலை யந்தொறுஞ் சங்கங்க ளார்த்தன
மாலை வெண்குடை மன்னவர் முன்றில்வாய்க்
காலை மாமுர சங்கள் கறங்கின. 1

முன்ன மன்னன் முகூர்த்தமோ ரேழெனச்
சொன்ன நற்றினம் வந்து தொடங்கலும்
மன்ன னும்மறை யோர்களு மாதரும்
கன்ன லந்திருக் காவணத் தெய்தினர். 2

வேந்த ரீண்டினர் வேதிய ரீண்டினர்
மாந்த ரீண்டினர் மங்கைய ரீண்டினர்
ஆய்ந்த நீதி யமைச்சரு மவ்வவர்
சேர்ந்த சேனையுஞ் சேரவந் தீண்டின. 3

வாகை யுற்று மதனொரு பால்வர
ஓகை யுற்றவண் டோலமிட் டேவரப்
பாகை யுற்ற பனிமொழிப் பைந்தொடி
தோகை யைக்கொடு தோழியர் தோன்றினார். 4

சென்னி நின்றிரு சீறடி மட்டும்வான்
மின்னி னாலமைத் தன்னசெம் மேனியைப்
பொன்னி னான்மணி யாற்புதைத் தேயெழிற்
கன்னி நன்மணக் காவணத் தெய்தினாள். 5

2

அன்ன காலையி னங்கைக ணீட்டியே
கன்னன் மாமொழிக் காரிகைத் தோழிமார்
மன்னர் நாமமு நாடும் வழிகளும்
இன்ன தின்ன தெனவெடுத் தோதினார். 6

வேறு

அதிபார தனபார வதிரூப மலர்மாலை யனையா யிவன்
நதிபாய வுயர்போதி னறைபாய நிறைவான சிறைவா வியில்
மதியாமல் வலைபீறி வெடிபோன பருவாளை வளைபூ கமேல்
குதிபாய மடல்கீறி விழுதேறல் கரைசாடு குடநா டனே. 7

இருணாறு நஞ்சொத்த விழியாய்து வண்டெய்த்த விடையாயிவன்
கருணாகர பந்தத்தி னியல்பாம ருஞ்சித்ர தொடியே வியே
முரணார மன்றிட்ட மகவா னெடுங்கொற்ற முடிசா டினோன்
சரணார விந்தத்து மகரால யந்துற்ற தமிழ்மா றனே. 8

மலிவாச மலர்பூசி யளிபாடு நறையோதி மயிலே யிவன்
ஒலியேறு திரைமோது முவராழி யுலகேழு முடனா கவே
வலியோர்க ளெளியோரை நலியாம லசைநாத மணிவா யிலான்
புலியேறு மடமேரு கிரிமீதி லிடுமீளி புனனா டனே. 9

அரிசிந்து விழியாயி வணிதேரின் மிசையேறி யடைகோ மகன்
விரிசிந்து வினையுண்ட வொருசிந்து முனிதங்கு கிரிசிந் துகால்
பொரிசிந்தவலர்புன்கு பொருள்சிந்தவலர்கொன்றை பொறிவண்டினம்
வரிசிந்த மகரந்த மலர்சிந்த வருசிந்து வளநா டனே. 10

தேஞ்சாலு மிருகுன்று களையஞ்சு மிடையஞ்சு திருவே யிவன்
ஈஞ்சாலு மிறவாலு மிறலான திடைபீறி யிழிதே றலும்
காய்ஞ்சாலு கதிர்சாட மாஞ்சோலை யிடைசோர்பு கனியூ றலும்
பாய்ஞ்சாலை வயலூறு பூஞ்சாலி விளைவேறு பாஞ்சா லனே. 11

தேம்போதி னீர்ந்தாது பூம்பாளை நீங்காத தேங்கோ தையாய்
கூம்போடி வான்றோயு மான்றேரி னீண்டாசை கூர்ந்தே றினேன்
தூம்போடு கூன்கோடு வார்ந்தோடி மீண்டேரி தோய்ந்தே றவே
காம்போடு சேம்போடு சேர்ந்தார மார்ந்தோடு காந்தா ரனே. 12

அடர்ந்தோடி நெஞ்சங்க வர்ந்தேவ ருங்கண்ண ணங்கே யிவன்
தடந்தோறு மங்கங்கு ழன்றான ருந்துஞ்ச யங்கூர் கராத்
தொடர்ந்தோட வெங்குங் கலைந்தோடி யஞ்சுஞ் சுணங் காழிநீர்
கடந்தோடி யென்றுங் கரும்பூடு றங்குங் கலிங்கே சனே. 13

கடனாக மொருகோடி வயவாசி பலகோடி கடல்போ லவே
உடனாக வரமேக வளவாக வொருதேரி லுறுகோ மகன்
விடனாக மடல்பூக விரிபாளை யெனநாணி வெளிமேய் கிலா
மடனாக மிசைதோகை மயிலேறி மலரூடு மறைகே கயன். 14

வாடிவிழு நூலுமிரு மால்வரையு நேரிடையு மாமுலையு மாச்
சூடிமிக வானிழிய ஞாலம்விளை யாடிவரு தோகை மயிலே
ஆடிநிழல் போலுமுள மேவியணி தேர்மிசையு மாகி வருவோன்
நாடியற நாளுமுயர் கோசலம தானகுல நாட னிவனே. 15

3

மந்தர மனையதோர் வள்ளல் பேர்சொலத்
சுந்தரத் தோகைமார் தோளைத் தாழ்த்தியச்
சந்திர மதியரிச் சந்தி ரன்றனக்
கந்தர நீட்டியுட் கருத்தைக் காட்டினாள். 16

அங்கைவேன் மன்னனு மாசை மீக்கொள
மங்கைதன் பங்கய வதன நோக்கினன்
செங்கயற் கண்ணினு டிருக்க முத்தினில்
மங்கல நாணுறீஇ வயங்கக் கண்டனன். 17

கன்னியென் றெண்ணினங் கன்னி யோவலள்
முன்னரே மங்கலம் பூண்ட மொய்குழல்
இன்னமு மொருவருக் கெய்து மோவென
மன்னவன் மாதுலற் குரைவ ழங்கினன். 18

பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மணமு டிப்பரோ
சிறுத்தவர் செய்தொழி றிரைவ ரைப்பிதில்
நிறுத்தினீர் நீரெனு நெடிது கூறினன். 19

வள்ளலீ துரைத்தலு மதித யன்றன
துள்ளம்விட் டோங்கிய வுவகை யாம்பெரு
வெள்ளமுள் ளடக்கியே வேந்தர் காளிவர்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டு ரைத்ததே. 20

தையலாள் கழுத்தினிற் றாலி யுண்டெனின்
கையினுற் கண்ணுறக் காட்டு நீரெனச்
செய்யகை யறைந்தணி மூக்கிற் சேர்த்தியிவ்
வையனும் பொய்யனென் றரசர் கூறினர். 21

மண்டல வேந்தனெம் மடந்தை மங்கலம்
கண்டது நீங்கடாங் கண்டி லாததும்
திண்டிற லீரொரு தேவ ராசியம்
உண்டென மதிதய னுரைப்ப தாயினன். 22

அண்டர்நா யகன்வர மளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்த மங்கலம்
கண்டவர் பதியிவட் கென்ற கட்டுரை
உண்டஃ தன்றிவே றுண்டு கேட்டிரால். 23

மஞ்சனச் சடையினன் வரத்தில் வந்தநாள்
கஞ்சனை நீழலிற் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கு மங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரு மியானுங் கண்டிலேம். 24

வேறு

என்றலும் வல்லிமு னெண்ணிய நாமம்
ஒன்றல துள்ளுற வுன்னல ளாகிச்
சென்றவன் மார்பிது சேர்கென வுன்று
மன்றலர் மாலையை வானிலெ றிந்தாள். 25

வார்பயில் பூண்முலை மாலையு நெஞ்சும்
பார்பயின் மன்னவர் பற்பலர் கண்ணும்
தார்பயில் வேலரிச் சந்திர னென்பான்
மார்பி லணைந்து மலர்ந்தன மன்றே. 26

வஞ்சி வழங்கிய மாலை யணிந்தோன்
செஞ்சுட ரின்முக நின்றொளி செய்ய
வெஞ்சுடர் முன்சசி யாமென மிக்கோர்
கஞ்சமு கங்கள் கரிந்தன வன்றே. 27

மாதர்க ளார்த்தனர் வானவ ரார்த்தார்
கீதர்க ளார்த்தனர் கேளிரு மார்த்தார்
சூதர்க ளார்த்தனர் துறவரு மார்த்தார்
வேதர்க ளார்த்தனர் வேலை யடங்க. 28

நல்லிய னூலறி நாவலர் பாடப்
பல்லிய மும்பல பாடலு மார்ப்ப
அல்லிம லர்த்தொடை மாலை யணிந்தே
வல்லியு மன்னனு மாளிகை புக்கார். 29

V

நான்மணிக்கடிகை

கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்;—பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி? 1

கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம்; காதலித்தொன்
றுற்றார்முன் தோன்றா உறாமுதல்;—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா; எல்லாம்
வெகுண்டார்முன் தோன்றாக் கெடும். 2

கன்றாமை வேண்டும் கடிய; பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்;—என்றும்
விடல்வேண்டும் தங்கண் வெகுளி; அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. 3

பறைநன்று பண்அமையா யாழின்; நிறைநின்ற
பெண்நன்று பீடிலா மாந்தரின்;—பண்அழிந்
தார்தலின் நன்று பசித்தல்; பசைந்தாரின்
தீர்தலில் தீப்புகுதல் நன்று. 4

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை;—பெய்த
கலன்சிதைக்கும் பாலின் சுவையை; குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின். 5

அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்;
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலும் குற்றம்;
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்;
கொலைப்பாலும் குற்றமே ஆம். 6

கண்டதே செய்பவாம் கம்மியர்; உண்டெனக்
கேட்டதே செய்ப புலனாள்வார்;—வேட்ட
இனியவே செய்ப அமைந்தார்; முனியாதார்
முன்னிய செய்யுந் திரு. 7

கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்;
வைத்தாரின் நல்லர் வறியவர்;—பைத்தெழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர்; செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 8

மகன்உரைக்கும் தந்தை நலத்தை; ஒருவன்
முகன்உரைக்கும் உண்ணின்ற வேட்கை;—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கான் உரைக்கும்; நிலத்தியல்பு
வானம் உரைத்து விடும். 9

ஒருவன் அறிவானும் எல்லாம்; யாதொன்றும்
ஒருவன் அறியா தவனும்;—ஒருவன்
குணன்அடங்கக் குற்ற முளானும்; ஒருவன்
கணன்அடங்கக் கற்றானும் இல்

—விளம்பிநாகனார்

VI

குசேலோபாக்கியானம்

சுசீலை அறிக்கை

அந்தணன் உரைத்த மாற்றம் அனைத்தும்அஞ் செவியில் ஏற்று
நந்தலில் உண்மை ஈதென் றுணர்ந்துந்தான் நயந்து பெற்ற
மைந்தர்பால் வைத்த ஆசை மயக்கரு ளாகிப் பின்னும்
புந்தியின் விரும்பிப் பாதம் போற்றிநின் றிதனைக் கூறும். 1

வேறு

கலைமுழு தோர்ந்து கரிசெலாம் அறுத்த
காந்தனே பருமணி யரவத்
தலைகிடந் திமைக்கும் தாத்திரி யதனிற்
சாற்றரும் தக்கநன் முயற்சி
உலைவறப் புரியா ஒருவனுக் கெங்ஙன்
உற்றிடும் செல்வநன் னிலத்தை
நிலைபெற வுழுது வித்திலான் தனக்கு
நீள்பயன் உற்றிடும் கொல்லோ. 2

மானிடன் ஒருவன் தனக்கருஞ் செல்வம்
வாய்க்கவென் றனுதின முயற்சி
தானுஞற் றுவனேல் கடவுளு மதனைத்
தந்தளிக் குறுமதா லன்றே
ஆனபேர் அறிஞர் திருவினை முயற்சி
ஆக்குமம் முயற்சியில் லாமை
ஈனமார் இன்மை புகுத்திடு மால்என்
றியாருநன் குணர்தர நவில்வார். 3

செயத்தகு முயற்சி செய்திடிற் செயிர்தீர்
செய்யவண் மணுளனு மிரங்கி
வியத்தக வேண்டு மியாவையும் அளிப்பன்
விளம்புறு முயற்சிசெய் யானேல்
நயத்தகு போகம் அளித்திடான் என்று
நானிலத் தறிஞர்நன் குரைப்பர்
உயத்தகு நெறிமா லடியுநல் என்றே
ஓர்ந்தமா தவப்பெருங் கடலே. 4

கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமும்
கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வம் அடைகுவ னேகொல்
அருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுடைக் கரத்தால் எடுத்துணு தெங்ஙன்
வீங்குவெம் பசிப்பிணி யொழிப்பன்?
உடல்பவம் தனக்கோர் ஆகர மாகும்
உடல்நனி வாட்டுமெய்த் தவத்தோய்! 5

முன்பொரு கராவால் மொய்வலி சிந்து
மும்மதக் கறையடிக் கயமும்
வன்புடைப் பொன்னன் புரிகொடு மையினுல்
மனமெலி பிரகலா தநனும்
அன்பிஞே டேத்தி யழைத்தலான் அன்றே
அலைகடல் வண்ணன்வங் தாண்டான்
என்பரா தலினுல் முயற்சிசெய் பவருக்
கெய்தரும் பொருளும்ஒன் றுளதோ? 6

கமலமே லவனைத் தோற்றிய வுந்திக்
கமலவெங் தொடரெனப் பகரும்
முமலவேர் [illegible]றுத்த முனிவர்வேண் டாமல்
எங்ஙனம் முயல்திரு அளிப்பன்?
விமலவே தியநீ யுளத்தின்வேண் டுவையேல்
வேண்டிய வேண்டியாங் களிக்கும்
அமலநால் வேதம் ஆறுசாத் திரநன்
காய்ந்தவர் தமிழ்ச்சிறந் தவனே! 7

முன்னரும் பற்பல முனிவரர் பன்னாள்
முயலரும் அருந்தவம் முயன்று
பன்னரும் பேறு மாதவன் அளிப்பப்
படைத்தனர் பவளவாய்ச் செங்கால்
அன்னவே றுயர்த்த நான்மறை முனிவன்
அனையநற் பெருந்தவர் ஏறே!
உன்னரும் செல்வம் அன்னமால் ஈய
உறிற்புகழ் அன்றிவே றிலையே. 8

அப்பரந் தாமன் இணையடி யன்றி
ஆதர விலையென அறிந்தாய்
செப்பரும் ஆசை பொய்கொடுஞ் சீற்றம்
செற்றுளாய் எனினும்விண் ஆளும்
நப்புரந் தரனா தியர்தொழும் அன்னான்
நண்ணுறும் துவாரகை யணுகி
ஒப்பில்பல் வளனும் தருதியென் றிரக்கில்
உறுங்கொலோ தாழ்வதில் உணர்ந்தோய்! 9

மாசறு கற்பின் மடவரல் தனக்கு
வகுக்கரும் கொழுநனே உலகம்
ஆசறத் துதிக்கும் கடவுளாம் என்று
அரியநான் மறைசொலும் அதனால்
பாசமுற் றிரியப் பலகலை யொருங்கு
பளகறத் தேர்ந்தநீ எனக்குப்
பேசருங் கடவுள் ஆம்எளி யேனைப்
பெட்பொடு புரத்தல்நின் கடனே. 10

மடமையேன் தனக்குக் கடவுளும் நீயே
வகுக்கரும் இறைவனும் நீயே
அடலுறு தானம் தவமுதல் யாவும்
ஆற்றுநின் பணிவிடை யன்றோ?
மடலவிழ் துளப மாலிகை புனைந்த
வாசுதே வன்பத மலரைத்
திடமுற நெஞ்சத் துன்னிவல் வினையைச்
சிதர்தரச் செகுத்துமா மறையோய்? 11

வெண்டிரை வீசும் கருங்கடற் புடவி
விண்ணகம் பாதலம் இவற்றுள்
மண்டிய உயிர்கள் எவற்றையும் கமலை
மார்பினன் புரப்பனே யெனினும்
அண்டர்கள் புகழும் ஐயநீ யுயிர்த்த
அரியமக் களையுமென் றனையும்
பண்டைநூற் கியையப் பாதுகாத் தளித்தல்
பகருநின் கடனெனப் பகர்ந்தாள். 12

—வல்லூர், தேவராசபிள்ளை

VII

குறத்திப் பாட்டு

பொதியமலை

திங்கண்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே. 1

வேறு

கன்ன மதம்பெய் துறங்குகொலைக் களிறு கிடந்து பிளிறுமலை
தென்னந்தமிழும் பசுங்குழவித் தென்றற்கொழுந்துந் திளைக்குமலை
அன்னம் பயிலும் பொழிற்கூட லறலங் கூந்தற் பிடியாண்ட
பொன்னங்குடுமித் தடஞ்சாரற் பொதியமலையென் மலையம்மே. 2

வேறு

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடு மொருபாற்
சினப்புலியு மடப்பிணையுந் திளைத்திடுமங் கொருபால்
வெங்கரடி மரையினெடும் விளையாடு மொருபால்
விடவரவு மடமயிலும் விருந்தயரு மொருபால்
அங்கணமர் நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவுங் கும்பமுனி பயிலுந்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கண்மலை யம்மே 3

குறக்குடிக்கடுத்த வியல்பு

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையு மரவுரியு மிசைந்திடவே யுடுப்போம்
செழுந்தினையு நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகானில் விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த வியல்பிதுகாண் அம்மே. 4

குறவர் குறிச்சி

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை யிணங்கும்
புதுத்தினைகல் லுரற்பாறை முன்றிற்றெறு முணங்கும்
கல்விடரில் வரிவேங்கை கடமானோ டுறங்கும்
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந் திறங்கும்
சில்வலையும் பல்வாரு முன்னிறப்பிற் றூங்கும்
சிறுதுடியும் பெருமுரசுந் திசைதொறுநின் றேங்கும்
கொல்லையின்மான் பிணையுமிளம் பிடியும்விளை யாடும்
குறிச்சியெங்கள் குறச்சாதி குடியிருப்ப தம்மே. 5

—குமரகுருபர சுவாமிகள்

VIII

தனிச் செய்யுட்டிரட்டு

அந்தகக் கவிவீரராகவ முதலியார்
யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த பரராசசிங்க ராசன்மீது
வண்ணம் பாடியபோது

அவ்வரசன் பாடியது

விரகமுத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒக்கக் கூடினல்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே. 1

அரசன் மனைவி பாடியது

போத வழகன் கவிவீர ராகவன் போற்றுகவி
யோதையைக் கேட்டுக்கொண் டாடாத பேரில்லை யோங்குபுவி
மாதை யெடுக்கும் வலன்முடிச் சேட மகிபற்கன்றே
காதை வகுத்திலன் வேதா சிரகம்பங் காண்பதற்கே. 2

அந்தகக் கவிவீரராகவ முதலியார்மீது பரராசசிங்க ராசன் பாடிய கையறுநிலை

முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும்வான் மீகனுமுன்
முன்னில் லாமற்
றென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்துஞ்
சென்று சேர்ந்தார்
இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவிவீர
ராக வா!நீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெயப் போயினையோ
புகலு வாயே. 3

கட்டுச் சோற்றைப் பறிகொடுத்தபோது கவிவீரராகவ முதலியார் பாடியது

சீராடை யற்ற வைரவன் வாகனம் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே. 4

கயத்தாற்று ராசர் பாடிய கையறுநிலை

இன்னமுதப் பாமாரி இவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுல கிற்போய்ப் புகுந்ததால்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்னடிமேற் சூட்டும்
கவிவீர ராகவமே கம். 5

தோற்று தொளித்திருந்த தூலக் கவிகளெல்லா
மேற்று றகையின் விளங்கியவே—யேற்றுலுங்
கன்னுவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னுருஞ் செங்கதிரோன் போய். 6

IX

தேவதாசன் பாம்பினுற் கடியுண்டிறத்தல்

அரிச்சந்திரபுராணம்—மயானகாண்டம்

மைந்தனும் சிருரோ டேகி வனந்தனில் விறகு கட்டித்
தந்திடு வழியி னோர்பாற் றருப்பைகண் டிதுவிட் டேகில்
அந்தணன் முனிவா னென்னு வஞ்சியோர் வடத்தி னீழல்
இந்தன மிறக்கி யப்பு லிருந்திடு புதர்க்கட் சென்ருன். 1

பறித்தனன் குசையைப் பற்றிப் பறித்தலு முனிவ னேவக்
குறித்துவந் ததனுட் டங்குங் கோளராச் சீறி யோங்கித்
தெறித்தழல் விழியாற் சிந்தத் தீண்டிற்றுத் தீண்ட லோடும்
வெறித்தெழுந் தலறி யோடி வெருவியே தரையில் வீழ்ந்தான். 2

வடத்தின்கீ ழிருந்த தோழர் மறுகிப்போய் வள்ளல் வீழ்ந்த
இடத்தினை யணுகி யையோ வென்னுற்ற துரையா யென்னப்
படத்தினுற் பெரிய நாகங் கடித்தது பாரு மென்று
விடத்தினு லறிவு சோர்ந்தான் விட்டுயி ரடங்கிற் றன்றே. 3

ஆவிபோ யகன்ற பின்ன ரனைவரும் புரட்டிப் பார்த்துப்
பாவியூ ழென்னே யிந்தப் பாலக னிறந்தா னென்னு
மேவியவ் வடத்தின் கீழ்வந் தவரவர் விறகு கொண்டு
காவியங் கழனி சூழுங் காசியம் பதியிற் புக்கார். 4

பாலர்வந் தூரிற் புக்கார் பானுவுங் கடலிற் புக்கான்
மாலைவந் திறுத்த பின்னர் வழியினை நோக்கி யன்னை
பாலன்வந் திலனென் றேங்கிப் பரதவித் திருகண் டாரை
காலநொந் துருகி வாயிற் கடைத்தலை வந்து பார்த்தாள். 5

வணங்கிய கரத்தாள் சால வாடிய முகத்தாள் மக்காள்
இணங்கியும் முடனே வந்த வென்மக னெங்கே யென்ருள்
மணங்கமழ் குழலா யுன்றன் மைந்தனை யரவு தீண்டி
உணங்கியே யிறந்தா னென்ரு ருயிர்த்திலண் மறுகி வீழ்ந்தாள். 6

மடத்தகை வல்லி பின்னு மைந்தரை நோக்கி யெந்த
இடத்திலே யிறந்தா னென்ன யாம்வரு வழியி னிற்கும்
வடத்தினுக் கயலே சற்றே வடக்கினிற் குசைப டர்ந்த
தடத்தினிற் றெற்கே யென்று சாற்றியே யவர்கள் போனுர். 7

அறுதியீ தென்று சால வறிவழிந் துருகி வீழ்ந்து
மறுகினா ளுடையோற் கஞ்சி வாய்திறந் தரற்றாண் மாழ்கிச்
சிறுதொழின் முழுதுஞ் செய்து தீர்ந்தபின் றேடிச் சேறல்
உறுதியென் றுளத்தி னுள்ளே யொடுக்கிவந் தகத்திற் புக்காள் 8

முறைமுறை பணிக ளெல்லாஞ் செய்தற முடித்துப் பின்னர்
மறையவன் தன்னை யேத்தி வாய்புதைத் தழுது விம்மி
இறைவகே ளரவந் தீண்டி யென்மக னிறந்தான் யானச்
சிறையிலே சேறற் குன்றன் றிருவுள மறியே னென்றாள். 9

சினக்கடுஞ் சொல்லாற் சீறித் திடுக்கிட வுரப்பி வீணில்
எனக்குறு குறையே யன்றி யென்பொருட் கழிவு வந்தால்
உனக்குறு குறைதா னுண்டோ வுறுவிலைப் பட்ட பையல்
தனக்கொரு தாயு முண்டோ தவிர்கநீ போவ தென்றான். 10

அடிமையே னெனினு மையா வந்தரத் திறந்தா னென்றால்
கொடியனேன் றனக்குப் பெற்ற வயிறுதான் கொதித்தி டாதோ
படியின்மே லிறந்தான் றன்னைப் பார்த்தெடுத் தடக்கிக் கங்குல்
விடியுமுன் வருவே னல்கு விடையெனத் தொழுது வீழ்ந்தாள். 11

மாலையங் குழலாள் கூற மறையவன் மனம்பொ ருந்தி
வேலைகண் மிகவு முண்டு விடியுமுன் வருவா யாகில்
நீலவேல் விழியா யேகு நீயென வொருகாற் சொன்ன
காலையே யெழுந்தி ருந்து கடிநகர் கடந்து போனாள். 12

பாவியேன் மகனே யென்பள் பதைப்பள்மென் முகத்தின் மோதித்
தாவியே விழுவ ளின்று தயங்கியே மயங்கி வீழ்வள்
காவியங் கண்ணீர் பாயக் கதறுவள் பதறி யேங்கி
ஆவியைத் தேடித் தேடி யலமரு முடல மொத்தாள். 13

ஆறெலா மடிகள் வைத்த வடியெலாம் விழிநீர் நின்ற
தூறெலா மரிவை சென்ற சுவடெலாங் குருதி தொட்ட
மாறெலாங் கூந்த றுன்று வனமெலாந் துணிகள் யார்க்குந்
தேறலாந் தகைமைத் தன்றிச் செடியெலாந் தேடிச் சென்றாள். 14

ஓடினா ளுள்ள மெல்லா முருகினாள் கருகி மேனி
வாடினாள் விறகு வைத்த வடத்தினுக் கருகே வந்தாள்
நாடினாள் கழுகும் பேயும் நரிகளுங் குறளுந் துன்றிக்
கூடிய குழுவி னுப்பண் குமரனைச் சென்று கண்டாள். 15

கண்டனள் கதறி வீழ்ந்தாள் கழுகெலா மிரியல் போகக்
கொண்டதோர் மகவி னுசை யாவியைக் கொள்ளை கொள்ள
முண்டகக் கரத்தா லேந்தி முருகனை மடிமேல் வைத்தே
அண்டரு மறுகி யேங்க வாய்திறந் தரற்ற லுற்றாள். 16

— ஆசுகவிராஜர்

X

படிக்காசுப் புலவருடைய தமிழ்ப்பாட லருமையை வியந்து ஒரு புலவர் பாடியது

மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்கும் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினிட நளினந் தானே. 1

திருமலைநாயகன் தம்மைச் சிறைப்படுத்தி வைத்திருந்த காலத்தில் ஒருநாள் படிக்காசுப் புலவர் சொல்லியது

நாட்டிற் சிறந்த திருமலை யாநல்ல நாகரிகா
காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னுமொர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்துவைத் தாயிரை தாவென்று கூப்பிடுதே. 2

வைத்தியநாத தேசிகர் மாணுக்கரான படிக்காசுப்புலவர் தமது குருபுத்திரரான சதாசிவ தேசிகரைக் காணச் செம்மற்பட்டிக்காடு வழியாக வரும்போது சதாசிவருடைய மாணுக்கர் தூதுளங்காய் பறித்துக்கொண்டே யாப்பருங்கலக் காரிகையைப் பாராயணஞ் செய்திருந்ததைக் கேட்டு வியப்புற்றுப் பாடியது.

கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் தந்தைதன்னல்
பாடும் புலவர்க ளானேமின் றிச்செம்மற் பட்டியெங்கும்
காடுஞ் செடியுமென் னேதமிழ்க் காரிகை கற்பதுவே. 3

XI

தண்டலையார் சதகம்

பணம் பந்தியிலே குலம் குப்பையிலே

பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம்
பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா தவர்பிணமாம்
பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்குந் தண்டலைநீ ணெறியாரே
பார்மீ திற்றுன்
பணந்தானே பந்தியிலே குலந்தானே குப்பையிலே
படுக்குந் தானே. 1

பனங்காட்டு நரிதானுஞ் சலசலப்புக் கஞ்சாது

புனங்காட்டு மண்ணும்விண்ணு மஞ்சவருங் காலனையும்
போடா வென்றே
யினங்காட்டு மார்க்கண்டன் கடிந்துபதி னுறுவய
தென்றும் பெற்றுன்
அனங்காட்டுந் தண்டலையா ரடியரெல் லாமொருவர்க்
கஞ்சு வாரோ
பனங்காட்டு நரிதானுஞ் சலசலப்புக் கொருநாளும்
பயப்ப டாதே. 2

அன்னநடை நடக்கப்போய்க் காகம் தன்னடையும் இழந்ததுபோல்

பன்னகவே ணிப்பரமர் தண்டலையார் நாட்டிலுள
பலருங் கேளீர்
தன்னறிவு தன்னினைவு தன்மகிமைக் கேற்றநடை
தகுமே யல்லாற்
சின்னவரும் பெரியவர்போ லேநடந்தா லுள்ளதுபோஞ்
சிறிய காக
மன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங் கெட்டவகை
யாகுந் தானே. 3

தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்

மண்ணுலகிற் பிறர்குடியை வஞ்சனையிற் கெடுப்பதற்கு
மனதி னாலே
யுன்னிடினு முரைத்திடினு மவன்றானே கெடுவனென்ப
துண்மை யன்றோ
தென்னவன்சோ ழன்பணியுந் தண்டலைநீ ணெறியாரே
தெரிந்து செய்யுந்
தன்வினைதன் னைச்சுடவோட் டப்பம்வீட் டைச்சுடவுந்
தான்கண் டோமே. 4

சிவபூசை பண்ணும் வேளையிலே
கரடியை விட்டேவினது போலிருக்கிறது

நேசமுடன் சபையில்வந்தால் வேளையறிந் திங்கிதமா
நிருபர் முன்னே
பேசுவதே உசிதமல்லா னடுவிலொரு வன்குழறிப்
பேச லெல்லாம்
வாசமிகுந் தண்டலைநீ ணெறியாரே யபிடேக
மலிநீ ராட்டிப்
பூசைபண்ணும் வேளையிலே கரடியைவிட் டோட்டுவது
போலுந் தானே. 5

—படிக்காசுப் புலவர்

XII

நீதிநெறி விளக்கம்

கல்வி

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்!
பிற்பயக்கும் பீழை பெரிது. 2

புலவர் சிறப்பு

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 3

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 4

உலகவியல்பு

எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம்—மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். 5

தன்குறையுணர்தல்

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால். 6

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெலாம்
எற்றே யிவர்க்குநா மென்று 7

தாழ்மை

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 8

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மென்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. 9

மொழியியல்பு

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும் 10

நல்லோரியல்பு

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காத்து—மெய்யில்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல். 11

நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிச்
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். 12

ஞானிகள் செயல்

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி—எவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென. 13

மெய்யுணர்ந்தார் பொய்மேற்புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து. 14

XIII

வினோத கவிகள்

சத்திமுற்றப்புலவர் மதுரைக்குப் போகப்
பாண்டியன் வாசற்காவலர் வாசல் விடாமல் மறிக்க
ஊரில் அம்பலத்திற் கிடந்து பாடியது

நாராய் நாராய் செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியும்
தென்றிசைக் குமரி ஆடி வடதிசைக்
காவிரி யாட ஏகுவி ராயினெஞ்
சத்திமுற் றத்து வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇ
அலகுதிர்ந் தன்ன பல்லின ளாகிப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்" எனுமே. 1

நகரி சோதனையிற் சென்ற மன்னன் இதனைச் செவியுற்று, மறுநாள் புலவரை வரிசைபண்ணி, ஆள்விட்டு வீடுங் கட்டுவித்துப் பின்னர் அனுப்பினான். வீட்டையும் பொருள் மிகுதியையுங் கண்ட புலவர் பாடிய செய்யுள்:

வெறும்புற் கையுமரி தாங்கிள்ளை சோருமென் வீட்டில்வரும்
எறும்புக்கும் ஆற்பத மில்லைமுன் னாளென் இருங்கலியாம்
குறும்பைத் தவிர்த்த குடிதாங்கி யைச்சென்று கூடியபின்
தெறும்புற்கொள் யானை கவளங்கொள் ளாமற் றெவிட்டியதே. 2

பாண்டியன் நீர் நல்ல புலவர் என்றபோது
போய்யாமொழிப் புலவர் பாடியது

அறமுரைத் தானும் புலவன் ; முப்பாலின்
திறமுரைத் தானும் புலவன் ;—குறுமுனி
தானும் புலவன் ; தரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனில். 3

மதுரகவிராயர்

திருநிறையூர்க் காளத்தி வாண முதலியாரிடம் பரிசு பெறுமாறு போகையில் வழியில் ஒரு சத்திரத்திலே படுத்திருக்கும்போது பசிவந்திடப் புலவர் தமது தரித்திரத்தை முன்னிலைப்படுத்திச் சொல்லியது.

நீளத் திரிந்துழன் ருய் நீங்கா நிழற்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு. 4

வசனப் பகுதி

1. கல்வி

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்வியெனினும் வித்தையெனினும் பொருந்தும். கற்றற்குரிய நூல்களாவன; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அந் நூல்களை அறிதற்குக் கருவிகளாகிய நிகண்டு, இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமாம். அறமெனினும், தருமமெனினும் பொருந்தும். வீடெனினும், முத்தியெனினும், மோக்ஷமெனினும் பொருந்தும்.

செல்வப்பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்னும் இவர்களாலே கொள்ளப்படும்; கல்விப் பொருளோ ஒருவராலுங் கொள்ளப்படமாட்டாது. செல்வப்பொருள் வெள்ளத்தாலாயினும், அக்கினியாலாயினும் அழியும்; கல்விப்பொருளோ ஒன்றாலும் அழியமாட்டாது. செல்வப்பொருள் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைந்து கொண்டே வரும்; கல்விப்பொருளோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக்கொண்டே வரும். செல்வப்பொருள் சம்பாதித்தல், காப்பாற்றல், இழத்தல் என்னும் இவைகளாலே துன்பஞ்செய்து, பலரையும் பகையாக்கும். கல்விப் பொருளுடையவர், இம்மையிலே சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், பின்னே தருமத்தையும் முத்தியையும் அடைதலாலும் இடையறாத இன்பத்தை அனுபவிப்பர். இப் பெரியவரைச் சேர்ந்து அறியாதவைகளை யெல்லாம் அறிந்தோம் என்று உலகத்தார் பலரும் அவரிடத்து அன்புடையராவர். ஆதலினாலே, செல்வப் பொருளிலும் கல்விப் பொருளே சிறப்புடையது.

உயர்குலமும், அழகும், செல்வமும் உடையவராயினும், கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமமாவர். இராசாக்களுக்கு அவர் தேசத்தில் மாத்திரம் சிறப்புண்டாம். கற்றறிந்தவருக்கு அவர் சென்ற சென்ற தேசங்களிலெல்லாம் சிறப்புண்டாகும். ஆதலின் இராசாக்களினும் கற்றறிந்தவரே சிறப்புடையவர். ஆதலினுல் யாவரும் கல்வியைச் சிறிதும் அவமதியாது வருந்திக் கற்றல் வேண்டும்.

அழுக்குப் படியாத சீலையிலே சாயம் நன்ருகப் பிடிக்கும் ; அழுக்குப் படிந்த சீலையிலே சாயம் நன்ருகப் பிடிக்கமாட்டாது. சிறு பிராயத்திலே கற்ற கல்வி புத்தியிலே நன்ருகப் பதியும். புத்தி சமுசாரத்திலே விழுந்து வருத்தத்தை அடைந்துகொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்ருலும், கல்வி நன்ருகப் புத்தியிலே பதியமாட்டாது. ஆதலினுலன்ருே ஔவையார், ‘இளமையிற் கல்’ என்று அருளிச்செய்தார்.

கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். சந்தேகமாவது இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல். விபரீதமாவது ஒன்றை மற்ருென்ருகத் துணிதல். வியாதி வறுமைகள் இல்லாமையும், பொருள் இளமை முதலியவைகள் உண்மையும், கல்வி கற்றற்குச் சிறந்த கருவிகள். மிகச் சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே அருள் உண்டாகும்படி நடத்தல். ஆதலினுலே, கல்வி கற்கும் மாணுக்கர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபாடாவது : இன்சொற் சொல்லல், வணங்குதல், உற்றவிடத்துதவுதல் முதலாயின.

கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒருநாள் ஊக்கமாகவும், மற்ருெருநாள் சோம்பலாகவும் இராமல், எப்பொழுதும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்பக் கல்வியிலே பயிலல் வேண்டும். சோர்வு அடையாமல் நாடோறும் கிரமமாகச் சிறிதாயினும் நன்ருகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்

ளவராவர். தாம் அதிக சமத்தர் என்று நினைத்து ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார். மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல் போல, கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். ஆதலினால், கல்வியைச் சிறிது கற்ற மாத்திரத்தால் அமையாது மேன்மேலும் கற்றல் வேண்டும்.

தாங் கேட்ட பாடங்களை நாடோறும் போற்றலும் தாங்கேட்ட பொருள்களைப் பலதரமுஞ் சிந்தித்தலும், ஆசிரியரை அடுத்து அவைகளைக் குறைவுதீரக் கேட்டலும், ஒரு சாலை மாணாக்கர் பலருடனும் பலதரமும் பழகுதலும், தாம் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினவுதலும், அவர் வினவியவைகளுக்கு உத்தரங் கொடுத்தலும், தாம் கேட்டறிந்ததைப் பிறருக்கு அறிவித்தலும் ஆகிய இவைகளெல்லாம் கல்வி பயிலும் மாணாக்கருக்குக் கடன்களாம்.

நூல்களிலே சிலநாட் பழகினால் விவேகிகளாயினும், சிலவற்றில் வல்லராதலும் அரிது. பலநாட் பழகினால், மந்தர்களயினும் பலவற்றிலும் வல்லவராவர். நூற்பொருளை விரைவினாலே பார்த்தால், விவேகிகளாயினும், ஒன்றுந் தெரியாது. விரையாது அமைவுடனே பார்த்தால், மந்தர்களாயினும், கருகாது தெரியும்.

பெரும்பாலும் எல்லார்க்கும் கற்பதிற் கருத்திறங்கும்; கற்றதிற் கருத்து இறங்காது. அது நன்மையன்று. கருத்தைக் கற்பதிலே மட்டுப்படுத்தி, கற்றதிலே சிந்தாமல் இறக்கல்வேண்டும். வருந்திக் கற்ற நூலை மறக்கவிட்டு வேறு நூலைக் கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்துவிட்டு, வேறு பொருளை அரிப்பரித்துத் தேடல்போலும். பசி முதலிய வருத்தத்தாலாவது, அன்ன முதலியவற்றின்கண் அவாவினாலாவது, யாதாயினும் வேறொரு நிமித்தத்தாலாவது, கருத்து மயங்கினால் அப்பொழுது கல்வியிற் பழகுதலொழிந்து, அம்மயக்கந் தீர்ந்த பின்பு பழகல் வேண்டும்.

கல்வியுடையவர் தாங் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன்மாணுக்கர்களுக்குக் கல்விகற்பித்தலும், எல்லோருக்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம் மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். இவ்வியல்புடையவரே கல்வியாலாகிய பயனை அடைந்தவராவர். இம் மூன்று மில்லாவிடத்துக் கல்வியினாற் பயனில்லை.

சரீரசுகத்துக்கு ஏதுவாகிய அன்ன வஸ்திர முதலிய வற்றையும், ஆன்ம சுகத்துக்கு ஏதுவாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையேயாதலின், எல்லாத் தானங்களினும் வித்தியாதானமே சிறந்தது. ஒருவருக்கு அன்ன வஸ்திரங் கொடுத்தால், அவை அவருக்கு மாத்திரமே பயன்படும். பயன்படுவதும் சிறிதுபொழுதுமாத்திரமே. ஒருவிளக்கேற்றுதல், அவ்வொரு விளக்கிலே பல விளக்கும் அப் பலவிளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக எண்ணில்லாத விளக்கு ஏற்படுதற்கு ஏதுவாதல்போல; ஒருவருக்குக் கல்வி கற்பித்தல், அவ்வொருவரிடத்திலே பலரும், அப் பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக, எண்ணில்லாதவர் கல்வி கற்றுக்கொள்ளுதற்கு ஏதுவாகும். அவர் கற்ற கல்வியோ அப்பிறப்பினன்றி மற்றைப் பிறப்புக்களினும் சென்று சென்று உதவும். ஆதலின் வித்தியாதானத்துக்குச் சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை. தாங்கற்ற கல்வியை நன்மாணுக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சு மாமரமாவர்.

பயிற்சி :

1. சந்தேகமாவது யாது? ஐயமாவது யாது?
2. வித்தியாதானம் ஏன் சிறந்தது?
3. கல்வியிலே தேர்ச்சியடைதல் எங்ஙனம்?
4. 'கற்றவர்கள் அரசரினும் சிறப்புடையர்' ஏன்?
5. கல்வியுடையார் கடன்களெவை?

2. தமிழ்த்தாய்

" கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

—திருவிளையாடற்புராணம்.

தமிழராகிய நாம் நாடோறும் பேசிவரும் தாய்மொழி தமிழேயாகும். நாம் சிறு குழந்தையாய் இருந்தபோது நம் அன்னையின் தீம்பாலைப் பருகிப் பசிதீர்ந்து அவள் மடியில் மகிழ்ந்து கிடக்க அவள் நம்மைக் கொஞ்சி முத்தம் வைத்து நம்மைப் பாராட்டிப் பேசியது தமிழ் மொழியிலன்றோ? சிறு குழந்தையாய் இருந்த அந்தக் காலந்தொட்டு மறுபடியும் நாம் இந்த உலகை விட்டு அகன்று போகும் வரையில், நம் தாய் தந்தையரோடும், உடன் பிறந்தவரோடும், மனைவி மக்களோடும், நம் நாட்டி லுள்ளவரோடும் நாம் ஊடாடி யுறவாடிப் பேசுவதும் நமது அருமைத் தமிழிலன்றோ? இங்ஙனம் நமது உயிரோடும், உடம்போடுங் கலந்து, நமதறிவைத் தன்வண்ணமாக்கிக் கனுக்காணும் காலத்துக் கனவுலகில் உள்ளவரோடு நாம் பேசுகையில் அப் பேச்சோடும் உடன்வந்து நிற்பதாய்க் கிளர்ந்து விளங்குவது, நமது இனிய செந்தமிழ் மொழி யேயாய் இருத்தலின், நமதுயிர் இவ்வுலக வாழ்வைத் துறந்து மறுமையுலகிற் சென்று உலவும்போதும் நமக்கு உற்றதுணையாய் நம்மோடு உடன் வந்து நிற்பதூ தமிழ் மொழியேயாகு மென்பது தெளிவாய்ப் பெறப்படுகின்ற தன்றோ? இவ்வாறு இம்மை மறுமை யிரண்டிலும் நமது உயிர்க்கு உற்ற துணையாயிருந்து உதவுவது தமிழ்மொழி யொன்றுமே யாகையால், நடுவே நாம் கற்கும் ஆங்கிலம், ஆரியம் முதலான மொழிகள், அதுபோல் நமக்கெப்போ தும் உதவியுந் துணையுமாய் இருந்து பயன்படமாட்டா.

நமது வயிற்றுப் பிழைப்புக்காகவும், வேறுசில கார ணங்களுக்காகவும் ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலான

மற்ற மொழிகளை நாம் வருந்திக் கற்க வேண்டியது கட்டாயமாகத் தோன்றினும், இவற்றின் பொருட்டு நமது இனிய செந்தமிழை மறப்பதும், அதனைப் பயிற்சி செய்யாமற் கைவிட்டிருப்பதும், நமதுயிரையே நாம் அழிப்பதாய் முடியும். அழகுமிக்க செந்தாமரை மலரின் செந்நிறத்தையும், அதில் இயற்கையாய்க் கமழும் நறுமணத்தையும், அதில் துளும்பி வழியும் செழுந்தேனையும் அகற்றிவிட்டு, அவற்றிற்கு மாறாய் அதற்கு மஞ்சள் நிறத்தை விட்டுச் செங்கழுநீர் மணத்தைப் புகுத்திக் கற்கண்டின் நீரைச் சொரிந்து வைப்பேனென்று, ஒருவன் அதன் இயற்கையை மாற்றப் புகுந்தால், அது கைகூடாமல் அத்தாமரை மலர் அழிந்து போவதுபோல மற்றமொழிகளும், இனிய சொல்லும், உயர்ந்த பயனும் உடையனவாயிருந்தாலும், தமிழின் நிறமும், அதன் பொருளின் மணமும், அதன் சுவையின் தேனும் இயல்பாகப் பொருந்தப் பெற்ற நமதுயிரை அவ்வியற்கையினின்றும் மாற்றி, மற்ற மொழிகளின் தன்மையை அதற்கு ஏற்றினால், அது தன் தன்மையிழந்து அழிந்துபோகும். தமிழ்முதலான மொழிகளுள் ஒன்றையேனும், அல்லது இரண்டு மூன்றையேனும், தமது குழந்தைப் பருவந்தொட்டுப் பேசி வருபவர் தாம் பேசும் அவ் வியற்கை மொழிகளையே மேலும் மேலும் கற்றுத் தமது அறிவை வளம்படுத்தாமல், அவற்றைக் கைவிட்டு முற்றும் புதியனவான ஆங்கிலம், ஆரியம் முதலான மொழிகளையே பழகிவருவாராயினர். அவர் நீண்டநாள் உயிர் வாழார். இதனாலன்றோ, தமிழைக் கைவிட்டு ஆங்கிலம், ஆரியம் முதலியனவற்றையே கற்றுப் பழகும் நம் நாட்டவர், முப்பது அல்லது நாற்பது வயதுக்குட் பலவகை நோய்களாற் பீடிக்கப்பட்டு மாய்ந்து போகின்றனர்! தன்னியற்கையில் வலுப்பட்டு நில்லாத ஒரு தூணின்மேற் பெருஞ் சுமைகளை ஏற்றினால் அவற்றைத் தாங்காமல் அது முறிந்து விழுவதுபோலத் தமக்குரிய மொழியைக் கற்று, வலிவு பெறாத ஒருவனது அறிவின்மேல், வேறுமொழிகளை ஏற்றினால் அது பழுதுபட்டுப்போகின்றது. தாய்ப்பால் நிரம்ப உண்டு வளர்ந்த

பிள்ளை வயது முதிர முதிர அரிய பெரிய முயற்சிகளை யெல்லாம் எளிதிற் செய்து, நீண்டநாள் உயிர்வாழ்தல் போலத் தமிழ்ப்பால் உண்டு வளர்ந்தவர் எத்தகைய மொழிகளையும் வருத்தமின்றிக் கற்று நெடுநாள் உயிர் வாழ்ந்திருப்பர். தமிழோடு மற்ற மொழிகளையுங் கற்றவர் நீண்டகாலம் உயிர் பிழைத்திருந்தாலும், தமிழைவிட்டு அயல் மொழிகளைமாத்திரம் பயிலுகின்றவர் விரைவில் உயிர் மாளுதலும் அனுபவமாய் நிகழ்தலைக் காண்பவர்களுக்கு, நாம் கூறும் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

அறிவிற் சிறந்தவரான ஆங்கில நன்மக்கள் தமது இயற்கையில் உரிய ஆங்கில மொழியை நன்ருகக் கற்ற பிறகுதான் வேறு மொழிகளைக் கற்கிருர்கள்; தமது மொழியைக் கற்காது வேறு மொழிகளைச் சிறிதுங் கற்கவே மாட்டார்கள். இப்படிப்பட்ட உயர்ந்த பழக்கம் அவர்களிடத்திலே இருப்பதினுலேதான், அவர்கள் தமது மொழியில் நிகரற்ற புலமையுடையோராய் இருப்பதோடு, தாம் கற்கும் வேறு மொழிகளிலும் வல்லவராய்ச் சிறந்து விளங்கி நீண்டநாள் உயிர் வாழ்ந்து உலகத்திற்கு அளவிறந்த நன்மைகளையெல்லாம் விளைவித்து வருகிருர்கள். நம்மவர்களோ தமக்குரிய செந்தமிழ் மொழியைச் சிறிதுங் கல்லாமலும், சிறிது கற்ருலும் தமிழ்நூற் பயிற்சி நன்கு நிரம்பாமலும், வயிற்றுப் பிழைப்பிற்குரிய ஆங்கிலம் முதலான அயல் மொழிகளையே மிகுந்த பொருட்செலவு செய்து பல்லாண்டுகள் அல்லும் பகலும் உழைத்துக் கற்றுக்கொள்ளுகிருர்கள். கற்றுமென்! தமிழ்நாட்டிற்குரிய தென்னங் கன்றைப் பெயர்த்துக்கொண்டுபோய் பனி மிகுந்த ஆங்கில நாட்டில் வைத்தால், அது அங்கே வளராமல் அழிந்துபோவது போல் நமது செந்தமிழைவிட்டு மற்ற மொழிகளையே தங் காலமெல்லாங் கற்ற அவர், அதனுல் வலியிழந்து மெலிந்து விரைவில் உயிர் துறக்கின்றனர். ஐயோ! வயிற்றுப் பிழைப்புக்கென்றே முழுதுங் கற்ற மற்ற மொழி, அவரது பிழைப்புக்கே இடையூறு விளைத்துவருதலை நம்மவர் அறியாமல், வரவரத் தமது வாழ்வில் அருகிப்போவது நினைக்குந்தோறும்

நமதுள்ளத்தை நீராய் உருக்குகின்றது. இந் நிலைமையைச் சிறிதாயினுங் கருதிப் பார்ப்பவர்கள் நமது தமிழ்மொழிப் பயிற்சி நம் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத அரு மருந்தா மென்பதை உணராமற் போவரோ.

II

நமது தமிழ் மொழியானது நூற்றுமூன்று லட்சத்துத் தொண்ணூற்றையாயிரம் பெயர்களாற் பேசப்பட்டு வரு கின்றது. இவ்வளவு பெருந் தொகையாயுள்ள தமிழ் மக்கள் எல்லோரும் அறிவிலும், நாகரிகத்திலும் உயர்ந்து விளங்கவேண்டுமாயின், அவர்கள் தமக்குத் தெரிந்துள்ள தமிழ் மொழியின் வழியாகவே அங்ஙனம் ஆகவேண்டும். மிகுந்த பொருட் செலவும் காலக் கழிவும் வருத்தமுமின்றி அவர்களைக் கல்வியில் வல்லவராக்குதற்கு இசைவான இந்த எளிய முறையை விடுத்து, அவர்கட்குப் புதுமை யாக ஆங்கிலம், ஆரியம் முதலான மொழிகளைக் கற்பித்து அவர்களை உயர்த்தவேண்டுமென்று நினைப்பவர் ஒரு காலத்தும் தம் மெண்ணத்தை நிறைவேற்றமாட்டார். ஆதலால் நம் தமிழ் மக்களை உண்மையாகவே முன் னேற்ற வேண்டு மென்னும் எண்ணமுடையவர்கள், அவர்களுக்குரிய தமிழ்க் கல்வியின் வாயிலாகவே அதனைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். கற்ற மொழிகளில் நாடோறும் புதியனவாய் வெளிவரும் அரும் பொருள்களை யெல்லாம் தமிழில் மொழிபெயர்ப்பித்துக் கற்பிக்கத் தலைப்பட்டால், இப்போது பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆங்கில மொழியை மிக வருந்திக் கற்று ஒருவர் தெரிந்துகொள்ளும் பொருள்களெல்லாம், நமது செந்தமிழ் மொழியில் ஏழெட்டு ஆண்டுகளில் இன்னுஞ் செவ்வை யாய்க் கற்றுத் தேறலாம். ஆங்கிலம், ஆரியம் முதலிய மொழிகளில் அவர் எவ்வளவுதான் கற்றுத் தேறினும், தாம் அம் மொழிகளில் அறிந்த பொருள்களைத் தமிழ் தமிழ்மக்க ளெல்லோர்க்கும் புலப்படும்படி யெடுத்துச் சொல்லிப் பயன்படுத்தல் இயலாது. தமிழ் கற்றவரோ தாம் அறிந்தவைகளைத் தமிழ்மக்க ளெவர்க்கும் நன்கு

விளங்கும்படி யெடுத்துச் சொல்லிப் பெரிதும் பயன்படுவர். இதனுல் தமிழ்நாட்டவர் தமிழ் கற்பதொன்றே தமக்கும் பிறர்க்கும் பயன்படுதற்கு ஏதுவாம் என்க. இனி ஏழெட்டு நூற்ருண்டுகளாய்ப் புதிது முளைத்தெழுந்து, இப்போது ஆங்காங்கு வழங்கிவரும் பல்வேறு மொழிகளையும் போல்வ தன்று நமது தமிழ்மொழி. இஃது இன்ன காலத்திலேதான் தோன்றியதென்று எவராலும் கட்டுரைத்துச் சொல்ல முடியாத பழமை யுடையதாய், இத்தனை காலமாகியும் தனது இளமை சிறிதுங் குன்ருததாய் உலாவி வருகின் றது. தமிழைப் போலவே பழமை யுடையனவென்று சொல்லத்தக்க ஆரியம், கிரேக்கு, லத்தீன், ஈபுரு, அராபி, சீனம் முதலான பலதேய மொழிகளெல்லாம் இப்போது உலக வழக்கத்திலின்றி இறந்தொழிய, நம் செந்தமிழ் மொழி ஒன்றுமே எல்லாம்வல்ல இறைவனைப்போல் என்றும் இறவாத இளமைத்தன்மை வாய்ந்து இலங்கு கின்றது. இவ்வுண்மையை 'மனேன்மணீய'த்தில்,

> ''பல்லுலகும் பலவுயிரும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
> எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோற்
> கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
> ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
> சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே.''

என்ற தமிழ்த்தாய் வணக்கச் செய்யுளிலுங் கண்டு கொள்க.

பழமையில் இதனேடொத்த ஆரியம் முதலான மொழிகளெல்லாம் இறந்தொழியவும், இதுமட்டும் இன் னும் இளமையோடு விளங்குவது எதனுல் என்ருல், தமிழ் அல்லாத மற்ற மொழிகளில் எல்லாம் மக்களியற்கைக்கு மாருன உரத்த ஓசைகளும், பொருந்தாத இலக்கண முடிபுகளும் காணப்படுதலால், அவை வழங்குதற்கு எளி யனவாயில்லாமல் நாளடைவில் மாய்ந்துபோகத் தமிழில் இயல்பாற் பிறக்கும் அமைதியான இனிய ஒலிகளும்

மிகவும் பொருத்தமான இலக்கண முடிபுகளும் இயைந்து படித்தற்கு எளிதாயிருத்தலாற்ருன்: அங்ஙனம் இஃதின்னும் இளமை குன்ருமல் நடைபெறுகின்றதென்று உணர்ந்துகொள்க. க்ருதம், த்வரிதம், த்திருஷ்டி, ஸிருஷ்டி, ஹிருதயம் முதலான ஆரியச் சொற்களைச் சொல்லிப்பாருங்கள்; அவை பேச்சுக்கு எவ்வளவு வருத்தமாய் இயற்கைக்கு மாறுபட்டனவாய் இருக்கின்றன. இச் சொற்களையே தமிழ் வடிவாகத் திருத்திக் கிருதம், துரிதம், திட்டி, சிருட்டி, இதயம் என்று சொல்லிப்பாருங்கள்; அப்போது அவை பேசுதற்கு எவ்வளவு எளியனவாய் வருத்தமில்லாதனவா யிருக்கின்றன. இனி இவற்றிற்கு நேரான இழுது, விரைவு, பார்வை, படைப்பு, நெஞ்சம் முதலான தூய தமிழ்ச் சொற்களைச் சொல்லிப்பாருங்கள்; இவை அவற்றைக் காட்டிலும் சொல்லுதற்கு இன்னும் எத்தனை யிலகுவாய் இனியனவா யிருக்கின்றன. இனி, மொழியின் அமைப்பையும் உலக இயற்கைகளையும் திறம்பட விரித்துரைத்த தொல்காப்பியம் போன்ற மிகப் பழைய நூலை, நமது செந்தமிழிலன்றி வேறு மொழிகளிற் காணல் இயலுமோ? அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் முற்றும் எடுத்து விளக்கிய திருக்குறள், நாலடியார் போன்ற அருப்பொருள் நூல்களை நம் செந்தமிழ் மொழியன்றி வேறெம் மொழியேனும் உடையதாமோ? சிலப்பதிகாரம், மணிமேகலை யென்னும் பெரும் பழந்தமிழ்க் காப்பியங்களோடு ஒத்தவை எம் மொழியிலேனும் உளவோ? உலக வியற்கை பிறழாது பாடிய பத்துப்பாட்டு, கலித்தொகை முதலான பழைய தமிழ்ப்பாட்டுகளுக்கு நிகரானவை வேறெந்த மொழியிலேனும் எடுத்துக்காட்டல் இயலுமோ? திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை, தேவாரம், பெரியபுராணம் என்னுந் தெய்வத் தமிழ்நூல்கள், கன்னெஞ்சமுங் கரைந்துருகி எத்திறத்தவரும் இறைவன் அருட்பெருக்கில் அமிழ்ந்தி இன்பவுருவினராய் நிற்குமாறு செய்தல்போல, வேறு எந்த மொழியிலுள்ள எந்த நூலிலேனும் கண்டதுண்டோ? மக்கள் முடிவாய்த் தெரியவேண்டும் மெய்ப்

பொருள்களையெல்லாம் தெளித்துக்கூறி முடிவுகட்டி சிவ ஞானபோதம், சிவஞானசித்தி போன்ற மெய்ந்நூல்களும், அவற்றிற்கு மெய்யுரை விரித்த சிவஞானமுனிவர் நுண் ணுரை போன்ற உரைநூல்களும் தமிழிலன்றி வேறெந்த மொழியிலேனும் காணப்படுவதுண்டோ? இந் நூற் பொருள்களென்னுந் தீம்பாலே நமதுயிரெல்லாந் தித்திக்கக் குழைத்தூட்டும் நம் தமிழ்த்தாயை மறவாது பேணும் பெரும் பேற்றை, நந் தமிழ் மக்கள் எல்லாரும் பெற்றுச் சிறந்திடுவாராக.

பயிற்சி :

1. பிறமொழி இயல்புகளைத் தமிழிலே புகுத்துதல் எதைப்போன்றது ?
2. தமிழ்மொழியை ஏன் நாம் மிகவும் விரும்புதல் வேண்டும் ?
3. சமக்கிருதம் முதலிய மொழிகள் வழக்கொழிய தமிழ் வழக்கொழியாதிருத்தல் எங்ஙனம் கூடிற்று?
4. தமிழிற் காணப்படும் சில சிறந்த நூல்களின் பெயர் கள் கூறுக.

3. கண்ணகி கதை

சோழமண்டலத்திலே காவிரிப்பூம் பட்டினம் என் னும் நகரத்திலே மாநாய்கன் என்னும் பெயருடைய செட்டியொருவன் இருந்தான். அச் செட்டியின் மகளா கிய கண்ணகியென்பவள் பொற்பினால் இலக்குமி யென் றுங் கற்பினால் அருந்ததி யென்றுங் கண்டோரெல்லாங் கொண்டாடிக் கைகுவித்து வணங்கத்தக்க மிக்க மேன் மையும், நற்குண நற்செய்கைகளும் பெற்றவளாய்ச் சிறப் புற்று வளர்ந்து, பன்னிரண்டாம் வயசென்னும் பருவத்தை யடைந்தாள். இவளுக்குத் தேவந்தி என்னும் பிராமணப் பெண்ணும் பாங்கியாக விளங்கினாள்.

அக்காலத்திலே அக் காவிரிப்பூம் பட்டினத்திலே பெருஞ் செல்வனும் பெருங் கொடையாளனுமாயிருந்த

மாசாத்துவன் என்னுஞ் செட்டிக்கு மகனுய் வந்த கோவலன் என்பவனும் அழகு, கல்வி, அறிவு, பொறை, ஆண்மை, கீர்த்தி முதலியவைகளிற் சிறந்து வளர்ந்து பதினாறும் வயசென்னும் பருவத்தை யடைந்தான்.

இப்படி வயசடைந்து யாவரும் மதிக்கும்படி இவர்கள் இருவரும் விளங்கு நாள்களிலே, இக் கண்ணகிக்கு நாயகனுதற்குத் தக்கவன் இக் கோவலனே யென்று தந்தையும் பிறரும் நிச்சயித்துப் பின் ஒரு மங்கள நாளிலே இவர்கள் இருவருக்கும் விவாகஞ் செய்து வைத்தார்கள்.

கண்ணகியும் கோவலன் மேலே அன்புடையவளாய்த் துறந்தார், வறியோர், சுற்றத்தார், விருந்தினர் முதலியவர்களையெல்லாம் பேணிப் பெரிது முபசரித்து மனையற நெறியைச் சிறிதும் வழுவாது நடத்தி வந்தாள். கோவலனும் கண்ணகிமேலே அளவில்லாத அன்புடையவனுய் அவளோ டளவளாவி,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா விசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையா னின்னை. — சிலப்பதிகாரம்

என்பன முதலியவாக அவள் நலங்களைப் பாராட்டி மகிழ்ந்து வாழ்ந்தான். இப்படியே இவ்விருவருங் கலந்து வாழுநாள்களிலே சில வருடங்கள் சென்றன.

அந் நாள்களிலே ஆடல் பாடல்களிலும் அரங்கேறி அழகிலுஞ் சிறந்தவளாய் அவ்வூரிலிருந்த நாடகக் கணிகையாகிய மாதவியென்பவளிடத்திலே கோவலன் காதல் கொண்டு தன் பொருள்களையெல்லாம் நாளுக்குநாள் அவளுக்கே கொடுத்துச் சிலநாள் அவளோடிருந்து பின்னர் அவளையும் விடுத்து, வீட்டில்வந்து தன் பிரிவினுல்

வாட்டமுற்றிருந்த கண்ணகியைக் கண்டு, "பெண்ணே! பொய்யெல்லாம் மெய்யாகப் பொருந்தும். பரத்தைக்குப் பொருளெல்லாங் கொடுத்து மிக வறியவனாய்விட்டேன்" என்றுசொல்லி இரங்கினான்.

அதுகேட்ட கண்ணகியும் இவன் மாதவிக்குப் பின்னுங் கொடுக்க விரும்பி இப்படி இரங்குகின்றானென்றெண்ணி, "இன்னும் இரண்டு சிலம்புகள் என்பாலுள்ளன; அவைகளையுந் தருகிறேன் ஏற்றுக்கொள்ளுக" என்றாள். கோவலனும் கண்ணகியை நோக்கிப் "பெண்ணே! இச் சிலம்புகளை மதுரையிற் கொண்டுபோய் அங்கே விற்று வாங்கும் பொருளை முதலாகக்கொண்டு வாணிகஞ் செய்து, பரத்தையோடோடிப் பாழாக்கிய பொருள்களையெல்லாம் இப்போது தேடிக்கொள்ள எண்ணுகின்றேன்; என்னோடு கூட நீயும் வா" என்றான். கண்ணகியும் வருகிறேன் என உடன்பட்டாள்.

பின்னர் இருவரும் அன்றிரவிற்றானே விடியற்சாமத்திலெழும்பி வெளியிற் புறப்பட்டு மேற்குத் திசையை நோக்கிக் காவேரியின் வடகரையாக வழிக்கொண்டுபோய் ஒரு காததூரஞ் சென்று சோலையொன்றெதிர்ப்படக் கண்டு சற்றே இளைப்பாறக் கருதி அச் சோலையினுள்ளே போய்க் கவுந்தியென்னும் தவப்பெண்ணைக் கண்டு வணங்கினார்கள். கவுந்தியுங் கண்ணகி கோவலன் என்னும் அவ்விருவரையும் உற்றுநோக்கி, "நீவிரோ குடிப்பிறப்பும் ஒழுக்கமும் பிறவுங் குறைவற்ற சிறப்புடையோர் போலக் காணப்படுகின்றீர்! இடுக்கண்ணுடையவர்போல இங்கே வந்த காரணம் யாதோ?" என்று வினவினாள். கோவலன் வேறொன்றுங் கூறாய், "திரவியந் தேடுதற்கெண்ணித் தெற்கேயுள்ள மதுரைக்குச் செல்கிறேன்" என்பது மாத்திரஞ் சொன்னான். அதுகேட்ட கவுந்தியும், "அறிஞரிடத்திலே அறநூற் கேள்விகளைக் கேட்டறிதற்கும், அறிவனைத் தொழுதற்குமாக மதுரைக்குப் போக எண்ணியிருக்கிறேன். ஆதலால் யானும் வருகிறேன்" என்றெழுந்தாள்.

பின்னர்க் கண்ணகி கோவலன் கவுந்தி என்னும் மூவரும் சேர்ந்து காவிரியாற்றின் தென்கரையிலே போய் அங்கேயுள்ள ஒரு சோலையிலே தங்கினார்கள். அப்பொழுது குட்டினியாயுள்ள ஒரு தூர்த்த மங்கையும் ஒரு தூர்த்த நாயகனும் அங்கே வந்து, கோவலனையும் கண்ணகியையும் பார்த்துக் "காமனு மிரதியும் போலக் கலப்புடையவராய் இங்கே யாவரோ இருவர் இருக்கின்றனர்! இவ்விருவரும் யாவர்!" என்று கவுந்தியை வினவினார்கள். அவர்களுக்குக் கவுந்தியும் "இவர்கள் என் மக்கள்! காமனு மிரதியுமல்லர்! மானுட சரீரமுடையவர்! வழி நடையால் வருந்தினர்! நீவிர் அவரை அணுகாமல் அப்பாற் செல்லுதிர்" என்றாள். அவர்களும் உடனே கவுந்தியை நோக்கி நூற்கேள்வி யுடையீர்! ஒருவயிற்றிலே பிறந்த இருவர் நாயகனும் நாயகனுமாகக் கூடிவாழுங் கொள்கை எங்கேயாவதுண்டோ?" என்று நகையாடினார்கள்.

அத் தீமொழியைக் கேட்டுச் செவிகளைப் பொத்திக் காதலன் முன்னர் கண்ணகி நடுங்க, நந் தலைவியாரை நிந்திப்பாரோ இவரென்று கவுந்தியுங் கோபித்து, "நீவிர் இருவரும் நரிகளாகக் கடவீர்" என்று சபித்தாள். அக் கணமே அவ்விருவரும் குறுநரிகளாய்க் குரல் காட்டினார்கள். அக் குரல் கேட்ட கோவலனும் கண்ணகியும் அஞ்சி நடு நடுங்கி அவர்கள்மேலே இரங்கி 'அறிவில்லார் பிறரை இகழுதல் அறிவின்மை' என்றும், 'அவ்விகழ்ச்சியைப் பொறுத்துக்கொள்ளுதல் அறிஞரா யுள்ளார்க்கெல்லாம் அழகாகும்' என்றுஞ் சொல்லி அவ் விருவருக்கும் சாப நிவிர்த்தியையும் கவுந்திவாயாற் சொல்லுவித்தார்கள்.

பின்னர் மூவரும் எழுந்து புறப்பட்டுப்போய் உறையூரை யடைந்து அங்கே ஒருநாளிருந்து மறுநாளெழுந்து சிறிதுதூரம் போய் ஒரு சோலையிலே இளைப்பாறியிருக்கும் போது பாண்டியன் கீர்த்திகளை யெல்லாம் பாடிக் கொண்டு பிராமணன் ஒருவன் அங்கே வந்தான். அவனோடு கலந்து பேசி மதுரைக்குப் போகும் வழிகளையும்

அவன் சொல்லக் கேட்டுக்கொண்டு சோலையை விடுத்து அப்பாற் போகும்போது பலரைக் கண்டு பேசியும், பல சிறப்புக்களைப் பார்த்தும், வழிகளை விசாரித்தும் காடுகளையும் ஊர்களையும் கடந்துபோய் வைகையாற்றையுங் கடந்து மதுரைநகர்க் கருகிலே முனிவர்கள் வசிக்கும் ஒரு மடத்திலே தங்கினார்கள்.

அற்றைநாட் கழிந்து மற்றையநாட் காலையிலே கோவலன் எழுந்து கவுந்தியைக் கைகுவித்து வணங்கி, "தவமுடையீர்! ஒழுக்கந் தவறினவர்போல என்னிருக்கையையுங் கைவிட்டு முன்னொருகாலும் அறியாத தேசங்களிலே வந்து அரிய வழிகளிலே நடந்து சிறுமை பெற்றேன். இந் நகரிற் போய் இடம் பார்த்து வரும்வரையும் இவளைக் காத்துக்கொள்ள வேண்டும்" என்றான். அவன் துயரினைக் கவுந்தியு மறிந்து மனமிரங்கி அவனை நோக்கி "நீ ஏன் வருந்துகின்றாய்? முன்செய்த தீவினை காரணமாக வருந் துயர்க்குப் பெரியோரும் வருந்துவரா! நாடும் நகரும் விட்டு மனைவியோடு காடும் பிறவும் புகுந்து திரிந்து வருந்தினவன் நீ ஒருவன் மாத்திரந் தானோ? அயோத்தி நகர்க் கரசனாயிருந்த ஸ்ரீராமசந்திரன் 'தந்தைசொன் மிக்க மந்திர மில்லை' என்றவாறே காதலியாகிய சீதையோடுங் காட்டிற்போய் அளவிறந்த துயர்களெல்லாம் அநுபவிக்கவில்லையா? நிடத தேச ராசனாயிருந்த நளனும் மனைவியோடுங் காட்டிற்போய்க் கணக்கில்லாத் துயர்களை அநுபவிக்கவில்லையா?" என்றிவ்வாறு சொல்லித் தேற்றக் கோவலனும் ஒருவாறு தேறிக் கண்ணகியையுங் கவுந்தியிடம் வைத்துவிட்டு மதுரை நகருள்ளே போய் இடமும் பார்த்துக்கொண்டு வந்தான்.

வந்தபின் அந்நகர்ச் சிறப்புக்களைக் கவுந்திக்குச் சொல்லிக்கொண்டிருக்கையில் அங்கே வந்த மாடலன் என்பவனாற் பல செய்திகளையு மறிந்தான். மாடலனுங் கவுந்தியும் துறவிகளாகிய முனிவர்களிருக்கும் இவ்விடத்திலே இல்லாச்சிரமிகளாகிய நீங்கள் இருக்கலாகாதென்று விலக்கினார்கள். அப்போது மாதரி என்னும் பேருடைய

ஓரிடைச்சியும் அங்கே வந்து சேர்ந்தாள். அவள் குணங்களையும் செயல்களையும் ஆராய்ந்து நன்கறிந்த கவுந்தி அவளுக்கே கோவலன் கண்ணகி என்னும் இருவர் பெருமைகளையும் எடுத்துக் கூறி அடைக்கலம் புகுவோரைப் பாதுகாப்போர் அடையும் பயனையும் அறிவித்துக் கண்ணகியைச் சிலநாள் வைத்துக் காக்கும்படி அவளிடத்தே அடைக்கலமாகக் கொடுத்தாள்.

மாதரி யென்பவளும் ஆதரவோடுங் கோவலன் கண்ணகி என்னும் இருவரையுந் தானிருக்கும் இடைச்சேரிக்குக் கூட்டிக்கொண்டுபோய் ஒரு புதுவீட்டிலே வைத்து, வேண்டிய உபசாரங்களுஞ் செய்து தன் மகளாகிய ஐயை யென்பவளையும் அக் கண்ணகிக்குத் தொண்டு செய்யும்படி வைத்தாள். இடைக்குலப் பெண்களும் மாதரி சொற்படியே கண்ணகிக்கு உண்டியமைத்தற்கு வேண்டுவன வெல்லாங் கொடுத்தார்கள். அவைகளைப் பெற்றுக் கண்ணகியுஞ் செவ்வே பாகஞ்செய்து உண்பிக்கக் கோவலனும் உண்டு மகிழ்ந்தபின், கண்ணகியை அருகிலே அழைத்துப் "பெண்ணே! எம்முடைய பெற்றோர் இவ்வரிய வழியிலே நீ வந்ததற் கிரங்கி யாது துயருற்றாரோ? நாம் இங்கே வந்தது மாயமோ? தீவினைப் பயனோ? நல்லொழுக்கந் தவறிய எனக்கு நற்கதியுமுண்டோ? உனக்குச் சிறுமை செய்தேனே!" என்று பலவாறு பரிந்து கூறி, "இனி நின் காற்சிலம்புகளுள்ளே ஒன்றைக் கொண்டுபோய் விற்றுவருகிறேன். யான் வரும்வரையுந் தனிமையால் வருந்தாதொழிக" என்று சொல்லி ஆறுதல் செய்து சிலம்பினையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டான்.

புறப்பட்டுப் பல தெருக்களையும் கடந்து மதுரைமாநகர்க் கடைத்தெருவிற் போனான். போகும்போது காலதூதன்போலத் தட்டானும் ஒருவன் வந்து தலைப்பட்டான். அத் தட்டானை அணுகி "அரசன் தேவிக்கே அணிகலமாகத்தக்க சிலம்பொன்று யான் வைத்திருக்கின்றேன்; இச்சிலம்பினை விலைமதித்தற்கு நின்னாலியலுமா?" என்று வினவிச் சிலம்பினையுங் காட்டினான். தட்டானும் சிலம்பி

லுள்ள சித்திரச் செய்கைகளை யெல்லாம் உற்று நோக்கி "இராசாவின் பெருந்தேவிக்குத்தான் இப் பெருவிலைச் சிலம்பு பொருத்தமாகும். இதனை யான் போய் அரசனுக்குத் தெரிவித்து வருகிறேன். அவ்வளவும் நீர் இவ்விடத்தே இருத்திர்" என்று சொல்லிச் சென்றான்.

செல்லும்போது, தான் முன்னரே அரசனை அறியாமல் அபகரித்து வைத்திருக்குஞ் சிலம்பு தன்னிட முள்ளதென்று வெளிப்படமுன், இச்சிலம்பையும் இவனையுங் காட்டிக் கொடுத்தால் அக் களவு தன்மேல் வாராது நீங்கி இவனையே சாருமென் றெண்ணி விரைந்துபோய்க் கோப்பெருந்தேவி கோயிலை நோக்கிக் காப்புடை வாயிலின் கடைபோய் நின்ற பாண்டியனைக் கண்டு பணிந்து "அரசனே, கன்னக் கோலில்லை, கவைக்கோலில்லை, சுவரிடிக்கவில்லை, சிலம்பு கவர்ந்த வகையை என்னென்று சொல்வேன்; மந்திரத் தாலே வாயிற் காவலரை மயக்கிக் கோயிற் புகுந்து சிலம் பினை ஒருவன் அபகரித்தான்; அக் கள்வனும் இங்கேதான் என் குடிலிலே இருக்கின்றான்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

அரசனோ இவ்வாறு விண்ணப்பஞ்செய்த தட்டான் தன்னரண்மனையிலுள்ள ஒருசிலம்பினை முன்னரே கவர்ந்து மறைத்து வைத்திருக்கும் ஒரு கள்வன் என்பதையும் ஆராய்ந்தறியவில்லை. அச் சிலம்பு வெளியாகி ஒருபோது தன்மேல் அரச தண்டம் வருமென் றஞ்சி அது வருமுன்னர் அதனை நீக்குதற் குபாயமாக இச் சிலம்பினையும் இவனையுங் கொண்டுவந்து பொருத்துகிறான் என்பதையும் ஆராய்ந் தறியவில்லை. ஒன்றுமாராயாமல் உடனே, "என் மனைவி சிலம்பு அக் கள்வனிட மிருக்குமாயின், இக்கணமே அவனைக் கொன்றுவிட்டுச் சிலம்பினை இங்கே கொண்டு வருக" என்று காவலாளர்க்குக் கட்டளையிட்டான். தட்டா னும் தன் கருத்து வாய்த்ததென்று மகிழ்ந்து காவலாளரை அழைத்துக்கொண்டு போய்க் கோவலனைக் காட்டினான். காவலாளருங் கோவலனை உற்றுப்பார்த்தபின், "இவன் கள்வன்போலக் காணப்படவில்லை; கொல்லப்படத்

தக்கவனுமல்லன்" என்ருர்கள். அவர்களைத் தட்டான் இகழ்ந்து நகைத்துக் கள்வர்கள் துணையாகக் கொள்ளும் மந்திரம், தெய்வம், மருந்து முதலிய கருவிகளின் வலிமைகளையும் பிறவற்றையும் எடுத்துக் கூறி இவன் கள்வன் தான் என்று சாதித்தான். அப்போது அவருள்ளே கொலைக்கஞ்சாதவன் ஒருவன் வாளினை வீசிக் கோவலன் தலையை வெட்டினுன்.

இவ்வாறு கோவலன் கொலைக்களத்திலே கொல்லப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட ஒரு பெண் ஓடிவந்து கண்ணகிக்கு முன்னே நின்று சொல்லவுமியலாதவளாய், மெல்ல மெல்ல இடைச்சிப் பெண்களுக்குச் சொல்லிப் பின்னர் "அரசன் மனைவியுடைய சிலம்பினை அபகரித்தானென்று காவலர்கள் கோவலனைக் கொன்ருர்களே!" என்ருள். என்றவுடனே கண்ணகியுந் துயரிலே மிகுந்தாள். தன்வசமிழந்தாள். பின்னர் எழுந்தாள். விழுந்தாள். "ஐயோ! என் கணவா! என் கணவா!" என்ருள். "எங்கே போயினை! எங்கே போயினை!! என்ருள். "ஆ" என்ருள். அழுதாள். புலம்பினுள். அடுத்த பெண்களை நோக்கினுள். "எல்லீருங் கேளுங்கள்! எல்லீருங் கேளுங்கள்!" என்ருள். அப்பாற் சூரியனை நோக்கினுள். "சூரிய தேவனே! நீ அறியாத காரியமுண்டோ? என் கணவன் கள்வனே? கள்வனே" என்ருள். அப்போது "நின் கணவன் கள்வனல்லன்; கள்வனென்ற இவ்வூர் எரிக்குணவாகும்" என ஒரு குரல் சூரியன் வாயாலே தோன்றிற்று.

கண்ணகி அதனையுங் கேட்டுக்கொண்டு மிக்க கோபதாபமுடையவளாய் மற்றச் சிலம்பினையும் எடுத்தாள். எடுத்தவுடனே புறப்பட்டு மதுரைமாநகர வீதியிற் போய்க் கற்புடை மகளிர்களையெல்லாம் பார்த்து, "பத்தினிப் பெண்டிர்காள்! என் காற்சிலம்புகளிரண்டுள்ளே ஒன்றினை இங்கே விற்கக் கொண்டுவந்த என் கணவன் கள்வன்தானே? பாருங்கள்! இது மற்றச் சிலம்பு. அரசன் மனைவியுடைய சிலம்பு திருடினுனென்று கொண்டுபோய் என் கணவனைக் கொன்ருர்களே. இஃதென்ன ஆச்சரியம்!

அந்தோ! படாத துயரெல்லாம் பட்டேனே! முன்போல என் கணவனை இன்னுங் காண்பேனோ?" என்று பல வாறு சொல்லி வருந்தி அழுதாள். இப்படியே அழுகின்ற கண்ணகியைக் கண்ட மதுரைமாநகரத்தார் எல்லாரும் அவள் படுந் துயரை ஆற்றும் வழி ஒன்றுங் காணுது தாமுமிரங்கி, "இப் பெண்ணுக்கு மரண பரியந்தம் நீங்காத பெருங் கவலையை உண்டாக்கி இவ் வரசன் அநியாயம் செய்துவிட்டான். சிலம்பொன்று கையிலே ஏந்திக்கொண்டு வந்து இங்கே நிற்பது ஒரு பெருந் தெய்வம். இதனுல் யாது சம்பவிக்குமோ அறியேம்" என்று சொல்லிப் பின் கொலைக் களத்திலே கிடந்த கோவலனைக் கண்ணகிக்குக் காட்டினுர்கள். கண்ணகியுங் கண்டு புலம்பி யழுது கையாலே கோவலனைத் தழுவக் கோவலனும் உயிர்பெற் றெழுந்து, "பெண்ணே நின்முகம் வாடியதே" என்று கண்ணீர் துடைத்துக் கண்ணகியை "இரு" என்று சொல்லி விண்ணுலகம் போயினுன்.

கோவலன் போதலைக் கண்ட கண்ணகி "இங்கே தோன்றிநின்றது யாதோ? மாயமோ? மற்ருெரு தெய் வமோ? ஒன்றுந் தெரியவில்லை. எங்கும் போய் என் கணவனைத் தேடுவேன். என் கோபந் தணிந்தபின் கூடு வேன். அரசனைக் கண்டு என் கணவனைக் கொன்ற காரணம் யாதென்று வினுவி என் கோபந் தணிவேன்" என்று சொல்லி அரசனைக் கண்டு கேட்கப் போனுள்.

இவையெல்லாம் இவ்வாறு நிகழப் பாண்டியன் மனைவியும் பற்பல தீக் கனவுகளைக் கண்டு பயந்து பாண் டியனுக்கு அவைகளைச் சொல்லிக்கொண்டிருந்தாள். அச் சமயத்திலே கண்ணகியும் போய் அரசனைக் கண்டாள். அரசனுங் கண்ணகியை நோக்கி, "பெண்ணே நீ யார்?" என்ருன். கண்ணகி அரசனை நோக்கி, "அரசனே! என் காற்சிலம்பொன்று விற்கும்படி இங்கே கொண்டுவந்து நின்பாலடைந்து கொலைத்தீர்ப்புற்ற கோவலனுக்கு நான் மனைவி; என்பெயர் கண்ணகி; என்னுூர் காவிரிப்பூம் பட்டினம்" என்று சொன்னுள். அரசன் கண்ணகியை

நோக்கி, "கள்வனையுள்ளோனைக் கொல்லுவித்தல் காவலராயுள்ளோர்க்குக் கடனையுள்ள நீதியன்றோ?" என்றான். கண்ணகி, கோவலன் கள்வனல்லவென்று சாதிக்கக் கருதித் தன் காற்சிலம்பின் உள்ளிடுமணி மாணிக்கமே என்ன, அரசன் தன் மனைவி சிலம்பின் உள்ளிடுமணி முத்தே என்ன, இருவரும் மாறாக வழக்காடிப் பின்னர்க் கண்ணகி சிலம்பினை உடைத்தபோது, உள்ளிட்டமணி மாணிக்கமாய்த் தெறித்தது. அதுகண்ட அரசன் அஞ்சி நடுநடுங்கி, "தட்டான் சொற்கேட்டுத் தவறு செய்த நானோ அரசன்! நானோ அரசன்! நானே கள்வன்! என்னுயிர் கெடுக" என்று சொல்லிச் சிங்காசனத்திற்றானே விழுந்திறந்தான்.

பின்னர்க் கண்ணகி, பாண்டியன் மனைவி பணிந்து வேண்டவுங் கோபந் தணியாளாய், "இங்குள்ளார் யாவருங் கேளுங்கள்! தேவருங் கேளுங்கள்! முனிவருங் கேளுங்கள்! என்பால் யாதொரு குற்றமுமில்லை. என் கணவனைக் கள்வனென்று கொல்லுவித்த இவ்வரசன் நகரியை இப்போ தழிக்கின்றேன் பாருங்கள்!" என்று சொல்லி வலது கையாலே தன் னிடது முலையைப் பிடுங்கி நகரியைச் சுற்றிவந்து வீதியிலே எறிந்தாள். எறிந்தபோது அக்கினிதேவனுந் தோன்றிக் கண்ணகி கட்டளைப்படி பார்ப்பார், அறவோர், பசு, மூத்தோர், பத்தினிப் பெண்டிர், குழந்தைகள் என்னும் இவர்களை எரியாது விட்டுத் தீங்குள்ளாரையும் அந் நகரியையும் எரித்தான்.

எரியும்போது மதுராபுரி என்னும் அதிதெய்வம் கண்ணகிமுன் சென்று கோவலன் இறத்தற்குங், காவலன் இறத்தற்கும், நகரியை எரித்தற்குங் காரணமாய் முன்னே நிகழ்ந்த செய்திகளையெல்லாம் விரித்துச் சொல்லிக் கண்ணகியின் கோபத்துடன் அக்கினியின் தாபத்தையும் தணிப்பித்துச் சென்றது. சென்றபின் கண்ணகி "நான் கணவனைக் கண்டபின்னன்றி இருக்கவுமாட்டேன், நிற்கவு மாட்டேன்" என்று சொல்லித் துர்க்கைகோயில் வாயிலிலே தன் வளையலையும் உடைத்தெறிந்துவிட்டு, மதுரா

புரியை நீங்கி வைகை யாற்றங்கரை வழியாக மேற்கே போய், மலைநாட்டுள்ள சுப்பிரமணிய ஸ்தலமாகிய திருச் செங்குன்றிலே நின்ற ஒரு வேங்கைமர நீழலையடைந்து, பதினான்குநாள் சென்றபின் அங்கே கோவலன் வரக் கண்டு, தேவர்கள் வாழ்த்தொலி கூற அவனோடு விமா னத்திலேறித் தேவுலகம் போயினாள்.

போதற்கு முன்னரே கண்ணகியைக் கண்டு நீவிர் யாவிரென்று கேட்டறிந்தவராய், அம் மலையினின்ற வேட்டு வர்கள் இவ்வாறு கண்ணகி செல்வதை எதிரே கண்டு பெரிதும் அதிசயமடைந்து, "நங் குலத்துக்கெல்லாம் இவள் போலத் தெய்வமில்லை! இவளைத் தெய்வமாகக் கொள் ளுங்கள்" என்று பலவுஞ் சொல்லிக் கைகோத்து விளை யாடலாகிய குரவைக்கூத்தும் விளையாடி, அந்நாட் டரச னாகிய செங்குட்டுவனுக்கும் இச் செய்தியை அதிசயத் தோடும் அறிவித்தார்கள். செங்குட்டுவனுங் கண்ணகி செய்தியை வேட்டுவர் வாயாற் கேட்டுப் பேரதிசய மடைந் திருந்தான். அப்போது மதுரைச்சங்கப் புலவருள் ஒருவ ராகிய சீத்தலைச்சாத்தனார் சென்று செங்குட்டுவனைக் கண்டு பணிந்து, கோவலன் சிலம்பு விற்க வந்தது முதலாக நடந்த சம்பவங்களை யெல்லாம் நன்றாக அவனறியும்படி விரித்துச் சொன்னார்.

இவைகளையெல்லாஞ் செங்குட்டுவனுங் கேட்டுச் சாத்தனாரையும் உபசரித்தான். அப்போது செங்குட்டுவன் மனைவி, "நம்முடைய நாடு தேடிவந்த பத்தினிக் கடவு ளாகிய கண்ணகியை நாம் தாபித்து வழிபடல்வேண்டும்" என்றாள். அதற்குச் செங்குட்டுவனும் சம்மதித்துக் கண் ணகியைப் பிரதிட்டை செய்யக் கருதிக் கோயில் கட்டு வித்து இமயமலையினின்றும் வருவித்த சிலையாலமைத்த விக்கிரகத்திலே பத்தினிக் கடவுளாகிய கண்ணகியைப் பிரதிட்டை செய்து, நித்தியபூசை முதலியன நியமமாக நடக்கும்படி கட்டளையிட்டான்.

கோவலன் கொலைக்களத்திறந்த செய்தியை மாடலன் போய்ச் சொல்லக்கேட்ட மாசாத்துவனாகிய கோவலன்

பிதாவும் மனமயங்கி உலகம் பொய்யென்று துறந்தான். மனைவியும் இறந்தாள். மற்றைத் தேவந்தியும், செவிலித் தாயும், அடித்தோழியும் மிகப்பெருந் துயரிலமிழ்ந்திக் கண்ணகியைக் காண்போமென்று கருதிக் காவிரிப்பூம் பட்டினத்தினின்றும் புறப்பட்டு வழிக்கொண்டு மதுரை மாநகரிற் போய், மதுரை எரிந்ததுங் கேட்டு மாதரி வீட்டிற் போய்க் கணணகியாகிய அடைக்கலப் பொருளை இழந்ததனல் மாதரி யிறந்ததையுங் கேட்டு, மாதரி மகளாகிய ஐயை என்பவளையும் அழைத்துக்கொண்டு வைகை யாற்றங்கரை வழியாக மலைநாட்டிற் போய்க் கண்ணகி கோயிலையுஞ் செங்குட்டுவனையுங் கண்டார்கள். செங்குட்டுவனுக்கு, தமக்குங் கண்ணகிக்குமுள்ள தொடர்புகளையுஞ் சொல்லிப் புலம்பினார்கள். அப்போது கண்ணகியுந் தெய்வ வடிவத்தோடும் வெளிப்பட்டுச் செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுத்து வாழ்த்தினாள். செங்குட்டுவனும் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு நித்தியபூசையுந் திருவிழாவுஞ் செய்யும்படி தேவந்திக்குச் சொல்லிக் கண்ணகியை மும்முறை வலம்வந்து வணங்கி நின்றான்.

அப்போது சிறையினின்றும் நீங்கிய ஆரியதேச வரசரும் பிறரும் அங்கே வந்து கணணகியை வணங்கி, "தேவி! இந் நாட்டிலே இச் செங்குட்டுவன்போல் எம் நாட்டிலே யாங்கள் செய்யும் வேள்வியிலும் இப்படி எழுந்தருளிவந்து கிருபை செய்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அப்போதே, "அவ்வாறு வரந் தந்தேன்" என்றொரு சத்தந் தோன்றிற்று. பின்னர் மதுரை மாநகர்க் கரசனாய் வந்த இளஞ்செழியன் என்பவனும் ஆயிரந் தட்டாரைக் கொன்று பலியிட்டுக் கண்ணகிக்கு விழாவுஞ் சாந்தியுஞ் செய்து கோவலன் இறந்தநாள் தொடங்கிப் பெய்யாது வறந்த மழையும் வரப்பெற்று வறுமை நோய் முதலிய சிறுமைகளுந் தன்னாட்டினின்று நீங்கப்பெற்றான். அவ்வாறே இளஞ்செழியன் செய்து பேறு பெற்றதனைக் கேள்வியுற்ற கொங்கதேசத் திளங்கோவாகிய கோசரும் கண்ணகிக்கு விழாவுஞ் சாந்தியுஞ்

செய்து தன்னாட்டிலே எந்நாளும் மழை பெய்யப்பெற்றார். அவ்வாறே இலங்கைத் தேச வரசனாகிய கயவாகு என்பவனுங் கண்ணகிக்குத் தன்னாட்டிலே கோயில் கட்டுவித்துத் திருவிழாவுஞ் செய்து மழை மிகுந்து தன்னாடு சிறக்கப்பெற்றான். அவ்வாறே சோழன் பெருங்கிள்ளி என்பவனுந் தன்னுடைய இராசதானியாகிய உறையூரிலே 'இவள் ஒரு பத்தினிக் கடவுள்; யாம் விரும்பியவாறே எமக்கு வரந்தருவாள்' என்று கருதிக் கண்ணகிக்குக் கோவிலுங் கட்டுவித்து நித்திய விழாவணியும் நடத்தினான்.

பயிற்சி:

1. கண்ணகியும் கோவலனும் மதுரைக்குச் சென்றதேன்?
2. கவுந்தி யார்? அவர் யாரை நரியாகும்படி சபித்தார்?
3. கோவலன் வெட்டுண்டதெங்ஙனம்?
4. கண்ணகி வழக்குரைத்த வரலாறு தருக.
5. 'பத்தினிவிழா' என்பதென்னை? அது இலங்கையோடு எங்ஙனம் தொடர்புற்றது?

---

4. பாஷாலங்காரம்

கற்கும் பாடங்களிலே ஆராயத்தக்க விஷயங்களுள்ளே முதன்மையானது பாஷாலங்காரம். எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை முதலியவையில்லாது சொல்லின்பம், வாக்கியரசம், பொருட்சுவை முதலியனவுண்டாக எழுதவும் பேசவும் செய்வது கற்கும் பாடங்களினது பாஷாலங்காரமேயாம். எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழைகளுண்டாக எழுதுவோர் பேசுவோர் எத்துணைச் சிறந்த பொருளை எடுத்துபதேசிக்கினும் அவை நன்கு பதியா. அப் பிழைகளில்லாது சொல்லின்பமும் வாக்கியரசமும் பொருந்தப் பேசுவோர் எழுதுவோர் உபதேசிக்கும் பொருள், சிறப்பிலதாயினும் விரும்பிக் கேட்கப்படாமற் போகாது. ஆதலால் பாஷாலங்காரம்

யாவர்க்கும் இன்றியமையாததாம். மாந்தர்க்குச் சுத்தமும் அழகும் வாய்ந்த வுடை எத்துணை ஆவசியகமோ அத்துணையாகப் பாஷாலங்காரமும் ஆவசியகமாம். அழுக்குடை தரித்தவன் எங்ஙனம் பெருஞ்சபை யேருனோ, அங்ஙனமே பாஷாலங்காரமில்லாத நுண்ணறிவும் பெருஞ் சபை யேருதாம்.

பாஷாலங்காரந்தான் யாது? அது கேட்போர் மயங்குமாறு திரிசொற்களும் அரும்பதங்களும் கடின சந்திகளும் ஆய்ந்தெடுத்துப் பிரயோகித்தலன்று. பல சொல்லாற் கூறற்பாலதை இருசொல்லாற் கூறுவது மன்று; சில சொல்லாற் கூறற்பாலதை அளவிறந்த சொற்களாற் கூறுவது மன்று. பாஷாலங்காரமாவது கேட்போர் முகமலர்ந்து உள்ளத்திற் கொள்ளும்வகை இலக்கணப் பிழையின்றிச் செஞ்சொற்களாற் பொருட் பொலிவும் செவிக்கின்பமும் நல்விளக்கமு முண்டாகச் சொல்லுவதாம். சொற்கள் உலகியற்சொல், செய்யுளியற் சொல் என இருவகைப்படும். அவற்றுள் உலகியற் சொல்லே வசனத்துக்குச் சிறந்தது. உலகியற் சொல் லாகிய செஞ்சொற்களாற் பேசுதலும் எழுதுதலுமே நன்ருகக் கற்ற பெரியோர் வழக்கமாம். அது சாமானிய சாமர்த்தியமன்று. அவ் வன்மை பன்னூற் கல்வியாலும் பன்னட் பயிற்சியாலும் பெறத்தக்கது. இவ்வகை வன்மை யிற் சிறந்தவர்கள் ஆறுமுகநாவலர், சிவாஞானமுனிவர், சரவணப்பெருமாளையர் என்பவர்களே. இவர்களுக்கு முற்பட்ட காலத்தில் விளங்கினருள்ளே சேனவரையர், பரிமேலழகர் முதலியோர் மிகச் சிறந்தோர். இவர்க ளுடைய வசனங்களெல்லாம் சிறிதும் இலக்கண வழு வில்லாது கற்போர்க்குத் தெளிவும் இனிமையும் பயத்த லின், அவை பிரமாண வசனங்களாயின. கருத்தை விளக்குதற்குரிய சொற்களும் வசனங்களும் அது செய் யாது மயங்கவைத்தலோடு பயனின்றி மிகைபடப் பெருகியோடுமாயின், அவை கற்பவர் கேட்பவர்களது காலத்தையும் வலிமையையும் அழித்தற்கே பயன்படுவன வாம்.

ஆதலால், பாஷாலங்காரம் கருத்தை வெளிப்படுத்துவதாகிய ஒரு பயனளவில் மாத்திரம் நில்லாது, கேட்போர் கற்போர்களது உள்ளத்தையுங் காலத்தையுங் கவர்ந்து, அறிவுப் பெருக்காகிய ஆநந்தத்தையும் விளைவிப்பதாம். இது செய்ய வல்லதே பாஷாலங்காரமாம்.

இனி, செய்யுளியற் சொல்லினுள்ளும் செஞ்சொல், திரிசொல் என இருவகையுள. செஞ்சொல்லினாலே திட்ப நுட்பம் பொருந்திச் செம்பொருள் வெளிப்படுத்துஞ் செய்யுள் செய்தல், புலவர்க்கெல்லாம் எளிதன்று. இது செய்ய வல்லவரே புலவருட் சிறந்தோராவர். இச் சிறப்பு நோக்கியே திருவள்ளுவரைத் தெய்வப் புலவரென்று உலகம் உச்சிமேற்கொண்டு கொண்டாடுவதாம். பாஷாலங்காரத்தோடு கற்பனை முதலிய சித்திராலங்காரங்களமையப் பாடும் புலவர்கள் கவிநாவல ரெனப்படுவர். இதற்கு இலக்கியமாகவுள்ளவர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் ஒருவரே. இவர் பிரபஞ்சத்தின் கண்ணேயுள்ள பிரகிருதி விலாசங்களை யெடுத்து வர்ணிப்பதில், ஐரோப்பியரால் சிரமேற்கொண்டு பாராட்டப்படுபவராகிய ஷேக்ஸ்பியருக்குத் தாழ்ந்தவரல்லர்.

இங்ஙனம் பன்னூறு வருஷங்களுக்கு முன்னே விளங்கிய இவ் வித்துவ சிரேட்டரையெல்லாம் இன்றும் என்றும் மறவாமற் சிரமிசைச் சூடி மெச்சிப் புகழ்வது, அவர் அற்புத பாஷாலங்காரமொன்றை நோக்கியேயாம். அவர் பாஷாலங்காரத்தில் மயங்காதவர் யாவர்? எத்தனை மன்னர் அவர்பின்னர் நடந்தனர். எத்தனை பிரபுக்கள் அவருக்குப் பரிசனங்களாயினர். எத்தனை அந்தணர் வந்தனை புரிந்தனர். இன்னும் யாவரே கொண்டாடாதவர். ஆதலால், பாஷாலங்காரத்தாற் பயனென்னவென்று அலட்சியம்பண்ணுது அதனைக் கிரகித்து வருதல் கற்கும் மாணுக்கர் கடனும்.

பயிற்சி:

1. பாஷாலங்காரம் என்றுல் என்ன?
2. அழகான உடைக்கு எங்ஙனம் பாஷாலங்காரம் உவமையாகும்?
3. பாஷாலங்காரத்திற் சிறந்திருந்த சிலரின் பெயர்களைக் கூறுக.
4. திருவள்ளுவர் தெய்வப்புலவ ரெனப்படுவதேன்?

5. வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே சாலிவாகன சகாப்தம் 1759க்குச் சமமான ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் 24ஆந் திகதியிற் பிறந்தவர். இவர் தந்தையார் வைசிய குலத்துப் பிறந்த சரவணமுத்துச் செட்டியார். அவர் தாயார் ஆறுமுக நாவலருக்குத் தமக்கையார். ஆகையால் இவர் அவருக்கு மருகராவர். இவர் தமது இளமை தொடங்கி நல்லூரிலிருந்த கார்த்திகேய உபாத்தியாயரிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுவந்து, பின் தன் மாமனாராகிய நாவலரிடமும் பலகாலங் கற்றவர். அவர்களிடங் கற்றவளவிலமையாது தமது நுண்மாணுழைபுலங்கொண்டு, சங்க இலக்கியங்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, இராமாயண முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியமென்னும் பேரிலக்கண நூலையும் பலமுறை துருவித் துருவி ஆராய்ந்து கற்றவர். படித்தவற்றை ஒரேமுறையிலவதானிக்கும் ஞாபகசக்தி யமைந்தவர். பாடுஞ் சக்தியுமுள்ளவர். கோவில்களிலும் மடங்களிலும் வீடுகளிலும், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம் முதலியவற்றைப் படித்துப் பொருள் சொன்னவர். பொருள் சொல்லுங்கால் கேட்டவர்கள் 'யாழிசையோ பாரதிதன் னின்னிசையோ' என்று அயிர்க்குமாறு தமக்கு இயற்கையாயமைந்த இனிய மிடற்றோசையோடும், விரிவுரையோடும், சொல்லின்பமும் பொருளின்பமும் தோன்றச் சொல்வர். இவர் சொல்லும் பொருளிலே பரிமேலழகர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலியோருரைத்த உரைத்திறங்க ளெல்லாம் அமைந்து மிளிரும். இவர் வாக்கிற் பிறக்கும் உரையும் பரிமேலழகர் உரைபோலத் தெளிவும் இனிமையும் பொருந்தி ஒளிரும். இவர் பொருள் சொல்லும் அழகையும் இனிமையையுங் கேட்பதற்காக யாழ்ப்பாணத்திலே

பற்பல ஊர்களிலுமுள்ள பிரபுக்களும் அறிஞர்களுந் தத்தங் கோவில்களிலே புராணபடனம் நடக்குங் காலத்திலே இவரை அழைத்துப் பொருள் சொல்லுவித்துக் கேட்டு மகிழ்வர். சபைகளிலே இவர் சொல்லும் பொருளைக் கேட்க வந்த சனங்கள், அப் பொருளிலுள்ள இன்பங்களை நுகரும் அவாவினாலே சத்தஞ்செய்யாது தாமே அடங்கி இருந்து கேட்பர். ஒருமுறை இவர் வண்ணார் பண்ணைச் சிவன்கோவில் வசந்த மண்டபத்திலே பெரிய புராணம் படித்தபோது, திருஞானசம்பந்தர் திருக்கலியாணப்படிப்பைக் கேட்பதற்காக ஆயிரக் கணக்கான சனங்கள் வந்திருந்தார்கள். இருத்தற்கு மண்டபம் இடம் பெறுமையால் நெருக்கமுற்றுச் சனங்கள் சத்தஞ் செய்யத் தொடங்கினார்கள். அங்குள்ள அதிகாரிகள் சத்தஞ் செய்ய வேண்டாமென்று சொல்லி அமைதி செய்தும் கேளாமற் சனங்கள் சத்தஞ் செய்தார்கள். அப்பொழுது இவர்களை அமைதி செய்தற்குரிய உபாயம் தாம் படிக்கத் தொடங்குதலே யென்று கருதி இவர் காப்புச் செய்யுளைப் படிக்கத் தொடங்கினார். உடனே சனங்கள் எல்லாரும் நெருக்கத்தையும் நோக்காமல் அமைதியாயிருந்துவிட்டார்கள். இதனாற் சனங்களுக்கு அவர் சொல்லும் பொருளைக் கேட்டலில் எவ்வளவு அவா இருந்ததென்பதையும், இவர் சொல்லும் பொருட் சுவையின் மேன்மை எவ்வளவு என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இன்னும் கம்பராமாயணத்திற்கு இவர் பொருள் சொல்லுவது மிக விசித்திரமாயும் மிக இன்பமாயுமிருக்கும். இவர் சொல்லும் நூதனப் பொருள்களைக் கேட்டோர் கம்பன் தான் மீளவும் பிறந்து தான் பாடிய இராமாயணத்திற்குப் பொருள் சொல்லுகின்றானோவென்று அதிசயமுறுவர். இவர் பொருள் சொல்லும்போது நச்சினார்க்கினியரையும் சிவஞானமுனிவரையும் போலச் சில இடங்களிலே செய்யுள்களிலே வரும் சொற்களை நூதனமாகப் பிரித்தும் கூட்டியும் பொருள் கொள்வர்.

ஒருமுறை இவர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலே கந்தபுராணத்துத் திருக்கலியாண படலத்திற்குப் பொருள் சொன்னபோது,

"பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் ருடன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொ டளித்தே னென்று நெடுமறை மனுக்கள் கூறி
வாசனல் லுதக மொத்தான் மருகனென் றவனை யுன்னி."

என்னுஞ் செய்யுளிலே, 'மருகனென் றவனை யுன்னி' யென்றதற்குப் பொருள் சொல்லுங்கால், 'மருகனென்று+அவனை யுன்னி' என்று பிரிக்கவேண்டியதை அங்ஙனம் பிரியாது; 'என்றவனென' ஒருசொல் விழுக்காடாக்க் கொண்டு அதற்கு, 'என்று அவமதித்த தக்க' னென்று பொருள்கூறி; 'யான் இப்பொழுது சிவனை மருகனென்று நினையாமல் கடவுளென்றே நினைப்பேன். சிவனைத் தக்கன் கடவுளென மதியாது மருகனென்று அவமதித்தமையானே தலையிழந்தானன்றோ எனத் தக்கன் தலையிழந்த நினைப்பு அப்பொழுது மலையரசனுக்குண்டாயது' என்று தாம் சொன்ன பொருளுக்குக் காரணமுங் கூறி முடித்தனர். சில இடங்களிலே தமது ஆராய்ச்சி அறிவு தோன்றவும் பொருள் கூறுவர். கந்தபுராணத்துத் தெய்வயானை திருமணப் படலத்தில் வரும்,

"மாவொடு வாழை வருக்கைகொள் பைங்காய்
தீவிய கன்னல் செறிந்திடு செந்தேன்
ஆவருள் பாலிவை யண்டர்கள் செம்மல்
மூவிரு மாமுக னேநுகர் வித்தான்."

என்னுஞ் செய்யுளுக்குப் பொருள் சொல்லுங்கால்; 'மாம் பழம், வாழைப்பழம், பலாப்பழம், இனிய சர்க்கரை, தேன், பால் என்னும் ஆறு பொருள்களையும் ஆறு முகங்களுமாக நிவேதனஞ் செய்தான்' என்று பொருள் கூறி அதற்குச் சான்றாக வள்ளியம்மை திருமணப் படலத்து வரும 'செந்தினை இடியும் தேனும்' என்பதை முதலாகக் கொண்ட செய்யுளிலும் இவ்வாறே ஆறு

பொருள்களை ஆசிரியர் அமைத்துக் கூறி இருத்தல் காண்க வென்று பொருள் கூறினார். இப்படிப் பல. இவற்றை யெல்லாம் விரிப்பிற் பெருகும்.

யான் இவரிடம் படிக்கும்போது வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வசந்த மண்டபத்திலே கந்தபுராணமும், பெரியபுராணமும், இராமாயணமும் முறையே படிக்கப் பட்டன. அப்பொழுது அவற்றிற்கு இவரே பொருள் சொன்னார். இவர் சொல்லும் பொருளைக் கற்றவர்களும் பலர் வந்து கேட்டுச் செல்வர். கற்பவர்களும் பலர் வந்து கேட்டு இவர் சொல்லும் பொருள்களுள் அரியனவற்றைக் காகிதங்களிற் குறித்துஞ் செல்வர். இங்ஙனம் கேட்டும் குறித்தும் அறிஞர்களாயினோர் பலர். கந்தபுராணம் முதலிய அந்நூற் குறிப்புக்கள், இப்போதும் பலரிடம் உண்டு. இவரிடங் கேட்டுக் குறித்த பெரியபுராணக் குறிப்புக்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்'ப் பத்திரிகையிலே திருவாரூர் சோமசுந்தர தேசிகரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிற்க,

இவரிடம் நேரே கற்றவர்கள் யாழ்ப்பாணத்திற் பலர்; இந்தியாவிலும் சிலர். அவர்களுள் சிதம்பரத்தி லுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலே தலைமை யாசிரியராயிருந்து கற்பித்தவரும், திருவாதவூரடிகள் புரா ணம், அபிராமி அந்தாதி, புலியூர் அந்தாதி என்னும் நூல்களுக்கு உரை எழுதியவரும், ஈழமண்டல சதகம் என்னும் நூலை இயற்றியவரும், உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவருமாகிய மட்டுவில், க. வேற் பிள்ளையும் ஒருவராவர். சிவஞானமாபாடியம், திருக் கோவையாருண்மை முதலிய நூல்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தியவரும், இந்தியாவிற் சென்று வசித்து அங்குள்ள பற்பலவூர்களிற் பிரசங்கங்கள் செய்து சைவசமயத்தை விருத்திசெய்தவரு மாகிய சுவாமிநாத பண்டிதரும் ஒருவராவர். புராணேதி காசங்களுக்கும், கோவையந்தாதி முதலியவற்றிற்கும் இவர்போலப் பொருள் சொல்ல வல்லவரும், கவிபாட

வல்லவருமாகிய வண்ணார்பண்ணை, சி. பொன்னுத்துரை ஐயரும் ஒருவராவர். சிதம்பரத்திலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலே சிலகாலம் தலைமையாசிரியராயும், பல காலம் தலைவராயும் இருந்தவரும் இவரது மருகருமாகிய ச. பொன்னம்பலபிள்ளையும் ஒருவராவர். 'உதய பானு', 'இந்துசாதனம்' முதலிய பத்திரிகைகளிற் சமய விஷயமும் பிறவுமாகப் பல அரிய விஷயங்களை எழுதி வெளிப் படுத்தியவரும், பல அரிய நூல்களுக்கு ஆக்கியோனாய் விளங்கியவருமாகிய கொக்குவில், க. சபாரத்தின முதலி யாரும் ஒருவராவர். வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதராயிருந்த தாவடி, ஆ மு. சோமாஸ்கந்தப் பிள்ளையும் ஒருவராவர். கந்தர்மடம், வை. சி. சி. சிவகுரு நாதபிள்ளையும் ஒருவராவர். கொக்குவில், பண்டிதர் தம்பு என்பவரும் ஒருவராவர். இராமநாதமான்மியம், அருணசல மான்மியம் முதலிய நூல்களை இயற்றியவரும் புலவருமாகிய ச. பொன்னம்பலப்பிள்ளையும் ஒருவராவர். இந்தியாவிலுள்ள தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த உரத்தூர், கோ. வைத்தியலிங்கபிள்ளையும் ஒருவராவர். திருவாவடு துறை ஆதீனஸ்தராய் விளங்கிய பொன்னோதுவாரும் ஒருவராவர். காரைக்குடி, சொக்கலிங்கச் செட்டியாரும் ஒருவராவர். பழனிக் குமாரசுவாமித் தம்பிரானும் ஒருவ ராவர். வடகோவைச் சபாபதி நாவலரும் இவரிடம் சில நூல்கள் கற்றனர் என்ப.

இவர் வேதாரணியம், தேவகோட்டை முதலிய இடங்களிலும் சிலகாலம் வசித்தவர். வேதாரணியத்து வசித்த காலத்தில் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் தமக்கு நேர்ந்த ஐயங்களை இவரிடம் கேட்டுத் தெளிந்தனர் என்று அந் நற்றிணை என்னும் நூலின் முகப்பில் எழுதப் பட்டுள்ளது.

இவர் பாரதத்திற் சில பருவங்களுக்கும் மயூரகிரிப் புராணத்திற்கும் உரையெழுதி அச்சிட்டு வெளிப்படுத்தி யுள்ளார். இவராலேயே யாழ்ப்பாணத்து நல்லூர் மகா

வித்துவான் அரசகேசரி தமிழில் மொழிபெயர்த்து இயற்றிய இரகுவம்சம் என்னும் நூல் பரிசோதித்து அச்சிடப்பட்டது. இவர் சாலிவாகன சகாப்தம் 1825க்குச் சமமான ஏவிளம்பி வருஷம் மார்கழி மாதத்தில் தேக வியோக மடைந்தனர்.

பயிற்சி :

1. வித்துவசிரோமணி எங்ஙனம் நாவலருக்கு மருகர் ஆவர் ?
2. வித்துவசிரோமணி எவர்களிடம் கல்வி பயின்றார் ?
3. வித்துவசிரோமணியின் மாணுக்கர்கள் யார், யார் ? அவருள் வித்துவசிரோமணியாய்த் தமிழுக்குப் பெருந் தொண்டுபுரிந்த ஒருவர் பெயர் கூறுக.
4. வித்துவசிரோமணி தமிழுக்குச் செய்த தொண்டுகளை எழுதுக.

---

6. திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு

நாம் கண்காண உலகில் அடைய விரும்பும் பொருள்கள் மூன்று. அவை அறம், பொருள், இன்பம் என்பன. அறமாவது தன்னலம் கருதாமற் பிறருக்குச் செய்யும் உதவிகளே. பொருளாவது மணிகள், பொன், வெள்ளி, நெல், மண் முதலியன. இன்பமாவது தமது உடம்பு நலம் பெறுவதால் வரும் மகிழ்ச்சி. பிறருக்கு நாம் எந்தவிதமான உதவி செய்யவேண்டுமானுலும், நமது உடல் இன்பம் பெறவேண்டுமானுலும், பொருள் வேண்டுவது இன்றியமையாதது. பொருள் இல்லாதவர்கள் இவ்வுலகில் எவ்வித அறமும், இன்பமும் அடைய முடியாது. அதனுலே பெரியோர்கள் அறம், பொருள், இன்பம் என வரிசைப்படுத்தி வைத்தார்கள். ஆன்றோர் 'நடுவணது எய்த இருதலையும் எய்தும்' என்றதும் இதுவே. ஆதலின் ஒவ்வொருவரும் பொருளைத் தேட வேண்டிய முயற்சிகளைக் கைக்கொள்ளல் வேண்டும்.

அழியாப் பொருளாகப் பெரியோர் கொண்டாடும் கல்வியைக் கற்றற்கும், அக் கல்வித் தேர்ச்சிக்குக் கருவியாகிய நூல்களை வாங்குவதற்கும், கற்போரது பசி முதலாகிய துன்பங்களை நீக்கி இன்பத்தைத் தந்து அவர்கள் கல்வி கற்பதற்கும் முதன்மையான காரணம் இப் பொருளே. பொருளில்லாமையால் இக் காலத்தில் எத்தனை பிள்ளைகள் படிக்க முடியாமற் சில வகுப்புகளிலேயே படிப்பை விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். எத்தனை பிள்ளைகள் தங்களுக்குப் பாடமாகவுள்ள நூல்களை வாங்க முடியாமற் தவிக்கிறார்கள். எத்தனை பிள்ளைகள் உணவுக்கு வழியில்லாமற் சிறுவயதிலேயே படிப்பை விட்டுவிட்டு, வயிற்றுக்கு உணவுதேட முயற்சிகளைத் தேடியலைகின்றார்கள். இவ்வாறெல்லாம் திண்டாடும் பிள்ளைகளோ அளவற்றவர். இக் காலத்தில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்குப் பொருள் படைத்தாரே சில சமயங்களில் தடுமாறும் நிலை ஏற்படுகிறதென்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? நாம் பொருளுடையவர்களாக இருந்தால் நமது சுற்றத்தார்கள் நம்மை வந்து நெருங்குவார்கள். உண்மையில் சுற்றத்தாரல்லாதாரும், ஏதேனும் உறவு கூறிக்கொண்டு நம்மை வந்து நெருங்குவார்கள். நாம் மிக்க கொடிய நோயாகிய அவர்களுடைய பசியை நீக்கி, அவர்களுக்குக் களிப்பை உண்டாக்கலாம். நமது பகைவர்கள் நம்மைக் கண்டு அஞ்சுவார்கள். அவர்கள் நம்மோடு ஏன் பகை கொண்டோமென்று வருந்தி நமது நட்பையே விரும்புவார்கள். ஈட்டி எட்டினமட்டுந்தான் பாயும்; பணம் பாதாளம் வரையிலும் பாயும் அல்லவா ? நாம் உண்மையிற் கல்வி யில்லாதவர்களாக இருந்தாலும், பல புலவர்கள் நம்மை வந்து பணிந்து நமக்கு ஒப்பான அறிவாளிகள் ஒருவரும் உலகத்திலேயே தோன்றியதுமில்லை தோன்றப் போகிறதுமில்லை என, நம்மீது பாமாலைகள் பாடிப் புகழ்வார்கள். அவர்கள் நாம் சூம்பிய தோள்களோடும், பார்வை குறைந்த கண்களோடும் இருந்தாலும், நம்மை மலைபோலப் பருத்த தோளை யுடையவனே என்றும்,அழகிய சிவந்த தாமரை மலர்களைப் போன்ற கண்களையுடையவனே

என்றும் நம்முன் புகல்வார்கள். புல் தடுக்கினாலும் போதும், காற்றடித்தாலும் போதும், உடனே கீழே விழுந்துவிடக்கூடிய அவ்வளவு வல்லமை படைத்த வீரராக நாம் இருந்தாலும், தற்காலத்தில் ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா முதலிய எல்லா நாடுகளும் இணையற்ற வீரரெனப் புகழும் திருவாளர் இராமமூர்த்திகூட நமக்கு முன்னிற்க முடியாதென அவர்கள் நம்மைப் போற்றுவார்கள். 'ஈ' என்ற உயிரின் பெயரைச் சொன்னாலும் சினங் கொள்ளும் பெரிய வள்ளலாக நாம் இருக்கிறோம் என்பதை நன்றாக அறிந்தவர்களானாலும், அவர்கள் நம்மிடம் வந்து நம்மை நோக்கிப் பாரி யென்ற பெரிய வள்ளலாருங்கூடத் தங்களுக்கு நிகராவரோ? கொடையிற் சிறந்த கர்ணனும் தங்களிடந்தான் கொடைத்தொழில் பயின்றிருக்க வேண்டும் என்று, பலபடப் பெருமையாகப் பேசுவார்கள். நாமும் அவர்களுக்கு வேண்டியதுகொடுத்து அவர்களை மகிழ்விக்கலாம். அரசரும் அமைச்சரும் அதிகாரிகளும் நம்மைமதித்துத் தமக்குப் பொருளுதவிவேண்டும்போதெல்லாம் நம்மை வந்தடைவார்கள். நாட்டில் வெள்ளத்தாலாவது பஞ்சத்தாலாவது கேடுகள் விளையும்போது, அவைகளால் துன்பமடையும் மக்களுக்கு நாம் பொருள் தந்து ஒருவாறு துன்பத்தைத் துடைக்கலாம். பணமுடையோர் சிலர், தீய மனமுடையவர்களாய்க் கொலை முதலியன செய்து தமது பணவலியால் அக் குற்றங்களிலிருந்து தப்புவதற்கு முயல்வார்கள். அதிகாரிகள் பலரும் பொருளால் மயங்கி உண்மைக்கு மாறாகத் தீர்ப்புகள் கூற முன்வருவார்கள். அத் தீய பணக்காரர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு சில அதிகாரிகள் தமது அறிவை இழந்து ஒரு பாவமும் அறியாத ஏழைமக்களைத் துன்பப்படுத்தத் தொடங்குவார்கள். அவ்வேளைகளில் நாம் நமது பொருளை நல்லவழியிற் செலவிட எண்ணி, உண்மையிலேயே நன்னோக்க முடையவர்களாய்த் தீயவர்களைத் தண்டனைக்கு உட்படுத்தவும், ஏழைகள் அநியாயமாக அடையும் இடையூறுகளை நீக்கவும் முற்படுவோமேயானால், நமது முயற்சி நல்ல பயனைத் தருவது திண்ணம்.

பணமதமுடைய தீயார் பதுங்குவர். அதிகாரிகளால் அநியாயச் செயல்கள் விளையா. பணம் பத்தும் செய்யு மல்லவா ?

இவ்வளவு பெருமையுடைய பொருளை நல்வழியிலேயே தேடல் வேண்டும். வேளாண்மை, வாணிபம், அரசர்பணி, கல்வி கற்பித்தல், முதலாயினவே அவ் வழிகள். 'உழு துண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' ஆதலின், வேளாண்மையைப்போலக் குற்றமற்ற தொழில் வேறொன்றும் இல்லை. ஆசிரியத் தொழிலும் குற்றமற்றதே. கொண்டபடிபோலும் விலை பேசி, தமக்கு ஊதியம் ஒருசிறிது கூடிவரச் செய்யும் வாணிகமே குற்றமற்றதாம். விண் இடிந்து விழுந்தாலும் ஒழுக்கத்தைவிட்டு மாறுவதில்லை எனக் கங்கணம் கட்டிக் கொண்டு வேலைசெய்யும் திருவுளமுடையார்க்கு, அரசர் பணியும் குற்றமுடையதன்றும். இங்ஙனம் நல்ல வழிகளில் தேடப்பெறும் பொருளே என்றும் நமக்கு நன்மை தருவ தாகும்.

களவு, பொய்ச்சான்றுரைத்தல், பொய் வழக்குப் பேசல், கள்ளக் கையெழுத்திடுதல், நம்பிக்கை மோசம் முதலிய தீய வழிகளில் தேடப்படும் பொருள் என்றும் துன்பமே பயக்கும். தீயநெறி வந்த பொருள் தன்னை உடையார்க்கு ஆக்கம்போலக் காணப்பட்டாலும், விரை வில் அவர்களை வறியவர்களாக்கி அவர்களுடைய குடும் பத்தையே நாசமாக்கி, அவர்கள் வாழ்ந்த மாளிகை இடிந்து குட்டிச் சுவராய்ப் பாதாளமூலி, வெள்ளெருக்கு முதலிய முளைத்துப் பாம்புகள் வாழ்விடமாகி விடும்படி செய்யும். ஆதலின், நாம் இத்தகைய தீய வழிகளைக் கனவிலும் கருதலாகாது.

ஏழைகள் வயிற்றுக்கில்லாமல் பொருளுடையாரிடம் சென்று, அவர்களுடைய வரவையோ சமயத்தையோ எதிர்பார்த்து, அவர்களுடைய தலைவாசலிலே கால் வலிக்க நெடுநேரம் காத்திருக்கிறார்கள். அவர்களைக்

கண்டபோது பலவாறு பணிந்து கும்பிட்டுப் பல்லைக்காட்டி இரக்கின்றார்கள். அந்நேரத்தில் அவர்கள் உண்மையில் இறந்தவர்களே யாகின்றார்கள். 'பணமில்லாதவர் பிண மாம் பான்மை சேர்வர்.' பணமில்லாதவர்களை அவர்க ளுடைய மனைவியும் மக்களும் மதிக்கமாட்டார்கள். பெற்ற தாயாருங்கூட அவர்களை இகழ்ந்து ஏறெடுத்துப் பாரார். அவர்களுடைய சொல்லை நண்பருங் கேளார். ஆதலின் ஒவ்வொருவரும் தமது சிறுமை நீங்கிப் பெருமை பெறுவ தற்குப் பொருளைத் தேட விடாமுயற்சிகள் பல்லாற்றானும் செய்யவேண்டும்.

பயிற்சி :

1. பொருளெனப்படுவது யாது ?
2. 'நடுவணதெய்த இருதலையும் எய்தும்' என்பதனை விளக்குக.
3. பொருள் உடையார், கல்வியாளரிலும் பார்க்க எவ்விதம் மதிப்படைகிறார்கள் ?
4. பொருளை எவ்வாறு தேடல் வேண்டும்? எவ்வாறு தேடல் துன்பம் பயக்கும்?
5. 'பிச்சை எடுத்தல் இறத்தலுக்குச் சரி' என்பதேன்?

---

7. நச்சினார்க்கினியர்

உரையாசிரியர்களுட் சிறந்து விளங்கும் நச்சினார்க், கினியர், பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுராபுரியிற் பிராமண குலத்திற் பரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர். இவர் தமிழ்மொழியிலுள்ள எல்லா நூல்களிலும் புலமை நிரம்பியவர் ; சைவசமயத்தினர். இவர் வாழ்க்கை ஒழுங்குகளை மிகவும் கவனித்து வந்தவராகலின், மிகவும் முதிர்ந்த வயதளவும் தேகசுகத்துடன் வாழ்ந்து வந்தன ரென்ப. நீடித்த வாழ்க்கையை எய்தினரென்பது, இவர் உரைகண்ட பல நூல்களாலும் வலியுறுகின்றது. இவ்

வாசிரியர் உரை வகுத்த நூல்களை உற்று நோக்குங்கால் தமிழின்மாட்டு மிகுதியும் அன்புடன் உழைத்துத் தன்னு லியன்றளவு உலகத்துக்கு நன்மை செய்திருக்கின்றன ரென்று தெளிகின்றோம். இவர் உரைகண்ட நூல்களோவ் வொன்றும் அருமையும், பெருமையும், கடினமும் வாய்ந் தது. இத்தகைய நூல்களுக்கு இவர் உரை வகுக்காம லிருந்தாராயின், அவற்றின் சிறப்புகளை நாம் அனைவரும் அறியாதொழிவோம் என்பது தேற்றம். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகை, சிந்தாமணி முதலிய பெரு நூல்களுக்கே நமது ஆசிரியர் உரைசெய் தனர்.

நச்சினார்க்கினியர் தமது உரையிற் பேராசிரியர், இளம் பூரணவடிகள், சேனாவரையர் முதலியோரைப் பற்றிப் பன்முறை கூறுதலின், இவர் அவர்களுக்குப் பின்னிருந் தவர்; அல்லது உடனிருந்தவர் என்பதற்கு ஐயமேயில்லை. பேராசிரியர், திருநாவுக்கரசர் தேவாரத்திலொன்றை மேற் கோளாகக் கொண்டிருத்தலின், அவர் சுவாமிகளுக்குப் பின்னர் இருந்தவர் என்பது தானே போதரும். திரு நாவுக்கரசு சுவாமிகள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இருந்தவரென்பது சிலாசாசனங்களால் துணி யப்படுகின்றது. ஆதலிற் பேராசிரியர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது அதற்குப்பின் விளங் கியவராகின்றார். பத்துப்பாட்டில் முதலாக வைக்கப்பட் டுள்ளதும், நக்கீரர் பாடியருளியதுமாகிய திருமுருகாற்றுப் படை சைவத்திருமுறைகளுள் பதினொன்றாவதிற் சேர்க்கப் பட்டுள்ளது. திருமுறை கி. பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வகுக்கப்பட்டதெனத் துணியப்பட்டுள்ளது. பத்துப்பாட்டுக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர் திருமுரு காற்றுப்படை பதினோராந் திருமுறையில் வைக்கப்பட் டுள்ளதாகிய விசேட சம்பவத்தைக் குறித்து யாதும் புகலாமையினால், அவர் பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவ ரெனத் துணிதல் சாலும். ஆகவே இவருடைய காலத்தை கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக் கும் இடையிலெனக் கூறலாம்.

செய்யுணடை வாய்ந்த நக்கீரர் உரைநடையும், விளக்கங் குறைந்த இளம்பூரணமும் கட்டுரைச் சுவை செறிந்த சேனாவரையரது இலக்கணநடையும், பொருட் செறிவுடைய பேராசிரியர் உரைநடையும், இவரது உரைநடைக்குப்பின் விளங்குவனவல்லவாயின. நச்சினார்க்கினியரது உரைநடையில் தெளிவும், சந்தர்ப்பத்துக்கேற்ற மேற்கோள்களும் பொருந்தியிருக்கின்றன. இவர் சொற்பொருணயங்களும் பொதிகதை விளக்கமும் ஆங்காங்கு காட்டுகின்றனர். மேலும் நச்சினார்க்கினியர் உரைவகுத்த நூல்களைப் படிக்குநர் கல்வியறிவில் மேம்பட்டவரே. ஆதலின், அவர் பெருமை 'குன்றிலிட்ட தீபம்போல் விளங்குகின்றது.

அக்காலத்தில், உரைகளைத் தவிர்த்து வேறு வசனமே நம் தமிழிற் பெரும்பான்மையு மில்லையென்னலாம். சில உரையாசிரியர்கள் கடினமான இடங்களை விளக்காதொழிகின்றனர். இவர் இவ்வாறு செய்ததில்லை. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே உரை எழுதியுள்ளனர். பயனற்றவைகளையும், பொருளுக்குப் புறம்பானவைகளையும் இவர் எழுதுவதேயில்லை. இவர் பிறர் மதங்களையாராய்ந்து தங்கோணிறுவுமாறு மிகவும் வியக்கத்தக்கதே. சிலவிடங்களில் தங் கொள்கைக்கு மாறுபட்டவரையும் உரை வன்மையினால் தம்மதத்தை ஏற்றுக் கொள்ளச் செய்யும் வன்மையுள்ளவர். பல நூல்களினின்றும் மேற்கோள் கூறலின், இவர் ஞாபகசக்தி மிகுதியுடையவர் என்பதற்கு ஐயப்பாடு எட்டுணையுமில்லை. இவர் உரைநடையின் இனிமையே இவர்க்கு அமுதவாயர் என்ற பெயரைக் கொடுத்தது.

இவர் வடமொழியிலும் பயிற்சியுடையவர். வடமொழிக்கண் மல்லிநாதசூரிபோலத் தமிழ்மொழிக்கட் பல்வகைய நூல்கட்கும் நல்லுரை வகுத்த நம் புலவர் பெருமானைப் பற்றிய,

"பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
வெச்சினுற் றிசையு முண்ணு மமிழ்தென வெழுநா வெச்சின்
மெச்சினா ளுளும் விண்ணேர் மிசைகுவர் வேத போத
நச்சினர்க் கினிய னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

என்ற பாயிரச் செய்யுள் உயர்வு நவிற்சியாகாது, தன்மை நவிற்சியேயாமென்பது அவ்வுரைகளிற் பயின்றார் யாவருக்கும் ஒப்ப முடிந்ததேயாம்.

பயிற்சி :

1. நச்சினர்க்கினியரால் உரைசெய்யப்பட்ட நூல்களவை?
2. சிறந்த உரையாசிரியர்கள் சிலரின் பெயர்கள் கூறுக.
3. 'குன்றிலிட்ட தீபம்': இதனை விளக்குக.
4. நச்சினர்க்கினியர், அமுதவாயர் என்பன காரணப் பெயர்களா? ஏன்?

8. மின்சார விளக்கு

தோமஸ் ஆல்வா எடிசன் என்பவர் புதிதாகப் புனைந்தவற்றுள் எது அவருக்கு மிகுந்த ஆராய்ச்சியையும், வருத்தத்தையு முண்டாக்கிற்று என்று ஒருவர் எடிசனை வினவியபொழுது அவர் சற்றுந் தாமதமின்றி, "எல்லாவற்றையும்விட எனக்கு அதிகக் கவலையையுங் கஷ்டத்தையுங் கொடுத்தது மின்சார விளக்குத்தான்; பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அதை வகுப்பதில் எனக்கு நம்பிக்கை குறையவில்லையாயினும், என்னேடு கூட உழைத்தவர்கள் பலதடவைகளில் மனஞ் சோர்ந்து போனார்கள்" என்று மறுமொழி தந்தார்.

மின்சார விளக்கைப்பற்றி அவர் ஆராய்ச்சி நடத்தி வந்த காலத்தில், இந்தவகையில் வேலை செய்தாற் சித்தி பெறலாம் என்று சமயத்துக்கேற்ற ஒரு முறையை வைத்துக்கொண்டு, அந்த முறையில் வேலை செய்துகொண்டே

போவார். அம்முறை பயன் தராதென்று அவருக்குத் தெரிந்தவுடனே, அதைக் கைவிட்டு மற்றொரு வழியைப் பின்பற்றுவார். இதைத் தவிர வேறு நெறியில் அவர் வேலைசெய்ய முடியவில்லை. எதற்கெனின், காற்று நீக்கப் பட்ட கண்ணாடிக் குமிழிக்குள் (Bulb) இலேசான நூல் போன்ற கம்பியில் எரிகின்ற மின்சார வெளிச்சம், ஒருவர் நினைத்தவாறு பரீட்சை நடத்த இடந்தருவதில்லை. இது குறித்து எடிசன், "நுண்ணிய நூலையொத்த கம்பியில் மின்சாரம் ஏறுவதால், நாம் அறிந்துகொள்ள முடியாத ஒருவகையிற் சூடு ஏறுகின்றது. பழுக்கக் காய்ச்சிய இரும்பு போலாகும் கம்பியில் நல்ல வெளிச்சமுண்டாக வேண்டு மாயின், அதைச் சுற்றிக் காற்றிருத்தலாகாது. இதன் பொருட்டுக் 'கம்பியைக் காற்று நீக்கப்பட்ட கண்ணாடிக் குமிழியில் அடைக்கவேண்டியது இன்றியமையாததாகின் றது. இந்நிலையில் கம்பியில் நிகழ்வதைக் கண்கொண் டறிவது எங்ஙனம்?" என்றுரைத்தார்.

மின்சாரவிளக்கு அமைப்பதுபற்றி எடிசன் மூவாயிரம் வெவ்வேறு கருத்துக்கள் (Theories) உடையவராயிருந்தார். இவை ஒவ்வொன்றும் உண்மையாயிருக்கக்கூடுமென்று அவருக்குத் தோன்றிற்றெனினும், இறுதியில் இரண்டே யிரண்டுதான் பரீட்சைக்கு நின்றன. மின்சார வெளிச்சம் விளங்குவதற்குக் கருவியாகின்ற நூல் போன்ற கரிக் கம் பியைச் (Carbon Wire) செய்வது அவருக்குப் பெரியதொரு முயற்சியாயிற்று. இக் கம்பியைச் செய்வதற்கேற்ற பொருள் இன்னதென்று கண்டுபிடிக்கும்வண்ணம், அவரால் நியமிக் கப்பட்டவர்கள் வையகமெங்கும் அலைந்தனர். முடிவில் ஒருவிதமான மூங்கில்நார் இதற்குத் தகுதியானதென்று கண்டுபிடிக்கப்பட்டது.

1812ஆம் ஆண்டில், ஸேர் ஹம்ப்ரி டேவி (Sir Humphrey Davy) என்ற ஆங்கில ரசாயனப் புலவர், மின்சாரத்தினுல் வெளிச்சமுண்டாக்கலா மென்பதைக் கண்டுபிடித்தார். அதன்பின் அறிஞர்கள் பலர் இந்த வெளிச்சத்தைப் பொது உபயோகத்திற்குக் கொண்டுவர

முயன்றுர்கள். அதிலுள்ள கஷ்டங்களை அவர்கள் கண்டு திகைத்துப் போனுர்கள். அவர்கள் பின்பற்றிய முறையில் வெளிச்சமுண்டாக்குவதற்குப் பிடித்த செலவு மிகுதியான தன்றிக் கிடைத்த வெளிச்சம் கொஞ்ச நேரத்துக்குமேல் நிற்கவில்லை.

இதற்குப்பின் எடிசன் தமது சிறந்த திறமையை இவ் வாராய்ச்சியிற் செலுத்தலானுர். மின்சார வெளிச்சம் தோன்றுவதற்குக் கரியால் ஆக்கப்பெற்ற மெல்லிய கம்பி வேண்டுமென்பது பன்முறை முன் சொல்லப்பட்டது. எடிசனும் அவருடன் வேலைசெய்தவர்களும் முதன்முதல் இக் கம்பியைச் செய்ய முயன்றுர்கள். 1879ஆம் வருடம், ஒக்டோபர் மாதம், 16ஆம் நாளன்று, அவர்கள் ஒரு வார்ப்பில் (Mould) பருத்தி நூலை வைத்துக் கருக்கி, அதைக் கம்பியாக்கினுர்கள். வார்ப்பை விட்டு எடுக்கும் பொழுது இக்கம்பி துண்டு துண்டாய்ப் போய்விட்டது. ஒலினியை முதல் இயற்றியகாலை, எடிசனுடனிருந்த பெஅச்சிலர் என்பவர் இப்பொழுது எடிசனுடன் சேர்ந்து வேலைசெய்தார். செய்த கம்பி உடைந்து போனதைப் பொருட்படுத்தாது நண்பர்களிருவரும், பதினுறும் பதி னேழாம் நாட்களில், இரவில் உறக்கமென்பது சிறிது மின்றி முன்குறித்த முறையில் வேலைசெய்து, பதினெட் டாம் நாளிரவு ஒரு கம்பியைச் செய்து முடித்தார்கள். அதை எடுத்து மின்சாரம் பாய்கின்ற கம்பியுடன் இணைக்கத் தொடங்கும்பொழுது அஃது உடைந்துவிட்டது. இதன் மேல், தூங்கப்போவதற்கு முன் ஒரு மின்சார விளக்குச் செய்து முடிக்கவேண்டும் அல்லது அந்த முயற்சியிலேயே சாகவேண்டும் என்று எடிசன் ஓர் உறுதி செய்தார்.

இவ்வுறுதிக்கு பெஅச்சிலரும் உடன்பட இருவரும் இருபதாந் தேதி வரையில் துயில் நீக்கி யுழைத்துத் தங்கள் கருத்திற்கேற்ற ஒரு கம்பியைச் செய்தனர். ரசாயனப் பரீட்சைச் சாலையிற் செய்யப்பட்ட இக் கம்பியைக் கண் ணுடிக்குமிழிகள்செய்யுமிடத்திற்குக் கொண்டுபோகுங்கால், ஒரு சிறு காற்று வீச, ஐயோ பாவம்! அது பொடிப்

பொடியாய் உதிர்ந்து போயிற்று. உணவும் உறக்கமுமின்றி மெலிந்துபோன பெஅச்சிலர் என்பவர் எடிசனைக் கூப்பிட்டு, "காற்றில் அது பொடியாய் உதிர்ந்து விட்டது. நான் நோய்வாய்ப்பட்டவன்போலானேன். இனி என்னால் விழித்து வேலைசெய்ய முடியாது. இஃது எனக்கு அருவருப்பாயிருக்கிறது" என்று புலம்பினார்.

இஃதிங்ஙனமாயினும் இருபத்தொன்றாந் தேதி அவர்கள் ஒரு விளக்கைச் செய்துமுடித்து, அதை எரிய வைத்தனர். முப்பது ஆராய்ச்சிக்காரர் (Experimentors) இவ்விளக்கு எரிவதை மிகுந்த ஆவலுடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் எடிசனும் பெஅச்சிலரும் சிலமணிநேரம் கண்வளரச் சென்றனர். அவர்கள் விழித்தெழுந்தபொழுது, அவ்விளக்கு இன்னும் ஒளிவிட்டு மிளிர்வது கண்டு, அவர்கள் உவகையடைந்தார்கள். இன்னுஞ் சிலநாள் அஃது எரிந்துகொண்டேயிருந்து, இறுதியிற் சுடர் குன்றி நின்றுவிட்டது. முதன் முதல் எடிசனா லுண்டாக்கப்பட்ட மின்சார விளக்கு இதுவே.

திருப்திகரமாய் எரிந்த இந்த விளக்கைக் கண்டு ஆர்வம் நிறைந்தவர்களாய் எடிசனுடன் வேலைசெய்த முப்பது உதவியாளர் (Assistants) நூல்போன்ற கரிக் கம்பி செய்வதற்கு உபயோகப்படக்கூடிய பொருள்களையெல்லாஞ் சோதிக்குந் தொழிலில் இறங்கினார்கள். இவர்கள் எவ்வாறு வேலைசெய்தார்கள் என்பதைக் காட்ட ஒன்றுபோதும். இடைவிடாது இவர்கள் தாங்கள் எடுத்த கருமத்திற் கருத்தை யூன்றி, இரவு பகலென்று பாராது உழைத்துத் தூக்கமின்மையாற் களைத்துப் பலகைகள் மீதோ, தரையிலோ, மேசைகள் மேலோ, எங்காயினும் படுத்துறங்கினார்கள்; வேறு சிலர் இரத்தம் பாய்ந்த கண்களுடன் புருவங்களை நெரித்துத் தங்கள் வேலையை விடாது செய்து வந்தனர். "இப்பொழுது எங்கும் மின்சார விளக்குகள் எரிவது, இவர்கள் செய்த வேலையின் பயன் தான்" என்று எடிசன் ஒருகால் மொழிந்தார்.

தாம் முதன்முதற் செய்த விளக்கில் அதிக இடர்ப் பட்டுச் செய்து பூட்டிய கரிக்கம்பியை விட, நன்றுகப் பயன் தரக்கூடிய வேறு கம்பிகள் செய்ய முயற்சிகள் நடந்துவரும்பொழுது, எடிசனுக்கு ஒரு விஷயம் ஞாபகத் தில் வந்தது. ஹம்போல்ட் (Humboldt) என்பவர் எழுதிய ஒரு நூலில், அமேசான் (The Amazon) என்ற பேராற்றின் கரையில் வளர்கின்ற ஒரு மூங்கிலின் தன் மையைப்பற்றி எடிசன் படித்திருந்தார். அஃது இச் சமயத்தில் நினைவிற்கு வர, எடிசன் மேற்சொன்ன நூலை எடுத்து, மூங்கிலின் பண்புகளை வாசித்துப் பார்த்தார். இந்த மூங்கிலைப் பற்றிப் புத்தகத்திற் கூறியதை அவர் உற்று நோக்க நோக்க, அதுதான் கம்பி செய்வதற்கேற்ற பொருளென்று அவருக்குத் தோன்றிற்று. ஆதலின், அவ் வப்போது அவர் தூர தேசங்களுக்குத் தமது ஆட்களை யனுப்பித் தமது நோக்கத்திற் கிசைந்த மூங்கில் எங்கு வளர்கின்றதென்பதைக் கண்டுபிடிக்கச் சொன்னார்.

1880ஆம் ஆண்டில் உவில்லியம் மூர் (William Moore) என்பவர் சீனுவிலும் யப்பானிலும் பிரயாணஞ் செய்து, மின்சார விளக்கிற்கேற்ற மூங்கிலைக் கண்டுபிடித்தார். ஆனல் இதைவிட உயர்ந்த மூங்கில் கிடையாதென்று நிச்சயமாகச் சொல்வதற் கிடமில்லாததனுல் வேறு சிலரை எடிசன் பிற இடங்களுக்குச் சென்று தேடிப் பார்க்க அனுப்பினுர். இவர்களுள் மெக் கோவான் (Mr. Mc Cowan) என்பவர் அமேசான் நதிக்கரைக்குச் சென்றுர். இப் பெரு நதிக்கரை வழியாக இவர், பெரு விலங்குகள், பாம்புகள், விஷசுரங்கள், கொள்ளையடிக்கும் மக்கள் முதலியவற்றுல் வருந் துன்பங்களைக் கருதாது ஈராயிரத்து முந்நூறு மைல் அலைந்தார். இந்தப் பிரயாணத்தில் நூற்றுப்பதினுறு நாள் ஊன் (Meat) உணவின்றி, தொண்ணூற்றெட்டு நாள் உடுத்தின ஆடை களையாமல் அவர் அல்லற்பட்டார். ஒருசமயத்தில் அவருடனிருந்த வர்கள் எல்லாம் அவரை விட்டு விலகினர். ஒருவன் மாத்திரம் துணையாய் நின்றுன். மற்றொரு தருணம், அவருங் கூட இருந்தவர்களும் ஒரு புலியுடன் (Jaguar)

பெரும்போர் நிகழ்த்த வேண்டியதாயிற்று. இத்தகைய இடையூறுகளினிடையே, பல்வகையான மூங்கில்கள் அவர் கைக்கெட்டின. இவற்றுட் சில நாலங்குலஞ் சுற்றளவுடையனவாய் நாற்பதடிக்குமேல் வளராதவை; வேறு சில ஆறுமுதல் ஒன்பதங்குலச் சுற்றளவுடன் எழுபத்தைந்து முதல் நூறடி வரையில் வளர்கின்றவை.

இந்த மெக் கோவான் என்பவர் திரும்பி வந்து எடிசனைப் பார்த்தபின் திடீரென்று காணுமற்போனுர். அவரைத் தேடிப் பிடிக்கச் செய்த முயற்சிகளெல்லாம் வீணுயின. அவர் தாம் போனவிடத்தில் எங்கேயோ பிணிக்காளாகி மாண்டிருக்கவேண்டும். அல்லது தமது பிரயாணங்களில் ஓரிடத்திற் கண்ட எழில்வாய்ந்த நங்கையொருத்தியின்மேற் காதல்கொண்டு தமது நண்பர்களையும் நாகரிகத்தையும் மறந்து அவளிடம் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும் என்று பெரும்பாலோர் கருதினர்.

நானிலத்தின் வேறு பகுதிகளில் இதுகாறும் கிடைத்தவற்றைவிடச் சிறந்த மூங்கில்கள் அகப்படலாமென்று நினைத்த எடிசன், இலங்கை, இந்தியா முதலிய இடங்களுக்கு ஒருவரை அனுப்பி, அங்குள்ள மூங்கில்களைச் சோதிக்கத் தீர்மானித்தார். இதன்பொருட்டு அவர் தகுந்த ஒருவரைத் தேடிப் பிடித்தார்.

நியூஜெசி மாகாணத்தைச் சேர்ந்த மேப்ள் உட் (Maple Wood N. J.) என்னுமிடத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத் தலைவரான ரிக்கால்டன் (Mr. Ricalton) என்பவர் ஒருநாள் தமது அன்றாட வேலையைச் செய்துகொண்டிருக்கையில், எடிசனிடமிருந்து அவருக்கொரு கடிதம் வந்தது. அவர் வந்து தம்மைப் பார்க்கக் கூடுமோவென்று எடிசன் கேட்டிருந்தார். உபாத்திமைத் தொழில் நடத்துந் தம்மைப்போன்றவர்களை எடிசன் யாதுபற்றி அழைக்கக் கூடுமென்று சிந்தித்துக்கொண்டே, ரிக்கால்டன் என்பவர் எடிசனுடைய ரசாயன சோதிப்பு நிலையத்திற் (Laboratory) போய்ச் சேர்ந்தார்.

"தாங்கள் பிரயாணஞ் செய்வதை விரும்புவீர்களென்று நினைக்கிறேன்" என்று எடிசன் பேசத்தொடங்கினார்.

"ஆம்" என்று உபாத்தியாயர் பதிலளித்தார்.

"ஒருவிதமான நாரைக் கண்டுபிடிப்பதன்பொருட்டு வையகமெல்லாம் சுற்றிவரக்கூடிய ஒருவர் எனக்கு வேண்டியதாயிருக்கிறது. அதற்காகத்தான் தங்களை அழைத்தேன். தாங்கள் சம்மதிப்பீர்களா?" என்று எடிசன் கடாவினார்.

"எனக்கு அது சம்மதந்தான்" என்றார் ரிக்கால்டன்.

"ஆயின், எவ்வள சீக்கிரத்திற் புறப்பட முடியும்?"

"பள்ளிக்கூடத் தலைவர் பதவியை விட்டு நீங்குவதற்கு நான் அனுமதி பெறவேண்டும்; எனக்குப் பதிலாக ஒருவர் நியமனமாகும்வரையில் நான் காத்திருக்க வேண்டும்; புறப்படுமுன் யாவற்றையும் ஒழுங்குசெய்யச் சில நாளாகும்."

"நாளைக்கே தாங்கள் புறப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்."

"வையகமெல்லாம் நான் போய்ச் சுற்றவேண்டுமென்று விரும்புகின்றீர்கள்; வையகஞ் சிறிதன்று. ஆயத்தமின்றி எங்ஙன முடனே புறப்படுவது?"

"சரி, இஃதொரு பெரியவேலை; இதற்கு மூன்றாண்டுகள் சென்றாலுஞ் செல்லலாம்; அல்லது ஆறு திங்களில் இது முடியலாம். ஆதலின் தங்கள் வேலையிலிருந்து விலகுவதற்குக் கடிதில் அனுமதி பெற்றுக்கொண்டு நமது இரசாயன சோதிப்பு நிலையத்திற்கு நாடோறும் வந்து போய்க்கொண்டிருக்கவேண்டும். இரசாயனமுறையிற் கற்கவேண்டியதைக் கற்றபின் புத்தகசாலை (Library) யிலிருந்து வெப்பமிகுந்த நாடுகளின் (Tropics) நிலைத்துணையுயிர் (தாவரம்) வகைகளைப்பற்றி வாசிக்கவேண்டும்; சிறப்பாகப் பல்வேறு மூங்கில்களைப் பற்றித் தாங்களறிய

வேண்டும்" என்று எடிசன் மொழிந்தார். இஃதன்றி, பற்பல நார்களின் பண்பைக் கண்டறியும்பொருட்டுப் பல கருவிகளைச் செய்து தருவதாக எடிசன் கூறினர். இரண்டு வாரங் கழித்து ரிக்கால்டன் என்பவர் இந்தியாவுக்குப் போகக் கப்பலேறினர்.

கீழ் நாடுகளுக்குச் சென்ற ரிக்கால்டன் இலங்கைத் தீவில் (Ceylon) மூங்கில் வகைகளில் மிகச் சிறந்த வகையைக் கண்டார். இந்த வகைக்கு இராக்ஷச மூங்கில் (Giant bamboo) என்று பெயர். நூறு அல்லது இருநூறு மூங்கில்கள் ஒன்று சேர்ந்த புதராக இது வளரும். நூற்றிருபதடி உயரமும் பத்துமுதல் பன்னிரண்டங்குலச் சுற்றளவு மிதற்குண்டு. இலங்கையிலிருந்து ரிக்கால்டன் இந்தியாவுக்குச் சென்றார். இந்தியாவில் இவர் இமயமலைச் (The Himalayas) சாரலில் ஆறாயிரமடிவரை சென்று, ஆண்டுஞ் சில மூங்கில்களைப் பார்வையிட்டார். இதற்குப் பின் அவர் ஜப்பான் நாட்டை யடைந்து அதன் தலைநகராகிய டொக்கியோ (Tokyo) விலிருந்து தாவர வர்க்கத் தோட்டத்திலும் (Botanical Gardens) பொருட்காட்சிச் சாலையிலும் (Museum) பாரிலுள்ள சகலவகை மூங்கில்களின் மாதிரிகளையுங் கண்டார். எடிசனை விட்டு நீங்கிய காலை அப்பெரியார் ஒருவகை மூங்கிலின் மாதிரியை ரிக்கால்டனிடங் கொடுத்து, "இதையொத்த மூங்கிலைக் கண்டுபிடிப்பீர்களாயின் அதுவே எனக்குப் போதும்" என்று சொல்லியிருந்தார். கீழ் நாடுகளிற் பிரயாணஞ் செய்ததன் பயனாக ரிக்கால்டன் தமக்குக் கொடுக்கப்பட்ட மாதிரியை விடச் சிறந்த மூங்கில் வகைகள் இரண்டு கண்டுபிடித்திருந்தார். இவை சாலுமெனக் கருதி சாவகம் (Java) தீவுகளுக்குச் செல்லவேண்டுமென்றிருந்த நோக்கத்தைக் கைவிட்டு ரிக்கால்டன் அமெரிக்காவுக்குப் பிரயாணமானார்.

சுயதேசம் திரும்பி வந்த ரிக்கால்டன், எடிசனைக் காணச் சென்றபொழுது, தாம் பார்த்ததைப் பின்வருமாறு கூறினர் :- "அமெரிக்காவில் வந்து சேர்ந்தபின் எடிசனை முதன்முதலாகச் சந்திக்கச் சென்றபொழுது நான்

கண்டதை எளிதில் மறவேன். அன்று நான் கண்டவை, மற்றவர்களுக்கு முக்கியமானவைகளாகத் தோன்றுகின்றவை, இடையீடின்றி வேலைசெய்த எடிசனுக்கு எவ்வளவு சிறியவைகளாகத் தெரிந்தன என்பதைத் தெற்றென விளக்கிக் காட்டின. தங்கள் வாழ்நாளைச் சுகத்துடன் கழிப்பதற்குப் போதியதென்று சாதாரண மனிதர் கருதக்கூடிய ஒரு பெருந் தொகையைச் செலவிட்டு இடர்கள் நிறைந்த நீண்ட பிரயாணஞ் செய்து உலகத்தைச் சுற்றிவந்த நான், எடிசனுடைய இரசாயனப் பரீட்சைச் சாலையிற் புகுந்தபொழுது அவர் அங்கு நடந்த வேலைகளை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் அவர் கைகுலுக்கிப் புன்னகை செய்து 'அது தங்களுக்குக் கிடைத்ததா?' என்று கேட்டுவிட்டு, நூற்றுக் கணக்கான தமது ஆராய்ச்சிகளிற் கருத்தைச் செலுத்த விரைந்து சென்றார்.''

இதன்பின் இதுவரையில் மின்சார விளக்கில் உபயோகப்படுத்தப்பட்டுவந்த மூங்கில்நார்க் கரிக்குப் பதிலாகச் செயற்கைக் கரியை (Artificial Carbon) எடிசன் வழங்கப் போவதாக ரிக்கால்டன் என்பவருக்கு அறிவிக்கப்பட்டது. தாம் கீழ் நாடுகளில் திரிந்து கண்டுபிடித்த மூங்கில்களால் யாதாயினும் பயனுண்டாயிற்றோ, இல்லையோ, என்பது ரிக்கால்டனுக்குத் தெரியவில்லை. 1908ஆம் ஆண்டு வரையில் மின்சார விளக்கு அமைப்பதற்கு மூங்கில் நார் உபயோகப்பட்டு வந்தது. பிறகு ஏற்பட்ட மாறுதல்களால் மூங்கில்நாரின் அவசியம் நீங்கிற்று.

மின்சார விளக்கை முதலிற் கண்டுபிடித்தவர் எடிசனல்லர்; அங்ஙனமவர் எப்பொழுதுஞ் சொன்னதுமில்லை. அவர் செய்ததென்னவெனின், தமக்கு முன்னிருந்தவர்கள் ஓர் ஒழுங்கின்றி அவ்வப்போது செய்தவற்றைக் கோவைப்படுத்தி ஒரு முடிவிற்குக் கொணர்ந்ததுதான். இரசாயனப் பரீட்சைச் சாலைகளிலொரு மறைபொருளாயிருந்த மின்சார விளக்கைப் பொதுஜன வாழ்க்கையோடு பொருந்திய ஒன்றாக மாற்றியவர் எடிசனே.

1880ஆம் ஆண்டுக் குளிர் காலத்தில் 'மென்லோ பார்க்'கில் (Menlo Park) யாவரும் வந்து கண்ணுறுமாறு மின்சார விளக்குகள் யாண்டும் அமைக்கப்பெற்று விளங்கின. இதை மின்சார விளக்கு விழாவென்று சொல்லலாம். ஐக்கிய மாகாணங்களின் நாலா பக்கங்களிலும் இருந்து பொதுமக்களை இவ் விழாவுக்குக் கொண்டுவரும்பொருட்டுத் தனிப் புகைவண்டித் தொடர்கள் (Special Trains) ஓடின. மின்சார விளக்கை யொரு வியாபாரப் பொருளாக வழங்கி இலாபம் அடையக்கூடுமாவென்ற கருத்துடனும், மின்சார சாஸ்திரத்தின் வளர்ச்சியைக் கண்டு களிக்கும் நோக்கத்துடனும், பெருந் தொகையினரான மக்கள் ஈண்டு வந்து திரண்டனர். எடிசனுடைய தொழிற்சாலையைச் சுற்றித் தகுந்த இடங்களில் எழுநூறு மின்சார தீபங்கள் இலங்கின. இவற்றிற்கு மின்சாரத்தைக் கொண்டு செல்லுங் கம்பிகள் பெரும்பாலும் நிலத்திற் புதைக்கப்பட்டிருந்தன. மேலே கம்பங்களின் வழியாகக் கம்பிகளைக் கொண்டு போகக்கூடுமாயினும், நகரங்களில் மின்சார விளக்குகளை வியாபாரமுறையில் அமைத்தல்கூடு மென்பதை விளங்க வைப்பதற்குக் கம்பிகள் புதைக்கப்பட்டன. இதுகாறும் நகரங்களில் வியாபார வகையில் வெளிச்சமுண்டாக்க உபயோகிக்கப்பட்ட முறை, நிலக்கரி வளி (Coal Gas) யால் எரிகின்ற விளக்குகளை யமைப்பதுதான். இந் நிலக்கரி வளியை விளக்குகள் எரியுமிடங்களுக்குக் கொண்டுபோவதற்குக் குழாய்களைத் தரையிற் புதைப்பது வழக்கமாக இருந்தது. மின்சாரத்தையும் இந்த வகையிலேயே வழங்கலா மென்பதை யாவருந் தெளிய அறியுமாறு, மேற்சொன்னவண்ணம் கம்பிகள் மண்ணுக்குக் கீழே செலுத்தப்பட்டன. வியாபாரக் கருத்துடைய முதலாளிகள் (Capitalists) எடிசனுடைய மின்சார விளக்குகளை எல்லா இடங்களிலும் பரவச் செய்வதற்குரிய திட்டங்களை மனத்திலுடையவர்களாய் அவரைப் பல கேள்விகள் கேட்டனர். சின்னாளில், பங்குக்கு நூறு டலர் வீதஞ் சேகரிக்கப்பட்ட முதலைக்கொண்டு, மின்சார விளக்கு வியாபாரஞ் செய்யுமொரு சங்கம் நிறுவப்பட்டது. இவ் வியாபாரம் எங்ஙனம்

பெருகிற்றென்பதற்கு ஒரு சான்று போதும்; நூறு டலருக்கு வாங்கப்பட்ட ஒரு பங்கின் விலை நாளாவட்டத்தில் மூவாயிரம் டலராயிற்று. நிற்க, மின்சார விளக்கை எடிசனுடைய தொழிற்சாலையில் நேரே போய்ப் பார்த்தவர்கள், அதன் மேன்மையைப்பற்றி யாவருடனும் பேசலானார்கள். பத்திரிகைகள் இவ் விளக்குகளைப் பெரிதும் போற்றி எழுதின. மக்களது நாட்டம் மின்சார விளக்கின்மேல் நின்றது.

இளநகை புரிதற்குரிய ஒரு வாக்குவாதம் இக்காலத்தில் நடந்தது. மென்லோ பார்க்கில் நடந்த தீபக்காட்சியைக் கண்டுகளித்து மின்சார விளக்கை எடிசனியற்றிய விதத்தை ஆவலுடன் பயின்ற ஓர் உபாத்தியாயர் இருந்தார். தமது உபாத்திமைத் தொழிலை இவர் நடாத்திய இடம் ஒரு சிற்றூராகும். இங்கே அறிவுத்துறைகள் பலவற்றிலும் உபாத்தியாயர் கூறியது சட்டமாயிருந்தது. இவர் தீபக்காட்சியிலிருந்து ஊருக்குத் திரும்பியவுடன், அவ்வூரார் வந்து, மேற்றிசை விசும்பில் தாங்கள் கண்ட ஒரு பெரிய ஒளி இன்னதென்று விளக்கும்படி அவரை வேண்டினர். 'மென்லோ பார்க்'கிற் கண்ட மின்சார விளக்குகளின் அதிசயத்தாற் சால ஊக்கமடைந்திருந்த உபாத்தியாயர், எடிசன் செய்து காட்டக்கூடிய அற்புதங்களுக்கு அளவில்லை என்று துணிந்து, ஊரார் கண்ட அவ்வொளி எடிசனுடைய மின்சார விளக்குகளில் ஒன்றே என்று திண்ணமாக விளம்பினர். இதுபற்றி இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று ஊரார் கேட்க, புகைக்கூண்டில் (Balloon) மின்சார விளக்கை வைத்து மேலே பறக்கவிட்டு எவ்வளவு காலம் அவ் விளக்கு விண்ணில் அவியாமல் எரியுமென்பதைப் பார்க்க நாற்பது மைல்களுக்கப்பாலுள்ள 'மென்லோ பார்க்'கில் எடிசன் பரீட்சை நடத்துகிறாரென்று உபாத்தியாயர் ஐயமின்றிச் சொன்னார். இதனுடன் அவர் நின்றுவிடவில்லை. கடற்கரையில் கப்பல்களுக்கு வெளிச்சத்தின் மூலமாகச் செய்திகளனுப்பும் நோக்கத்துடன் துரைத்தனத்தார் இப் பரீட்சையைக் கவனித்து வருகின்றனரென்றும் அவர் கூறினர். ஊரிலிருந்த எல்லோரும், 'இது சரி' என்று தமது உடன்

பாட்டைத் தெரிவித்தனர். ஆனால், அவ்வூர்த் தபால் நிலையத் தலைவர் (Post Master) இதற்குடன்படவில்லை. அவர், ஊரார் பார்த்த வெளிச்சம் வியாழன், வெள்ளி (Jupiter, Venus) முதலிய கோள்கள் (Planets) ஒன்றினுடைய ஒளியே என்ற கருத்துடையவராயிருந்தார். என்றாலும் ஊர் மக்கள் இக் கருத்தை ஆதரிக்கவில்லை. தாங்கள் கண்டது எடிசனுடைய மின்சார விளக்கே என்ற அபிப்பிராயம் அவர்கள் மனத்திற் குடிகொண்டது. இது சுத்தப் பொய் என்பது தெளிவாகக் காட்டப்படும் வரையில் ஊரார் மனதைவிட்டு அவ்வெண்ணம் நீங்கவில்லை.

எடிசனுடைய மின்சார விளக்குகள் ஐரோப்பாவில் நிகழ்ந்த பெரிய பொருட்காட்சிகளிற் காட்டப்பட்டன. 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு' என்பது போல், காட்டப்பட்ட இடங்களில் எல்லாம் இவ் விளக்குகளை யாவரும் புகழ்ந்தனர். அன்றியும் எல்லோரும் எடிசன் மின்சார விளக்கை உபயோகிக்க விரும்பினர். காட்டுத் தீபோல் அதன் உபயோகம் பரவிற்று. மின்சார விளக்குகள் பொதுமக்களால் எங்கும் உபயோகிக்கப்படவே அவற்றைப் பெருங்கணக்காய்ச் செய்து விற்கப் பல வியாபாரச் சங்கங்கள் தோன்றின. இவற்றின் வரலாறுகளை ஈண்டெழுத இடமில்லை. ஒன்றுபற்றி மாத்திரஞ் சிறிது கூறுவோம். 1889ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தோன்றிய எடிசன் மின்சார விளக்கு வியாபார சங்கங்கள் பல ஒன்றுகூடின. இங்ஙனம் ஐக்கியப்பட்ட சங்கங்களின் மொத்த முதல் ஒரு கோடியே ஐம்பது லட்சம் டாலர். இந்த முதலைக்கொண்டு நடந்த வியாபாரத்தில், வருடத்துக்கு வருடம் ஏறக்குறைய முதல் எவ்வளவோ அவ்வளவு இலாபங் கிடைத்தது! எடிசனுக்குத் தாராளமாகப் பணம் வந்து பெருகிற்று. அவர் தமது மனத்திலமைந்த திட்டங்களைப் பணக் கவலையின்றித் தொடங்கி நடத்தக் கூடியவரானார்.

இன்னுமொன்று சொல்வதற்குளது. பொறாமையினாலும் ஆசையினாலுஞ் சிலர், எடிசனடைந்த வெற்றியிலும்

இலாபத்திலும் தங்களுக்கும் பங்குண்டென்று நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்தனர். இவ் வழக்குகள் நீண்ட காலமாக வாதிக்கப்பட்டதனுல் எடிசனுக்கு நேர்ந்த செலவு பெரிது. எடிசன் சார்பாக முடிவில் தீர்ப்புக் கூறப்பட்டது. மின்சார விளக்கில் இப்பொழுது ஒவ்வொரு வருடமும் புதுப்புது மாறுதல்கள் தோன்றுகின்றன. ஆதலின், எடிசன் இயற்றிய விளக்கிற்கும், இப்பொழுது நமது கண்முன் வழங்கிவரும் விளக்குகளுக்கும் வேற்றுமை பெரிது என்பது அறியற்பாலது.

பயிற்சி :

1. மின்சாரத்தினுல் வெளிச்சம் உண்டாக்கலாமென்பதை முதலிலே கண்டறிந்தவர் யார் ?
2. எடிசன், மின்சார விளக்குச் சம்பந்தமாய் எவ்வித ஆராய்ச்சி செய்தார்?
3. மூங்கில் நார் எதற்கு உபயோகப்படுத்தப்பட்டது ?
4. 'மின்சார விளக்கை முதலிற் கண்டுபிடித்தவர் எடிசனல்லர்' இதை விளக்குக.

---

9. சமந்தகூடம் *

இலங்கையிற் 'சமந்தகூடம்,' 'பிதுருதாலகல,' 'நமுனகுல' முதலான உயர்ந்த மலைகள் பல உள. அவைகளுள் 'சமந்தகூடம்' என்பது சப்பிரமாகாணத்தில் உளது. ஹட்டன் புகையிரத நிலையத்திலிருந்து பதினுன்காவது மைலில் அவ்வுயர்ந்த மலையின் அடி இருக்கின்றது. அம் மலை பழைய பௌத்த நூல்களிலும், இக்காலச் சரித்திர நூல்களிலுஞ் சிறந்தெடுத்துக் கூறப்படுவதால் இலங்கையர், இந்தியர், ஐரோப்பியர், அமெரிக்கர் முதலான

---

*அம்மலை 'சமன்' என்னுந் தெய்வத்தின் உறைவிடமாதலால், 'சமந்தகூடம்', 'சமந்தம்', 'சமனெளி', 'சமனெலை' என்னும் பழைய பெயர்களையுடையது. அதற்குப் 'பாதபங்கயமலை', 'ஸ்ரீபாதமலை', 'சிவனெளிபாதமலை' என்னும் வேறு பெயர்களும் உண்டு. அது இக்காலத்தில் ஆங்கில மொழியில் 'ஆதமலை' (Adam's Peak) என்று சொல்லப்படுகிறது.

கோடிக்கணக்கான மனிதர்களை அது தன் உச்சிக்குக் கவர்ந்திருக்கின்றது. அம் மலையின் உச்சிக்குப் போவதற்குப் பங்குனி சித்திரை மாதங்களே ஏற்றனவாகும். மற்றைய மாதங்களில் அங்கு, காற்றும் மழையும் பனியுங் குளிருங் கடுமையாய் இருக்கும். இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு மாதங்களிலும் ஆங்குள்ள மழையும் பனியுங் குளிருமே சிலராற் பொறுத்துக்கொள்ள இயலாமல் இருக்கின்றன. ஆகவே, குளிரைத் தாங்கிக்கொள்ளக்கூடிய உடல்வலி இல்லாதவர் மழை அங்கி (Rain Coat), கம்பளிப் போர்வை (Woolen Sheet) கொண்டுபோவது நல்லது.

அங்கு போக விழைகின்றவர் ஹட்டனிலிருந்து வட கிழக்கு வழியாய்ச் சென்று ஏறுவதேயல்லாமல், இரத்தின புரியிலிருந்து தென்மேற்கு வழியாயும் ஏறுகின்றனர். இரத்தினபுரி வழி மிக்க கடினமானதாய் இருத்தலின், அவ்வழியாய் ஏறுவதே பலன் தருவதென்பது பௌத்த யாத்திரிகர்தங் கொள்கையாகும். ஆயினும் மேற்றிசை யாத்திரிகர் உட்படத் தமிழர் முதலான பெரும்பான்மை யோர் வடகிழக்கு வழியையே விரும்புவது வழக்கமாய் இருக்கின்றது.

அம் மலையின்மீது ஏறுவதற்கு இராக்காலமே தக்க தாகும். அடி பரந்து நுனி கூர்ந்த வடிவமாய் உள்ள அத் தனிமலை, ஒழுங்கீனமுங் கரடுமுரடுங் கடினமுமான கற்படிகளையும் கற்பாறைகளையும் உடையதாகவும், அதன் மீது போகப்போக, சில இடங்களில் அது மிகச் செங்குத் தாகவும், வழுக்கலுடையதாகவும், அச்சமும் துன்பமும் தருவதாகவும் ஓங்கியிருத்தலின், அதன்மீது ஏறுவோர் காந்த தீவர்த்திகள் (Torch lights) அல்லது பெருங்காற்று விளக்குகள் (Hurricane lamps) கொண்டுபோதல் வேண் டும். நிலாக்காலத்தில் அதன்மீது போதல் நல்லது.

அதன் உயரம் செங்குத்தாக 7360 அடியாகும். அதன்மீது வளைந்து வளைந்து செல்லும் வழியானது 8 மைல் கொண்டதாகும். அவ்வெட்டு மைல்களுள்

முடிவிலுள்ள 3 மைல்கள் மிகச் செங்குத்தான பெருங் கற்பாறைகளாகும். அங்குதான் உயர்ந்த மலையின்மீது ஏறுவதால் உண்டாகும் அச்சமுந் துன்பமுந் துணுக்கெனத் தோன்றும். யாத்திரைக்காரர் அங்கு துன்பநிலைகளுக்கு உட்படல் வேண்டும். அப் பெரும் பாறைக் கற்கள் சிலவற்றின் மீது இருபக்கங்களிலும் உள்ள இரும்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு ஏறுதல் வேண்டும். அங்ஙனம் ஏறுவோர் கவனமின்றிச் சிறிது தவறினால், இரு பாகங்களிலுஞ் செடிகளும் மரங்களும் நிறைந்துள்ள பாதலம் போன்ற பெருந் தடங்களில் வீழ்ந்துவிடுதல் கூடும். ஆசியாக் கண்டத்தின் பல பாகங்களிலுமிருந்து ஆண்டுதோறும் கால்நோய், களைப்பு, மயக்கம் முதலான பெருந் துன்பங்களோடு அதன்மேல் ஏறும் ஆயிரக் கணக்கான மனிதர்களுள், வயதில் முதிர்ந்த ஆண் பெண்கள், உடல்வலியுடைய அவர்தம் மைந்தர்களாற் சுமந்து கொண்டுபோகப்படுகிறார்கள்; சிலர் மேலே செல்வதற்கு உதவியின்றித் தடக்குண்டு தடுமாறினும் திடபக்தியுடன் முடியை அடைந்துவிடுகின்றனர். சிலர் முடிநிலைக்குப் போய்ச் சேரமாட்டாமல், இடையில் வெருண்டு, மயங்கிக் களைப்படைந்து கிடந்து, அங்கிருந்து திரும்பிக் கீழே இறங்கி விடுகின்றனர். பல்வேறு மலைகளின் மீதுள்ள தேயிலை, றப்பர்த் தோட்டங்களில் வசிக்கும் கண்காணிகள், தொழிலாளர்களுள் ஆண் பெண் இருபாலாரும், பௌத்த யாத்திரிகர்களும், வேறு சிலரும் தங்கள் தோள்களின்மீது பொதிகளையும், குழந்தைகளையுஞ் சுமந்துகொண்டு, அச்சமின்றி விரைவாய் அம் மலையில் ஏறி இறங்குகின்றனர். அதற்குக் காரணம் அவர்கள்தம் பழக்கமேயாகும். வெள்ளைக்காரர் இயல்பாகவே மலையேற்றமென்னும் கலையில் மிகுந்த பழக்கமும் ஊக்கமும் உடையவர். அவர் இச் சட உலகிற் காணப்படும் 'இமயமலை'க்குந் தலைமை ஏற்றல் வேண்டுமென்னும் பேரவாவுடைய இனத்தினராவர். ஆதலின், அவர் சமந்தப் பெருங்குன்றின் உச்சிக்கு ஏறிச்செல்வது அவர்க்குப் பெரும் உல்லாசமாகும். இற்றைநாள் நாகரீகத் தமிழருள் மலை ஏறி இறங்கும்

பழக்கமும், இளமையும், உடல் உரமும் உடையவரே அவ்வுன்னத வெற்பில் இலேசாக யாத்திரை செய்யலாம். அத் தனிப்பெரும் அடுக்கல்மீது ஏறுதல் உலகத்தில் ஆங்காங்குள்ள மக்கள் தம் முயற்சியால் தாழ்ந்தநிலை கடந்து மெல்ல மெல்ல மேலேறுதல்போல் இருக்கும். அன்றியும், அது கீழ்நிலையுள்ள மனமுடையோர் தம் மனத்தைச் சிறிது சிறிதாக மேல்நிலைக்குக் கொண்டுபோதல் போலவும் இருக்கும். அப் பொருப்பின் முடிநிலைக்கு ஏறுதல் நிலையற்ற இவ்வுலகத்திலிருந்து ஆகாய வழியாய்த் தெய்வலோகத்திற்குப் போதல் போலவுந் தோன்றும்.

ஆகாயத்தை அளாவி உயர்ந்து, மேகங்களாற் சூழப்பெற்றுள்ள அச் சமந்தச் சிலம்பின் கூடத்தில் நாம் நின்று சுற்றிப் பார்த்தால், அதன் கீழே உள்ள எல்லாப் பெருமலைகளும், பொற்றை மலைகளுங் குறுகிப் பருத்து ஆகாயத்தைப் பற்றிச் சேர வருந்தி நிமிர்ந்து, எழும்பி வருவன போலத் தோன்றும். அக் கொடுமுடியின் நாற்புறமும் உள்ள அகண்ட வெளியின் கீழ்ப் பரந்து கிடக்கும் பனியின் பரப்பை நம் கண்கள் கண்டு களிக்கும். இன்னமுந் திரும்பித் திரும்பி உற்றுநோக்குவோமாயின், வடக்கில் நெல்லும் புல்லுந் தேயிலையும் நிறைந்த கண்டிநாடும், அதைச் சுற்றியுள்ள காடுகளும், கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் இயற்கைவளஞ்செறிந்த இடங்களும், வெள்ளிய வெட்ட வெளிகளும், வெகு தொலைவில் ஓடும் வெள்ளிக் கம்பிகள் அன்ன ஆறுகளும், அவையொத்த காட்சிகள் இன்னும் பலவும் நந்தம் கண்களுக்கு நனிமிக விம்மிதமாய்ப் புலனாகும். ஆங்கு இயற்கைத் தேவி நம் கண்ணையுங் கருத்தையுங் கவருமாறு காட்டும் இயற்கைப் பெருங் காட்சிகள் நம் கண்ணிற்கும் உள்ளத்திற்கும் பெருவியப்பையும் இன்பத்தையும் பயக்கும். இயற்கை நிலையமாகிய அம் மைவரை இயற்கை முதல்வியின் இயற்கைக் கோயிலாகும். மாபெரும் இயற்கைத் தேவியின் காட்சி அம் மலையிலும் அதனைச் சுற்றிலும் யாண்டும் பொலிவதாகின்றது. பரம ஞானியரா யுள்ளோர் இயற்கைப் பொருள்களையெல்லாம் பராசக்தியின் அளப்பரும் அற்புதக்

காட்சிகளாகவே கண்டு, அத் தேவியின் திருவருள் பெறுவர். அத் தெய்வமலையின் காட்சியுஞ் சிறப்பும் இயற்கை இன்பத்தில் தோயும் இயற்கைப் பாவலர்தம் நல்லிசைப் பாட்டுகளுக்கு உரியனவாகும். அப் பாட்டுகள் இயற்கை யழகில் தங் கருத்தைப் பதியவைத்துள்ள பேரறிஞர்க்குப் பெரும் பேரின்பம் பயப்பனவாகும். இது நிற்க, சில சமயங்களில் வானத்தின் மாறுபட்ட நிலைமை களிற் சூரியோதய காலத்தில் அச் சைலத்தின் சாயை அதன் குவட்டில் நிற்போரால் அற்புதக் காட்சியாகக் காணப்படுகின்றது. மற்ற அடிவானத்தின்கண் கதிரவன் எழுச்சியானது இயற்கை நுண்நூல் (Natural Science) அறிவுபெறுது, புராணக் கற்பனைகள் வயப்பட்ட மனத் தினர்க்குப் பலவேறு திரிபுகளோடு காணப்படுகின்றது.

இனி, அம் மலைக்கு இத்துணைப் பெருமை உண்டான மைக்கு ஒரு விசேட காரணம் என்னையெனின், அகல மற்ற அதன் உச்சிமீமிசை உள்ள திருப்பாத உருவம் ஒன்ருகும். அது சுண்ணத்திஞற் சித்திரக் கலாவன்மை சிறிதுமின்றி நனி மிகப் பெரிய உருவமாக அமைக்கப்பட் டுள்ளது. அது யாருடைய திருப்பாதத்தைக் குறிக்கின்ற தென்பது பௌத்த கன்ன பரம்பரை அதிசயக் கதைக ளாலும், பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களாலும், இஞ்ஞான்றைச் சரித்திர நூல்களாலும் அறியற்பாலதாகும்.

இற்றைக்கு நாலாயிரத்து நானூற்று எழுபது ஆண்டுக ளுக்கு முன் வட இந்தியாவில் தமக்கென வாழாது பிறர்க் குரியாளராய்ப் பெருந் துறவு பூண்டு, மருளுற்ருர் யாவர்க்கும் மனக் கனிவோடு அருளறம் ஓதியருளிய கௌதம புத்தரானவர், முதுகுடி மக்களாகிய இயக்கர்க ளும் நாகர்களும் வசித்துக்கொண்டிருந்த இவ்விலங்கைக்கு ஆசிகூறவும், இதனைத் தமக்குப் பிற்காலத்தில் தம் சமயத்தைப் பலநூற்றுண்டுகளுக்கு வளர்த்தற்குரிய சாதி யார் வாசஞ்செய்தற்கேற்ற இடமாகவும் சாரண பிக்குக ளோடு மூன்று முறை ககன மார்க்கமாய் வந்துபோயின ரென்பதும், அவற்றுள் ஒரு முறை சமன் என்னும் தெய்

வத்தின் வேண்டுகோட் கிணங்கி அம் மலையின் மீது தம் தூய திருப்பாதத்தின் பதிவை விடுத்துப் போயின ரென்ப தும் சிங்கள பௌத்த மக்களுடைய மிகப் பழைய கன்ன பரம்பரைக் கதையாகும். இக் கதையே சிங்களர்களுடைய இலங்கைப் பௌத்த சமய சரித்திரங் கூறும் பழைய பாளிப் பாஷைப் பாட்டுடை நூல்களாகிய 'மகாவம்சம்', 'தீபவம்சம்' என்பனவற்றிலும் எழுதப்பட்டிருக்கின்றது. அதுபற்றியே அம் மலை 'பாதபங்கய மலை' என்றும், 'ஸ்ரீபாத மலை' என்றும் பெயர்கள் பெறுவதாயிற்று. அதனால் அம் மலையின் உச்சிமீமிசை உள்ள புத்த பாத பீடிகை சிங்கள பௌத்தர்களுடைய யாத்திரைக்கும், வழிபாட்டிற்கும் உரிய சிறந்த தலமாய் விளங்கி வரா நிற்கின்றது.

இது நம்முடைய பழைய செந்தமிழ்க் காப்பியங்களுள் ஒன்ருகவும் பௌத்த சமய நம்பிக்கை, வழிபாடு தத்துவ ஞானம் முதலானவைகளை நன்கு அறிவிக்கும் நித்திலமாக வும் உள்ள 'மணிமேகலை'யினுல் விளங்கும். இக்காலத்தில் யாழ்ப்பாணம் என்று வழங்கப்படும் *மணிபல்லவம் என்னும் இத்தீவிற்கு, ஆயிரத்து எண்ணூறு ஆண்டுக ளுக்கு முன்பு காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து போந்த இளமையும் அழகும் அறிவும் வாய்ந்த மணிமேகலை என்னும் தவப்பெண்ணணவள், இங்கு தீவதிலகை என் னும் பௌத்தசமயப் பிக்குணியைக் கண்டு, "யார் அப்பா நீ?" என்று வினுவ, அப் பிக்குணி, தன்னைக் குறித்து விடை பகர்ந்தவிடத்து, அம்மலை உச்சியின் பெருமையைப் பற்றிப் பின்வருமாறு கூறினள் :

"ஈங்கித னயலகத் திரத்தினத் தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலிற்
ருெழுது வலங்கொண்டு வந்தே னீங்கு."

* மணிபல்லவம் என்பது அப் பண்டைநாளில் இரத்தினத் தீவாகிய இலங்கைமாதேவிக்கு ஓர் உறுப்புப்போலச் சிறந் திருந்ததாகும்.

அந் நிகழ்ச்சியின் விரிவை 'மணிமேகலை'. என்னும் அணிதிகழ் நூலின்கண் 11ஆவது பாத்திரம் பெற்ற காதையானும், இவ்வாசிரியப்பா அடிகளின் கருத்தை, இவற்றிற்கு மஹாமஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரைகளானும் அறிக.

இன்னும் அம் மலையின் பெருமையை அறியுமிடத்து, அது மாணிக்கக் கற்கள் பிறக்கும் இடங்களாற் சூழப் பெற்றுள்ளதாகும். இது 'மணிமேகலை'யைப் போன்ற அரும்பெருந் தமிழ்க் காப்பியமாகிய 'சிலப்பதிகார'த்தின் கண் அந்நாளில் மதுரையில் இருந்த இரத்தினக் கடையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளவிடத்து, அந் நூல் உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் என்பவரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

"மாணிக் கத்தியல் வகுக்குங் காலைச்
சமனொளி சூழ்ந்த வொருநான் கிடமும்"

என்னும் மிகப் பழைய அரிய மேற்கோள் பாட்டினுல் அறியப்படுகின்றது. அந்த நான்கு இடங்கள் 'வலவை', 'மகாவலி கங்கை', 'கம்பளை', கல்லணை' என்னும் நான்கு ஆறுகளாம் என்பது,

"கருதிடின் வலவை மாவலிகங்கை கம்பளை கல்லணை யென்னுந்
தருசம னொளிசூழ் நதிகணன் கிடமாம்"

என்று எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பெரும்பற்றப் புலியூர் நம்பியார் தாமியற்றிய 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண'த்தில் மாணிக்கம் விற்ற திருவிளையாடலில் அருமையாகப் புலப்படுத்தியவாற்ருல் செவ்வனே விளங்குகின்றது. இவ்வரிய விஷயங்கள் கி. பி. பத்தாம் நூற்ருண்டில் எழுந்து விளங்கிய 'கல்லாடம்' என்னும் ஓர் அரிய தமிழ் நூலாலுந் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வுண்மைகளெல்லாம் இரத்தினபுரத்தில் நிலத்தின் கீழ் மறைபொருளாக உள்ள இரத்தினக் கற்கள் இன்றும் அகழ்ந்தெடுக்கப்படுகின்றமையால் நிலைபெறலாகின்றன.

இனி, இலங்கையிலுள்ள பெருமலைகள் சில சிங்கள மக்களாற் சில பெயர்களாலும், தமிழ் மக்களால் வேறு பெயர்களாலும் வழங்கப்படுகின்றமை போலவே, சமந்த கூடமும் தமிழ்ச் சைவர்களால் 'சிவனொளிபாதமலை' என்று வழங்கப்பட்டு அதன் முடியிலுள்ள திருவடியானது சிவ பெருமான் திருவடியென்று உரிமையுடன் தொழப்படு கின்றது. இதைப்பற்றிய ஆராய்ச்சியை ஈண்டுச் சேர்க்கப் புகின், இக் கட்டுரை விரியும். இனி, அம் மலையை 'ஸ்ரீ இராம பாதமலை' என்பாருஞ் சிலர் உளர். இவை யெல்லாம் ஒரு புறம் இருப்ப, யூத சமயத்தார் கொள்கை யின் வண்ணம் மனிதர்களின் முதல் தந்தையாகிய ஆதம் என்பவருடைய பெயரால் அம் மலை 'ஆதமலை' (Adam's Peak) என்றும் அழைக்கப்பட்டு இஸ்லாம் மார்க்கத்தின ராலும், கிறிஸ்துவ மார்க்கத்தினராலும் தத்தம் யாத்திரைத் தலமாகக் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாறு இலங்கையில் ஓங்கி உயர்ந்துள்ள சமந்த கூடம் ஒரு சமயத்தார்க்கே தனி உரிமைப் பொருளாக நில்லாமல், பல சமயத்தவர்களுக்கும் பொதுவாய், உரிமை யுடையதாய், அவர்கள்தம் வழிபாட்டிற்கும் வணக்கத் திற்கும் இடமாகி ஒளிர்கின்றது. அம் மலை சமரசக் காட்சி யும் சமரச உணர்ச்சியும் அளிப்பதால் அதில் உயர்ந்த சமரச மணங் கமழ்கின்றது. உயர்ந்த சமரச ஞானமே மக்கள் சமய வாழ்க்கையின் முடிந்த பெருநிலையாகும். அப் பெருமலையை நோக்குமிடத்து, பெருநிலையாகிய அச் சமரசத்தையே குறிக்கொண்டு நிற்பதாகத் தோன்றும். சமய வகைகளில் அச் சமரசநிலையே இலங்கை மக்கள் ஒற்றுமை வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்.

பயிற்சி :

1. சமந்தகூடத்தின் நிலையம் எது?
2. அது பலசமயத்தவராலும் போற்றப்படுவதேன்?
3. தமிழ் இலக்கியங்களிற் சமந்தகூடம் எவ்விதம் இடம்பெறுகிறது? விளக்குக.

10. சரித்திர நூல்களைக் கற்பதனுல் வரும் பயன்

முற்காலத்திலிருந்த மனிதருடைய செயல்களையும், உலகத்திலுள்ள பல்வகைப்பட்ட சனங்கள், சாதியார்கள், குலங்கள் என்பவைகள் விருத்தி யடைந்தமையையும் அழிவடைந்தமையையும் விரித்துக் கூறும் நூல்களைப் படிப்பது உலக வாழ்விற்குப் பெரும் பயன் தருவதாகும்.

பண்டைக்காலத்து நிகழ்ந்த இராசகாரியத்தைக் கூறுவதே சரித்திரமென்பர் சிலர். இது சரியன்று. உண்மையாக நோக்குமிடத்துச் சரித்திரம் முற்காலத்தில் உலகத்து நிகழ்ந்த சமயாபிவிருத்தி, சனபிவிருத்தி, தனவிருத்தி, கல்வி விருத்தி, அரசியல் விருத்தி முதலிய சம்பவங்களெல்லாவற்றையுங் கூறுவதாகும்.

உலகத்திலிருந்த பெரியோரின் சீவிய சரிதத்தைக் கூறுவது சரித்திரம் என்பாரும் சிலருளர்.

உலகத்து நிகழும் சம்பவங்கள் அடியோடு மாறுவன வன்மையின் சரித்திரங் கற்பது மிக்க பயனுடைத்து. முற்காலத்து நிகழ்ந்த சம்பவங்களே அதிகமாய் இக்காலத்தும் நிகழ்கின்றன. ஆகவே, அக்காலத்துச் சம்பவங்களின் ஆக்கக் கேடுகளைக் கற்பதனுல் அறிவுடையராகின்றேம். சரித்திரக் கல்வி இவ்வாறு நமது அனுபவத்தை விருத்தி செய்து மக்களையும் மற்றவைகளையும் பற்றி நாங் கொள்ளும் எண்ணங்களை வலியுறுத்துகின்றது.

கல்வியினுல் வரும் பயன் இருவகைப்படும். ஒன்று நமது உயிர் வாழ்க்கைக்கு, அன்றேல் உயிர் வாழ்வின் பொருட்டு மேற்கொண்ட தொழிலுக்கு உதவியாவது. மற்றென்று நமது அந்தக்கரணங்களைத் தொழிற்படுத்தி அவைகளை வலியுறுத்துவது. தக்க முறைப்படி கற்ருல், எல்லாக் கல்வியும்—சரித்திரக் கல்வி ஒன்று மாத்திரமன்று, மற்றெவ்வகைப்பட்ட கல்விகளும்—நமது அந்தக்கரணங்

களை விருத்தி செய்வதற் கேதுவாகும். ஒரு கல்வி ஓரந்தக் கரணத்தையும், மற்றொன்று வேறோரந்தக்கரணத்தையும் வளரச்செய்து வலியுறுத்தி உலக காரியங்களை ஐயந்திரிபின்றி உணருமாறு அவைகளைப் பயிற்றுகின்றன. இங்கே சரித்திரம் கற்பதனால் வரும் பயனென்று சொல்லப்பட்டது பெரும்பாலும் நமது உயிர் வாழ்க்கைக்கு உதவியாகும் தன்மையினை. அஃதாவது, நமது முன்னிருந்தோருடைய வாழ்வினையும் செயலினையும் நமக்கெடுத்துக்காட்டி இக் காலத்துள்ள மனிதரையும் மற்றவைகளையும் உள்ளவாறுணரத் துணைசெய்வதனை.

நமது காலத்தில் நிகழும் சம்பவங்களையும் நம்மோடோடும் மனிதரையும் பற்றி நாம் கொள்ளும் எண்ணங்கள், நமக்குள்ள விருப்பு வெறுப்புக்களாலும் கண்ணோட்டத்தினாலும், மிகவும் உண்மைக்கு மாறாகவிருக்கும். நெடுங் காலத்துக்கு முன்னிருந்த மனிதரையும் அவர்களுடைய செயலையும் எடுத்துக் கூறும் சரித்திரங்களில் இந்த விருப்பு வெறுப்புக்கள் செல்வதற்கிடமில்லை. அதனால் அவர்களைப் பற்றி நாமடையும் அபிப்பிராயம் அதிகம் உண்மைக்கு மாறாக இருக்கமாட்டாது. சரித்திரத்தை முற்காலத்து நிகழ்ந்த இராசகாரியங்களின் வரலாறென்று ஓராசிரியர் கூறுவர். சரித்திர நூலார் கூறும் இராசகாரிய வரலாற்றிற் கட்சிபேதங்களாலுண்டாகும் பொய்ம்மையும் பொறாமையும் ஒழிக்கப்பட்டு மனிதர்களும் அவர்கள் செயல்களும் உள்ளது உள்ளபடி காணப்படும்.

சரித்திரத்தை முற்காலத்து இராச காரியங்களின் வரலாறென்று சொல்லுவது சரியன்று. அது கூறுவது கட்சி பேதங்களின் வரலாறென்று சொல்வதும் சரியன்று. அது கூறுவது கட்சி பேதங்களின் வரலாறன்று; மக்கட் கூட்டத்தின் வரலாறு. உண்மையாகப் பார்க்குமிடத்துச் சரித்திர நூலாசிரியரின் கடமை முன்னிருந்த அரசர்களின் செயலையும் அவர்களின் வைபவங்களையும், அவர் பொருத போர்களையும் கூறுவதன்று; பின்னை யென்னையெனின், முன்னிருந்த மனிதரின் வாழ்வையும் செயலையும், கல்வி,

செல்வம், சமயம், சனசம்சர்க்கம், கைத்தொழில், சிற்பம் முதலியவைகளில் அவர்களடைந்த விருத்தியையும் எடுத்து விளங்கக் காட்டுவதேயாம். சரித்திரத்தைக் கல்வி கேள்வி வீரம் முதலியவற்றுற் பெரியோர்களின் சரிதம் என்று கூறுவதும் சரியன்று. சரித்திரம் இப் பெரியோர்களின் சரித்திரத்தை மாத்திரமன்று, ஆதிதொட்டு உலகத்து நிகழ்ந்த ஒழுக்க வழக்கங்களை எல்லாம் உள்ளது உள்ள படி கூறவேண்டும்.

இவ்விதமாக எழுதப்பட்ட சரித்திர நூல்களைக் கற்பதனுற் பெரும் பயனுண்டு. மக்கள் படும் வருத்தங்களும் துன்பங்களும் ஆசைகளும் முதலாகிய உலக வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் காலத்துக்குக் காலம் மாறுவன வல்ல. முற்காலத்தில் நிகழ்ந்தவைகளே பிற்காலத்தும் நிகழ்வன. அவைகளின் ஆக்கக் கேடுகளால் இக் காலத்துச் சம்பவங்களின் ஆக்கக் கேடுகளை யறிந்து கொள்ளலாம். இவ்விதமாகச் சரித்திர நூல்களை நாம் சரியாக ஆராய்வோமாயின், அவை நமக்கு எரிச்சலோடும் மயக்கத்தோடும் சேராத பெரியதோருண்மை யனுபவத்தைப் பயக்கும். அநுபவம் இயற்கையிற் கொடியதாயினும் சரித்திர ஆராய்ச்சியால் வருவது அத்தன்மைத்தன்று; அது கொடுமை தினையளவுமின்றி அறிவு பனையளவாயிருக்கும். பிறரடைந்த கஷ்ட நஷ்டங்களால் நாம் பேரிலாபமடைகின்றேம். உலகத்தில் நமக்குமுன் சென்றேருடைய அடிச்சுவடுகள் நமக்கு வழிகாட்டிகளாக நின்று நம்மைப் பள்ளத்தில் வீழாமலும், மேட்டிலேருமலும் விலக்குகின்றன. மனிதருடைய இயற்கை முன்னிருந்ததற்கு இப்போது சிறிதும் மாறுபடவில்லை. காலம் பலவிதமாக மாறுபாடடைய அதனேடு விகற்பமடையாது எப்போதும் ஓரியல்பாயிருப்பது அதுவொன்றே. ஆதலான், முற்காலத்து நடந்த செயல்களிலிருந்தும் வர்த்தமான காரியங்களோடு பெரிதும் வேறுபாடில்லாத காரியங்களிலிருந்தும் இப்போதுள்ள நமது காரியங்களை நடத்தும் முறையை நாம் கற்றுக்கொள்ளலாம். முற்காலத்து வரலாறு கூறும் சரித்திரவாராய்ச்சியால் இப்போதுள்ள காரியங்

களிற் கணிசமாய் அவ்வப்போது நிகழ்வனவற்றினின்றும் நிலையுதலுடையவாயவற்றிற் கெப்போது மியல்பாயுள்ள வைகளை வேறுபடுத்துணரலாம். உதாரணமாக, முற்காலத் திருந்த கலாசாலைகளின் வரலாற்றையும் தேசங்கள் தோறும் அவைகளின் விருத்தியையும் தன்மையையும் மாறுதல் செய்தவைகளையும் இடையில் அழிவுறாது நிலைத்த வற்றின் சித்திக்குக் காரணமாயிருந்தவைகளையும், அவைக ளடைந்த சித்தியின் தன்மையையும் கற்றறிதல் அவ்வித மான புதியதொரு கலாசாலை தாபிப்பதற்கு இன்றி யமையாத துணையாயிருக்கும். இனி, பேர்போன பிரான்சு தேசக் கலகத்திலிருந்து பேர்க் (Burke) முதலிய பெரும் புலவர்கள் எத்துணைப் புத்திமதிகள் எடுத்துக் கூறினர். அத்தகையோர் துணையைக் கொண்டு வேறொரு பெரிய சம்பவத்தின் காரண காரியங்களைக் கற்றுணர்தல் பெரும் பயன்றராது போகாது. பிரான்சுக் கலகத்தால் நாம் அறிந்துகொண்டன பல; அவற்றின் உணர்ச்சி இக் காலத்திற் கின்றியமையாதது. அவற்றை யறியவேண்டி யோர் அவற்றினை யறியாது கழித்தல் அவர்க்குப் பெருங் கேடு பயக்கும்.

பயிற்சி :

1. சரித்திரக் கல்வி வாழ்வுக்கு எவ்வாறு வழிகாட்டும்?
2. உண்மைச் சரித்திரமாவது யாது ?
3. கட்சிகளின் சரித்திரம் சரித்திரம் எனப்படுமா ?

11. நச்சுப் பொய்கை

பாண்டவர்கள் வனவாசஞ் செய்யுங் காலத்திலே ஒருநாள் நீரருகிய ஒரு வனத்திடை நடப்பாராயினர்கள். வெயிற் கொடுமையாற் சோர்ந்து நீர்வேட்கையுற்று வீழ்ந்தார்கள். அப்பொழுது நகுலன் ஒரு வானளாவி உயர்ந்த மரத்திலேறிச் சமீபத்திலே நீருளதோவென்று நான்மருங்கும் பார்த்தான். ஒரு திசையிலே நீர்ப்புட்களினது ஒலியும், ஓங்கி வளர்ந்த விருட்சக் கூட்டங்களும் அவனுக்குப் புலப்பட்டன. உடனே நகுலன் புறப்பட்டுச் சென்று பளிங்குபோல் தெளிந்த நீரினையுடைய ஒரு தண்ணீர்த் தடாகத்தைக் கண்டான். கண்டு அதனைப் பருகுமாறு அந் நீர்க்கரையை யடைந்தான். அடைதலும், "இந் நீர் நச்சுநீர் ; அதுவுமன்றி என் காவலிலுள்ளது ; அதனை உண்பையேல் உயிர் துறப்பை" என்றோர் அசரீரி ஒலித்தது. நகுலன் அதனைப் பொருட்படுத்தாது தடுத்தற்கரிய நீர்வேட்கையால் அந்நீரையுண்டு உடனே உயிர்துறந்தான்.

நகுலன் மீண்டுவரத் தாழ்ந்தமை கண்டு உதிஷ்டிரன் சகாதேவனை அனுப்பினான். அவனும் போய் அவ்வாறே மாண்டான். அவனும் மீளாமையால் உதிஷ்டிரன் அர்ச்சுனனை அனுப்பினான். அவனும் போய் அவ்வண்ணமே உயிர் துறந்தான். அப்பால் உதிஷ்டிரன் வீமனை அனுப்ப அவனும் போய் மாண்டான். அதன் பின்னர், உதிஷ்டிரன் ஆச்சரியவசத்தனாய்த் தானுமப் பொய்கையை அடைந்தான். அங்கே நால்வரும் இறந்து கிடத்தலைக் கண்டு நெஞ்சம் புண்படக் கவன்று நின்றான். இறந்து கிடப்பவர் முகத்தை நோக்கினான். இறந்தவர் முகம் போலிராது காந்தியோடு கூடியிருப்பக் கண்டு ஒருவாறு தெளிந்து, இம் மாயத்தின் காரணத்தைப் பின்னர்ச் சிந்திப்பாமென்றெண்ணித் தாகம் தணிக்கும்பொருட்டு நீர்க்கரையை யடைந்தான். உடனே முன்போல அசரீரி ஒலித்தது. உதிஷ்டிரன் அவ் வசரீரியை நோக்கி, "நீ யார் ?" என்றனன். அவ் வசரீரி "யான் யக்ஷன்"

என்று கூறி வெளிப்பட்டு. "நான் வினவும் வினக்களுக்கு விடை கூறுவையேல், இந்நீரை அருந்த விடுவேன்" என்றது உதிஷ்டிரன் வினவக்கடவை யென்ன, அதுவும் வினவத் தொடங்கிற்று.

1. ஆதித்தனை உதிக்கச் செய்வது யாது? அவனுக்குச் சமீபத்திலே இருப்பவர் யார்? அஸ்தமிக்கச் செய்வது யார்? அவனுக்கு ஆதாரம் யாது?

"உதிக்கச் செய்வது பிரமம். சமீபத்திலே இருப்பவர் தேவர்கள். அஸ்தமிக்கச் செய்வது தர்மம். ஆதாரம் சத்தியம்" என்று உதிஷ்டிரன் விடுக்க, யக்ஷன் மீண்டும் வினவுவான்.

2. ஒருவனைப் பண்டிதனுக்குவது யாது? ஒருவனுக்கு மெய்ம்மையான உயர்வைத் தருவது யாது? ஒருவனுக்குத் துணையாவது யாது? ஒருவனை விவேகியாக்குவது யாது?

வேத ஞானமே பண்டிதனுக்குவது. தவத்தினுலுயர்வு அடையப்படுகின்றது. விவேகமே உண்மையான துணை. பெரியோர் சேவையே விவேகியாக்குவது.

3. உழவர்க் கின்றியமையாதது யாது? ஆக்கத்தை விரும்புவோர்க்கு இன்றியமையாதது யாது? பேறுகளுட் சிறந்தது யாது?

உழவர்க் கின்றியமையாதது மழை. ஆக்கத்துக் கின்றியமையாதது பசு. பேற்றினுட் சிறந்தது நன்மக்கட் பேறு.

4. அறிவும் சுவாசமும் உலகத்தாரால் மதிப்பும் பொறிகளால் நுகரப்படும் போகங்களும் உடையவனுகியும் உயிரில்லாதிருப்பவன் யாவன்?

தெய்வத்தையும், விருந்தினரையும், சுற்றத்தாரையும், பிதிர்களையும், தன்னையும் திருப்தி செய்யாதவன் யாவனே, அவன் சுவாசமுடையவனே யாயினும் உயிரில்லாதவனே யாவன்.

5. உலகத்தினும் பெரியது யாது? வானத்திலு முயர்ந்தது யாது? காற்றினுங் கடிய வேகமுடையது யாது? புல்லினும் அதிகம் யாது?

அன்னையே உலகத்தினும் பெரியவள். தந்தையே வானத்திலும் உயர்ந்தோன். மனமே வாயுவினுங் கடிய வேகமுடையது. எண்ணங்களே புல்லினுந் தொகையான் மிக்கன.

6. கண்மூடா துறங்குவன யாவை? இருதயமில்லாதது யாது? தன் பலத்தோடு விரிவதியாது? ஈன்றவற்று ளியங்காதது யாது?

கண்மூடா துறங்குவன மீன்கள். இருதயமில்லாதது கல். தன் பலத்தோடு விரிவது நதி. இயங்காதது முட்டை.

7. அந்நியதேசஞ் சென்றவனுக்கு நட்பாளன் யாவன்? இல்லறத்தானுக்குத் துணை யார்? நோயாளனுக்கு யார் துணை? மரண காலத்தே துணை யார்?

அந்நிய தேசஞ் சென்றவனுக்கு அந்நியனே துணை. இல்லறத்தானுக்கு மனைவியே துணை. நோயாளனுக்கு வைத்தியனே துணை. மரிப்பவனுக்குத் தருமமே துணை.

8. தனியே சஞ்சரிப்பது யாது? மீண்டு மீண்டு பிறப்பது யாது? குளிருக்கு மருந்து யாது? வயல்களுட் பெரியது யாது?

சூரியன் துணையின்றி அலைவது. சந்திரனே மீண்டும் மீண்டும் பிறப்பது. அக்கினியே குளிருக்கு மருந்து. பூமியே வயல்களுட் பெரியது.

9. சமயத்துக் குறுதியாவது யாது? கீர்த்திக் குறுதி யாது? மோட்சத்துக் குறுதி யாது? இன்பத்துக் குறுதி யாது?

சமயத்துக்குறுதி இரக்கம். கீர்த்திக்குறுதி கொடை. மோட்சத்துக்குறுதி சத்தியம். இன்பத்துக்குறுதி நல்லொழுக்கம்.

10. எல்லாப் புகழினுஞ் சிறந்தது யாது? செல்வத்துட் சிறந்தது யாது? ஊதியங்களுட் சிறந்தது யாது? இன்பத்துட் சிறந்தது யாது?

சாமர்த்தியமே சிறந்த புகழ். அறிவே சிறந்த செல்வம். ஆரோக்கியமே சிறந்த ஊதியம். திருப்தியே சிறந்த இன்பம்.

11. தருமங்களுட் சிறந்தது யாது? சமயங்களுட் சிறந்தது யாது? துன்ப நிவிர்த்திக்கு உபாயம் யாது? யாரோடு கொண்ட நட்பு நீங்காது?

அகிம்சையே பரம தருமம். வைதிக சமயமே சிறந்தது. துக்கநிவிர்த்திக் குபாயம் மனத்தை யடக்குதல். பெரியோர் கேண்மையே நீங்காதது.

12. ஒருவன் உயர்ச்சியின் பொருட்டு விடவேண்டியது யாது? எதனைத் துறந்தால் துக்கம் நாடாது? செல்வத்தின் பொருட்டுத் துறக்கத்தக்கது யாது? இன்பத்தின் பொருட்டுத் துறக்கத்தக்கது யாது?

உயர்ச்சி வேண்டுவோன் அகங்காரத்தைத் துறத்தல் வேண்டும். கோபத்தைத் துறந்தால் துக்கம் நாடாது. இச்சையைத் துறத்தல் செல்வத்துக்கேது. பேராசையைத் துறத்தல் இன்பத்துக்கேது.

13. அறிவாவது யாது? சமாதானமாவது யாது? அடக்கமாவது யாது?

பதிஞானமே அறிவினுட் சிறந்தது. மனச் சமாதானமே சமாதானங்களுட் சிறந்தது. மனத்தை யடக்கலே அடக்கமாம்.

இவ்வாறாக எண்ணிறந்த வினாக்கள் வினவப்பட்டன. அவற்றுக்கெல்லாம் உதிஷ்டிரன் தக்க விடையளித்தான். அது கண்ட யக்ஷன் மகிழ்ந்து, "நான் வினவியவற்றுக்கெல்லாம் தடையின்றி விடையீந்தனை. அதனால் மிக

மகிழ்ந்தேன். உன் சகோதரருள் ஒருவன் உயிர்பெறக் கடவன்" என்ருன். அதற்கு உதிஷ்டிரன், "நகுலன் உயிர்பெறக் கடவன்" என்ன, யக்ஷன் "வீமனன்ருே உனக்குத் துணைவன்; அர்ச்சுனனன்ருே உன் உயிர் போன்றவன்; அங்ஙனமாகவும் நகுலனை நீ விரும்புவது யாது பற்றி" என்ருன். உதிஷ்டிரன் "தருமத்தை நோக் காது தனது கருமத்தை நோக்கலாகாது. ஆதலால் என் தாய்க்கு நான் புத்திரனுயிருக்கின்றேன். நகுலன் இறப் பினே அவன் தாய் புத்திரனில்லாதவளாவாள். ஆதலால் அவனே எழும்புக" என்ருன்.

இதுகேட்ட யக்ஷன், உதிஷ்டிரனைப் பார்த்து, "இத் துணைத் தரும சொரூபியாகிய உனக்குத் துன்பம் வருதல் தகாது. ஆதலால் உன் தம்பியர் நால்வரும் உயிர்பெறக் கடவர்" என்ன, யாவருந் துயிலொழிந் தெழுந்தாற் போன்றெழுந்தனர்.

பயிற்சி :

1. பாண்டவர்களில் மற்றையோரிடம் காணப்படாத எக்குணம் உதிட்டிரனிடம் காணப்பட்டது?
2. நச்சுப்பொய்கைச் சம்பவம் நடைபெற்றதெதனுல்?
3. 'மனத்தூய்மையே உயர்ந்த வாழ்வு' என்பது எவ் வாறு இப்பகுதியிற் கூறப்பட்டுள்ளது?

12. வாலிவதம்

களம் I

இடம் :— உருசியமூக மலை
காலம் :—முற்பகல்.
பாத்திரங்கள் :—ஸ்ரீராமன், இலக்குவன், அனுமான், சுக்கிரீவன்.

[தந்தை தசரதச் சக்சரவர்த்தியின் கட்டளைப்படி, வனவாசஞ் செய்யப் புறப்பட்ட ஸ்ரீராமன், பஞ்சவடி என்னுமிடத்திற் றனது பிரிய பத்தினியோடுந் தம்பியோடுந் தங்கியிருந்தான். இலங்கைக் கரசனுகிய இராவணன் ஸ்ரீராமனை வஞ்சித்து அவனது பிரிய பத்தினியாகிய சீதையைக் கவர்ந்து சென்றுன். சீதையைத் தேடிச் செல்லாநின்ற இராமனும் இலக்குவனும், உருசியமூக மலைச் சாரலை அடைகின்றனர்.]

ஸ்ரீராமன் இலக்குவனை விளித்து :—

1. தம்பீ! லக்மணு! சீதையைக் காண்கிலமே—தம்பீ!

2. ஓதவாருதி சூழிவ் வுலகத்தில் ரவிகுலத்
தொளி மழுங்கலாச்சே — தம்பீ லக்மணு!
ஒளி மழுங்க லாச்சே.

3. தந்தையை இழந்தனம் கங்கையைக் கடந்தனம்
மங்கையை இழந்தோமே—தம்பீ லக்மணு!
மங்கையை இழந்தோமே.

4. காடொடு காவுங் கானலுந் தேடி
ஓடி இளைத்தோமே—தம்பீ லக்மணு!
ஓடி இளைத்தோமே

இலக்குவன் :— அண்ணு! 'வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலா மனைத்தாய நூலகத்து மில்லை.' வகுத்தான் வகுத்தவாறே காரியங்கள் ஆகின்றன; தங்களைப் போன்ற பெரியோர்கள் இதனை அறிந்

திருந்தும் இரங்கினால், சாமானிய மனிதர்களின் பாடு என்னாகும்? 'குன்றுருளு மிடத்துக் குன்றுமணி அடையாகா' வாறுபோல, தாங்கள் இரங்குமிடத்து யானா தேற்ற வல்லேன்?

அண்ணா! எவ்வாறாே பிராட்டியைத் தேடிக் காணுதல் எங்கள் கருமமாயிற்றே. கருமத்தை மேற் கொண்டோர்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்."

ஆதலால் இரங்குதலை விடுத்து, பிராட்டியைத் தேடிச் செல்வோம் வாருங்கள்.

இராமன் :— தம்பீ! இலக்குமணா! அதோ தோன்றுகின்ற இருவரும் யாவராயிருக்கலாம்?

இலக்குவன் :— அண்ணா! சவரியென்னும் தவ மூதாட்டியாரால் புகழ்ந்து கூறப்பட்ட சுக்கிரீவன், அநுமான் என்னும் இருவராயிருக்கலாமோ?

இராமன் :— ஆம்! ஆம்! தம்பீ! நானும் அவ்வாறே நினைக்கின்றேன். அவர்களும் எம்மை நோக்கி அதோ வருகின்றார்கள். இன்னுஞ் சிறிதுநேரத்தில் அவர்களை யாரென நாம் அறிந்துகொள்ளலாம்.

அநுமானும் சுக்கிரீவனும் :— (இராமபிரானை வணங்கி) அரசகுமாரர்களைப் போல் தோன்றுகின்ற நீங்கள் யாவீர்? இவ்விடம் வருவதற்குக் காரணம் என்ன?

இராமன் :— அயோத்தியாபுரியை அரசாண்ட தசரதச் சக்கரவர்த்தியின் மக்கள்; தந்தையின் கட்டளைப்படி பதினான்குவருடம் வனவாசஞ் செய்யவேண்டி வந்தோம். வந்து, என் பிரியபத்தினி சீதையை இழந்து, வருந்தாநிற்புழிச் சவரி என்னும் தவமூதாட்டியார்

உம்மிடை எங்களை ஆற்றுப்படுத்தினர். என் பெயர் இராமன்; இவன் என் பிரிய தம்பி இலக்குவன்.

சுக்கிரீவன் :— தங்களை யான் காணுதற்குச் செய்த தவப் பயன் யாதோ? எனது தமையனாகிய வாலிக்குப் பயந்து, இவ்வுயிரைக் காக்குமாறு மலைக்குகைக்குள் ஒளித்திருந்தேன். அவ்வா றொளித்திருந்து இவ் வுயிரைக் காத்ததும் பயனாயிற்று. யான் தேவரீருக்கு அடைக்கலம் என்னைக் காத்தருளல் வேண்டும்.

இராமன் :— ஆம்! அவ்வாறே உன்னை அடைக்கலப் பொருளாக ஏற்றுக்கொண்டேன். இனிமேல் உனக்கு வருஞ் சுகதுக்கங்கள் எனக்கும் சமமானவையே.

சுக்கிரீவன் :— சுவாமி! தேவரீர் அடியேனுடைய இல்லத்திற் கெழுந்தருளி விருந்தினராதல் வேண்டும்.

(நால்வருஞ் செல்கின்றனர்.)

களம் II

இடம் :— உருசியமூக மலைச்சாரலில் உள்ள ஒரு பூஞ்சோலை.

காலம் :— நண்பகல்.

பாத்திரங்கள் :— ஸ்ரீராமன், அநுமான், சுக்கிரீவன்.

இராமன் :— நண்பா! உன் வீட்டுக்கு விருந்தினனாக வந்த என்னை, நின் மனையாளின்றி உபசரித்தலின் காரணமென்னை? நீயும் என்னைப்போல நின் மனைவியைப் பிரிந்தனையோ?

(சுக்கிரீவன் துக்கத்தோடு அநுமானைப் பார்க்கின்றான்.)

அநுமான் :— (ஸ்ரீராமனை வணங்கி) சுவாமி! இந்திரன் புதல்வனும், இச் சுக்கிரீவனது தமையனும், பேராற்றல் படைத்தோனுமாகிய வாலியென்பான், கிஷ்கிந்தாபுரியை ஆண்டுவந்தான். சுக்கிரீவன்

கிஷ்கிந்தாபுரிக்கு இளவரசனுக இருந்தான். அக் காலத்து வலிமிக்க மாயாவி என்னுமோர் அசுரன் வாலியோடு பொருது தோல்வியுற்று, பாதாள லோகத்தை நோக்கிப் பிலத்துவார வழியாக ஓடினுன்.

கடுஞ் சினங்கொண்ட வாலி தன் தம்பியாகிய சுக்கிரீவனை அழைத்து, பிலத்துவார வாயிலிற் காவல் வைத்து, மாயாவியைத் தேடிச்சென்ருன். மாயாவி யைத் தேடிப்பிடிப்பதில் இருபத்தெட்டு மாசங்கள் கழிந்தன. பலநாட்கள் கழிந்தமையைக் கண்ட சுக்கிரீவன் மனம் வருந்தி, ஒருகால் தமையன் இறந்திருத்தல்கூடு மென்றெண்ணி அவனைத் தேடிப் புறப்பட்டான்.

இதனையறிந்த மந்திரிமார் அவனைத் தடுத்துத் தங்களைக் காத்தருளுமாறு வேண்டினர். பிரசைகளது ஆதரவின்மையைக் கண்ட சுக்கிரீவன், அதற்குடன் பட்டு அரசியற்றத் தொடங்கினுன். மாயாவியை வென்று மீளாநின்ற வாலி, தனது தம்பி அரசனு யிருத்தலை அறிந்து கடுஞ் சினங்கொண்டான்.

தமையனது வரவையறிந்த சுக்கிரீவன், மிகுந்த களிப் போடு சென்று அவனது பாதங்களை வணங்கி, நடந்த வற்றைக் கூறித் தன்னை மன்னிக்குமாறு மிக்க விநயத் தோடு வேண்டினன். அவனது வேண்டுகோளைப் பொருட்படுத்தாத வாலி அவனைக்கொலைசெய்ய முற் பட்டு, மிகவும் வருத்தினன். ஒருவாறு உயிர்பிழைக்க நினைத்த சுக்கிரீவன் தப்பியோடி இம்மலைக்கண் வந்து ஒளித்திருந்தான். 'வாலி இம்மலைக்கண் வருவானுயின் இறந்தொழியக் கடவன்' என மதங்கமுனிவர் இட்ட சாபத்தினுல் இற்றைவரையும் இச் சுக்கிரீவன் உயிர் பிழைத்திருந்தனன்.

வாலியோ இவனுக்குரிய பொருள்கள் எல்லாவற் ருேடும், இவனது மனைவியாகிய 'ருமை' என்பா ளையுந் தனதாக்கிக் கொண்டான்.

இராமன் :— (மிகுந்த கோபங்கொண்டெழுந்து) இவ்வாறெல்லாம் தனது தம்பி மன்னிப்புக்கேட்டும் சகியாமல் அவனுக்குத் தீமை செய்தவனுகிய அந்த வாலியைப் பதினன்குலகத்துள்ளவர்களும் ஒருங்கு சேர்ந்து தடுப்பார்களேயானுலும், எனதம்பால் அவனைக் கொன்று உன் மனைவியை இன்றே மீட்டுத் தருவேன். இது சத்தியம்! நீ அவன் இருக்கின்ற இடத்தை இப்போதே காட்டுதி.

சுக்கிரீவன் :— சுவாமி! அக் கொடிய வாலியோ மிகவும் பலசாலி; சிவபிரானிடம் எண்ணிறந்த வரங்கள் பெற்றுள்ளான். அவன் பெயரைக் கேட்கவே தேவர்கள் அஞ்சுவர். மிகவும் வலியோனுகிய இராவணனையே தனனுடைய வாலினுற் பிணித்துவைத்து விளையாடியவன். அத்தன்மையனுன வாலியோடு எதிர்நின்று போர்புரிந்தோர் சுவர்க்க, மத்திய, பாதலமாகிய மூவுலகங்களிலும் இலராவர். அன்றியும் தன்னை யெதிர்த்து யுத்தஞ்செய்வாரது பலததில் அரைவாசி தனக்குக் கிடைக்குமாறும் வரம் பெற்றுள்ளான். ஆகையால் தேவரீர் இவ்விஷயத்திற் சிறிது ஆலோசித்தற் கிடமுண்டு.

இராமன் :— அப்பனே! அவ்வாருயின் நீ அவனைப் போருக்கழை. நான் மறைந்துநின்று அம்பெய்து அவனைக் கொல்கின்றேன்.

சுக்கிரீவன் :— சுவாமி! நான் அவ்வாறே செய்கிறேன். தேவரீருக்கு அடைக்கலம்.

இராமன் :— நீ அஞ்சாதே சென்றுவா.

களம் III

இடம் :— வாலியின் அரண்மனை.

காலம் :— பிற்பகல்.

பாத்திரங்கள் :— சுக்கிரீவன், வாலி, தாரை,

[வாலி மனைவியோடு வீற்றிருக்கின்றுன்.]

சுக்கிரீவன் :— அடே! வாலி!! நீ அநியாயமான முறையில் என் மனைவியையுங் கவர்ந்துகொண்டு சேமமாக

வீற்றிருக்கின்ருயா? நீ ஆண்மகனுனல் வெளியே புறப்பட்டு வா! இன்று ஒருகை பார்க்கலாம்! சடுதியிற் புறப்படு.

வாலி.— ஏது இது! அதிசயமாக இருக்கிறது! இதோ வந்தேன்! இதோ வந்தேன்!! ஒரு இடமும் ஓடிப் போகாதே.

(புறப்படுகிருன்; தாரை குறுக்கே வந்து தடுக்கிருள்.)

தாரை:— நாதா! இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கின்றது.

வாலி:— 'விலக்கலை விடு விடு! விளித்துளான் உரம் கலக்கி அக் கடல்கடைந் தமுது கண்டென உவக்க இன்னுயிர் குடித்து ஒல்லை மீள்குவன்.' என்னைத் தடுக்காதே! என்னைத் தடுக்காதே!!

திருப்பாற் கடலைக் கடைந்து அமுது கொண்டாற் போல, அவனது வலிமையைக் கலக்கி உயிரைக் கொண்டு இதோ மீளுகின்றேன்.

தாரை:— நாத!

"சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்ருர்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது."

என ஆன்ருேர் கூறியுள்ளார்.

இதற்குமுன் பலகாலும் தங்களோடு யுத்தஞ்செய்து ஆற்ருது தோற்ருேடிய சுக்கிரீவன், இன்று எதிர்த்து வருவதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டு மல்லவா? சிறிது யோசியுங்கள். இதற்கிடையிற் செயற்கருந் தவஞ்செய்து பெருவலி பெற்ருேனு மல்லன். அன்றி மீண்டும் பிறந்தானுமல்லன். அன்று தோற்ருேடியவனே இன்று வந்திருக்கின்ருன்.

"மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவில்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவி யஞ்சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து."

சிவன் முடியிலிருந்த நாகம் "ஏன் பிள்ளாய்! கருடா! நீ சுகமோ?" என்றுரைத்தது தான் சேர்ந்த இடத்தின் பெருமையால் அல்லவா? சுக்கிரீவனும் யாதோ ஒரு பெரிய துணையைப் பெற்றிருக்க வேண்டும்.

"தக்கா ரினத்தனுய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்."

அன்றியும் தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரனை ஸ்ரீராமனைச் சுக்கிரீவன் துணையாகக் கொண்டிருக்கிறானென்றும், அவன் மூலந் தங்களைக் கொல்ல நினைத்திருக்கிறானென்றும், இன்று சிலர் கூறக் கேட்டேன். ஆதலால் தாங்க ளவனோடு போர் செய்யப் போகவேண்டாம்.

வாலி:— சீ! சீ! பயித்தியகாரி. போ! போ! உன் பெண்மைக்கேற்ப இயம்பினை. மறத்தை மாய்த்து அறத்தை நிலைநாட்டப் பிறந்தருளிய ஸ்ரீராகவப் பெருமானுக்குக் குற்றங் கூறிவிட்டாய். அப் பெருமான் தமக்குத் துணையாவார் எவருமின்றி, குரங்கினத்தைச் சேர்ந்த இச் சுக்கிரீவனையா நண்பனுய்க் கொண்டான்? நன்று! நன்று!! நீ கூறியது எவ்வளவு மதியீனம்!

அல்லாமலும் இவ்வுலகத்தில் தம்பியரே தமக்கு உயிரெனக் கருதும் அப் பெருமான், நானும் என் தம்பியும் போர்புரியுமிடத்து, இடைநின்று என்மீது அம்பு தொடுப்பாரோ?

"தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரில் இலதென வெண்ணி யேய்ந்தவ
னெம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ அருளி னாழியான்."

பெண்புத்தி பின்புத்தி யென்பதற்கேற்ப இயம்பினை! இருத்தி, சென்றுவருகிறேன்.

(வாலி சுக்கிரீவனைத் தேடிச் செல்கிறான்)

களம் IV

இடம் :— கிஷ்கிந்தாபுரிப் பக்கம்.

காலம் :— பிற்பகல்.

பாத்திரங்கள் :— ஸ்ரீராமன், இலக்குவன், சுக்கிரீவன், வாலி.

இராமன் :— (வாலியின் உருவத்தைக் கண்டு அதிசயித்து) தம்பி லக்குமணா! வாலின் தோற்றத்தைப் பார்த்தாயா? என்ன அழகு! என்ன ஆண்மை!! என்ன கம்பீரம்!!!

இலக்குவன் :— அண்ணா! நீங்கள் கூறியதொன்றும் எனக்குக் கேட்கவில்லை. யான் ஏதோ யோசனையில் இருந்துவிட்டேன்.

இராமன் :— தம்பி! அது என்ன யோசனை?

இலக்குவன் :— அண்ணா! அன்னியர்களாகிய எங்களைத் துணைக்கொண்டு, தமது தமையனைக் கொல்ல நினைத்த இந்தச் சுக்கிரீவனை நாங்கள் நம்பலாமா? தனது தமையனுக்கே துரோகஞ் செய்யும் இவன் அன்னியர்களாகிய எங்களுக்கு எவ்வாறு துணைசெய்வான் என்றே எண்ணிக்கொண்டிருந்தேன்.

இராமன் :— தம்பி!

"பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேச லாமோ?"

"எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தோர்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தம னாத லுண்டோ?"

உலகத்துள்ள சகோதரர்க ளெல்லாம் ஒற்றுமையுடையராய் இருந்தால், பரதனுக்கேன் உத்தமனென்னும் பெருமதிப்பேற்படுகின்றது. மற்றெவருஞ் செய்யாத ஒரு காரியத்தை அவன் செய்ததா லல்லவா அவனையெல்லாருங் கொண்டாடுகிறார்கள். ஆகையால் இவற்றைப்பற்றிய யோசனை உனக்கு வேண்டியதில்லை. 'குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை.' அவரவரிடமுள்ள நற்குணங்களையே யாங்கள் பாராட்டுவோம்.

அதோ அவர்களிருவரும் போர் புரிகின்றனர். வருதி; அங்கு சென்று வாலியைக் கொல்வோம்.

சுக்கிரீவன் :— (போர்செய்து தோற்றோடிவந்து) சுவாமி! நீங்கள் எனக்குத் துணை செய்யவில்லையே! யான் இளைத்துப் போனேனே.

இராமன் :— உனக்கும், உன் தமையன் வாலிக்கும் வேறுபாடு தெரியவில்லை. தற்செயலாக உன்மீதெய்வேனாயின், அடைக்கலத்தை இழந்த பழியை அடைவேன். வேற்றுமை தெரியும்பொருட்டு இந்தா, இந்த மாலையை இட்டுக்கொண்டு செல்லுதி.

(சுக்கிரீவன் மீண்டுஞ் சென்று வாலியைத் தாக்குகின்றான். 'தோற்றோடியவன் மீண்டும் வந்து தாக்குகின்றானே! இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும்' என்று நினைத்த மனத்தையுடையவனாகிய வாலி, கடுஞ் சினங்கொண்டு, அவனைத் தூக்கி நிலத்தோடு மோதிக் கொல்ல எத்தனித்தான். அத்தருணத்து ஸ்ரீராமபிரான், வாலியினது மார்பைப் பிளந்து செல்லுமாறு ஒரு பாணத்தைச் செலுத்தினார். அம்பினாற் றாக்குண்டு தரைமீது விழுகின்ற வாலி, அவ்வம்பு புறத்தே ஊடுருவிப் போகாதவாறு, கைகளினாலும், வாலினாலும், கால்களினாலும் பிடித்துத் தடுத்தான்.)

வாலி :— இது என்னை! இது என்னை! யார் இக்காரியம் செய்தார்கள்? தேவரோ! தேவர்களும் இச் செயலுக்கு ஆளாகி என்முன் வருவார்களோ? அவர்களுக்கு வரும் ஆற்றலும் உண்டோ? அல்லது மும்மூர்த்திகளோ? என் நெஞ்சை ஊடுருவிச் செல்லும் இது என்ன படைக்கலம்? திருமாலது சக்கரமோ? சிவபெருமானது சூலமோ? அல்லது கிரௌஞ்ச மலையைப் பிளந்த முருகனது வேலோ? இந்திரனது வச்சிரப் படைக்கலமோ? இவைகளுக்கு என் நெஞ்சை ஊடுருவத்தக்க வலியுமுண்டோ?

(வாலி அம்பைப் பிடுங்கி, அதில் இட்டுள்ள பெயரைப் பார்க்கின்றான்.) ராமா! ராமா! நீயா ராமா? (வெட்கித் தலைகுனிகின்றான்.)

களம் V

இடம் :— கிஷ்கிந்தாபுரிப்பக்கம்.

காலம் :— மாலை.

பாத்திரங்கள் :— ஸ்ரீராமன், இலக்குவன், சுக்கிரீவன், வாலி, அங்கதன்.

(இராமனும் இலக்குவனும் வாலிக்கு முன்பாக வருகின்றார்கள்.)

வாலி :— வில்வித்தையிற் சிறந்த இராமனென்னும் ஒரு வீரன் தோன்றியதால் வேத ஒழுக்கத்தினின்றுந் தவறாத சூரியகுலம் தருமத்தை இன்றோடு கைவிட்டதாயிற்று. ராமா ! ராமா !! இதுவும் அறமா ?

சத்தியத்தையும் தன் குலத்தின் பெருமையையுங் காப்பாற்றவேண்டித் தன்னுயிரையே விட்ட தசரதச் சக்கரவர்த்தி திருமகனே ! உத்தமகுண சீலனான பரதனுக்கு முன்பிறந்தாயே ! அரசனாயிருந்து பிறரைத் தீமை செய்யாது விலக்கவேண்டிய நீ, இத் தீமையைச் செய்தாயே !

உன் உயிர் போன்றவளும், ஜனகமகாராசன் புத்திரியும், தேவாமிர்தம் போன்றவளுமான உன் தேவி சீதையை இராவணன் கவர்ந்தபின்பு நீ பெரிதும் தடுமாற்றமடைந்துவிட்டாய், ராம !

இராவணன் என்னும் இராக்கதன் உனக்கொரு தீங்கைச் செய்தால், அதற்குப் பதிலாக வாலி என்னுங் குரங்கரசனைக் கொல்லுமாறு மனுதர்ம சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றதா ? உனக்கியல்பாய இரக்க குணத்தை எங்கே சிந்தினாய் ? என்னிடத் தென்ன பிழையைக் கண்டாய் ?

நிராயுதனைக் கொன்ருய் என்னும் பழிச்சொல்லை நீ யேற்றுக்கொண்டாற் புகழைத் தாங்குவதற்கு வேறு யார் இவ்வுலகத்துள்ளார்?

சக்கரவர்த்தி திருமகனே! கலிகாலம் குரங்குகளிடத்திலா வந்து பிறந்துவிட்டது?

"மெலியவர் பால தேயோ ஒழுக்கமும் விழுப்பந் தானும்
வலியவர் மெலிவு செய்தாற் புகழன்றி வசையு முண்டோ."

அவதார புருஷனே! உனது தந்தை உனக்குத் தந்த இராச்சியத்தை உனது தம்பி பரதனுக்குக் கொடுத்து, உலகத்தாரெல்லாம் புகழும் ஒரு நல்ல காரியத்தை நாட்டின்கண்ணே செய்தாய்; இக் காட்டின்கண்ணே, உலகத்தாரெல்லாம் பழிக்கக்கூடிய இவ் விழிதொழிலைச் செய்தாய். நன்ருயிருக்கிறது உனது செயல்!

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்"

கூத்தாடுபவன் தவறி விழுந்தால் அதுவுமொரு கூத்தோ? சத்தியத்திற்கு இலக்கியமாகிய நீ, என் பக்கல் இவ்வாறு நீதிக்கு மாருன செயலைச் செய்வாயேயாஞல், இராட்சத குலத்தின்கண்ணே பிறந்த, அறிவற்றவனுகிய இராவணன் உனக்குச் செய்தது நீதியல்லவென்று நீ கோபித்தற்கு இடமுண்டோ?

இராமா! இருவர் யுத்தஞ் செய்யுமிடத்து, இருவரையுஞ் சமமாகப் பாவியாது, ஒருவர்மீது அன்பு கொண்டு, ஒளித்துநின்று அம்பெய்தல் தருமமா? தகுமா? முறையா? வீரமாகுமா?

சீதையைத் தேடுவதற்குத் துணை வேண்டுமாஞல் என்னை நீ துணையாகக் கொள்ளாது, இவனைத் துணையாகக் கொண்டதற்குக் காரணம் யாது? சிங்கத்தை விடுத்து முயலைத் துணையாகக் கொள்வாரும் இவ்வுலகத்துண்டோ? சந்திரனுக்கு மறு உண்டாயினற் போல, நீ பிறந்த சூரிய குலத்திற்கும் தீராத வசையை உண்டாக்கிவிட்டாயே!

"வாலியைப் படுத் தாயலை மன்னற
வேலியைப் படுத் தாய்விறல் வீரனே!"

நீ வாலியைக் கொன்ருயல்லை ; இராச தருமத்தின் வேலியைக் கொன்றுவிட்டாய்.

இராமா! உனக்குச் சிறிதேனும் வெட்கமில்லையா? உன் மனைவியை ஒருவன் கவர்ந்து செல்ல, அவன் மீது உன் வில் வீரத்தைக் காண்பியாது விடுத்து ஒளித்துநின்று, வெறுங் கையனுய் நின்ற என்மீது எய்வதிலா உன் வில் வீரத்தைக் காண்பித்தாய்? இது முறையோ? இது தருமமோ?

ராமா இதுவும் நியாயமா? — ரவிகுல
ராமா இதுவும் நியாயமா?

கார்முகில் வண்ணனே! கமலக் கண்ணனே! — ராமா

எத்தனையோ காலம் புத்திர னில்லாமல்
சித்தம் வருந்தியே சத்தியவான் பெற்ற — ராமா

தந்தை தந்தபுவி தாய்சொற் றட்டாதவன்
மைந்தனுக் கீந்திடச் சிந்தை உவந்தவா — ராமா

நாட்டிடையே நல்ல காரியங் காட்டிஇக்
காட்டிடையே வந்திக் காரியங் காட்டினை — ராமா

அரக்கர் செய்தபழிக் கவரைக் கொல்லாதிந்தக்
குரக்கினைக் கொல்லெனக் கூறுவதோ நீதி — ராமா

சீதை பிரிந்தபின் சிந்தை திகைத்தென்னை
வாதை புரிந்த மனுகுலத் தோன்றலே — ராமா

வெற்றுக்கை யென்மீது வில்வளைத்தே அம்பை
எற்றச் சொன்னநீதி எங்குளதோ இங்கு — ராமா

இராமன் :— உன் தம்பி மனமொப்பிப் பிழை செய்யா னுகியும், பலமுறை மன்னிப்புக் கேட்டும் நீ பொறுத்தா யல்லை! அவனைக் கொலைசெய்ய எத்தனித்தாய். அவன் உருசியமூக பர்வதத்தின்கண்ணே ஒளித்திருந் ததனுல் தப்பிக்கொண்டான். இன்றேற் கட்டாயம் நீ கொன்றிருப்பாய்.

அன்றியும், உன் தம்பியின் மனைவி உனக்குப் புத்திரி போன்றவளென்னும் தருமத்தையும் பாராது, அவளை நீ வலிந்து விவாகம் செய்துகொண்டாய்.

அல்லாமலும் அவன் எனக்கு அடைக்கலமாயினன். அதனாலும் உன்னை உயிர் பறித்தேன். துணையில்லாதார்க்கும், எளியவர்க்கும் ஏற்பட்ட துன்பத்தை நீக்குவது எனது மனக்கருத்து.

வாலி :— தலைவனே ! உங்கள் அரசகுலத்துக்குரிய வேத ஒழுக்கமும், கட்டுப்பாடும், மிருகவர்க்கத்தைச் சார்ந்த எங்களுக்கு இல்லையென்பதை நீ அறியாயோ ?

இராமன் :— வாலி ! பொறு, நீ விலங்கு வர்க்கத்தைச் சார்ந்தவனல்லன் என்பதை ஈங்கு நீ என்னைப்பற்றிக் கூறிய நீதிமொழிகளே காண்பிப்பனவாகும்.

“ தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும் புத்தேளிரே.”

முதலையின் வாயிலகப்பட்டு, ‘ஆதிமூலமே’ யென்றழைத்த யானையும், சீதையின்பொருட்டுத் தன்னுயிரைவிட்ட சடாயு என்னுங் கழுகும், இறைவன் முடிமீது வலைசெய்து விரித்த சிலந்தியும் உயர்திணை வர்க்கத்தைச் சேர்ந்தனவா ? அன்றி அஃறிணை வர்க்கத்தைச் சேர்ந்தனவா ?

நீ, நீதிமார்க்கங்களை நன்கறிந்திருந்தும், தவறியதால் நான் செய்த தண்டம் உனக்குத் தகுதியுடையதே.

வாலி :— அவ்வாறாயின், என்னை எதிர்த்து யுத்தஞ் செய்து கொல்லாது, மறைந்துநின்று, நிராயுதனாகிய என்மீது அம்பெய்ததற்குக் காரணம் என்ன ?

இலக்குவன் :— உன் தம்பியாகிய சுக்கிரீவன் முதலில் வந்து சரணடைய, நீதி தவறினவனாகிய உன்னைக் கொல்லுவதாக வாக்குத்தத்தஞ் செய்தருளினார். நீயும் அண்ணனை நேரே காண்பாயானால் ‘நானும் உனக்கு அடைக்கலம்’ என்று கூறுவாய். அப்போது

இவனுக்குக் கொடுத்த வாக்குத் தவறுதலடையும். அதற்காக அண்ணன் உன்னை மறைந்து நின்று எய்தார்.

வாலி :—(நல்லறிவு வரப்பெற்றவனாய் ஸ்ரீராமனை வணங்கி) சுவாமி! அடியேன் பிழை பொறுத்தருளல் வேண்டும். இறுதிக் காலத்தில் தேவரீரைக் காணப்பெற்ற ஒன்றே என் நல்வினைப்பயன். அடியேனுக்கு இன்னும் ஒரு வரந் தந்தருளல் வேண்டும்.

இராமன் :—அஃதென்னை ?

வாலி :— சுவாமி !

எனக்கு இந் நல்வாழ்வைக் காட்டிய என் பிரிய தம்பி சுக்கிரீவன் பிறப்பியலால் தேவரீரைப் பிழைத்தானாயினும், என்மீதேவிய இப்பாணத்தை அவன்மீ தேவவேண்டாம் அவன் தேவரீருக்கு அடைக்கலம்.

ஸ்ரீராமன் :— அவ்வாறே சுக்கிரீவனை அடைக்கலப் பொருளாக முன்னரே ஏற்றுக்கொண்டோம்; உனக்கும் முத்தியுலகளித்தாம்.

(வாலி பரமபதமடைகிறான்)

"ஸ்ரீராமன் திருவடி வாழ்க."

பயிற்சி :

1. வாலியின் சகோதரன் யார்?
2. ஸ்ரீராமன் வாலியை மறைந்துநின்றுகொன்றதேன்?
3. "வாலியைப் படுத்தாயலை மன்னற
வேலியைப் படுத்தாய் விறல் வீரனே" விளக்குக.
4. சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் பகைமை ஏற்பட்டதேன்?

உரைப் பகுதி

1. கலைமகள் வாழ்த்து

1. உளங்கொண்டு - மனத்தில் அமைத்து ; தெள்ளித் தெளிக்கும் - மிகத் தெளிவாக அறிந்த ; பனுவற் புலவோர்- நூலறிவுடைய புலவர்களாகிய மேகங்கள் ; கவிமழை சிந்தக் கண்டு - கவிகளாகிய மழைகளைப் பொழிவதை நோக்கி ; களிக்கும் கலாப மயிலே - மகிழ்ந்து ஆடுகின்ற தோகையுடைய மயில்போல்வாளே ; சகல கலாவல்லியே - சகல கலைகளின் வடிவமாயுள்ள கொடிபோல்வாளே ; அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமுது ஆர்ந்து - உன்னால் அருளப்பட்ட செழுமையாகிய தமிழென்னும் தெள்ளிய அமுதத்தை உண்டு ; உன்னருட் கடலுள் - உன் திருவருட் கடலின்கண்; குளிக்கும்படிக்கு என்று கூடுங்கொல் - மூழ்குந் தன்மையை யான் அடைதற்கு (காலம்) அடியேனுக்கு என்று கூடுமோ (அறியேன்). எ - று.

தெள்ளித் தெளிக்கும் - மிகத் தெளிக்கும் ; தெளித்தல் - தெளிவாக அறியப்படுதல் எனச் செயப்பாட்டுவினைப் பொருள்பட நின்றது ; தெளிவு செய்தறிந்த எனினுமாம். பனுவல் - ஆகுபெயர் ; புலம் - அறிவு; கவியை - மழையாக உருவகித்து, புலவோரை மேகமாக உருவகியாமையின் இஃது ஏகதேசமென்னும் உருவக அணி. கவிமழை சிந்தக் கண்டு களிக்கும் கலாபமயிலே என்றது உருவகத்தை அங்கமாகக் கொண்டுவந்த உவமை அணி. ஓ ஐயப்பொருட்டு ; கொல் அசை ; காலம் என்பது எஞ்சிநின்றது, அன்றி அருளென்பது எஞ்சி நிற்பதாகக்கொண்டு உன் அருள் என்று கூடுமோ எனினுமாம். அவனருளாலே அவன்றாள் வணங்கி என்பதுபோல, மயில் மழையைக்கண்டு களிப்பது போல நீயும் புலவருடைய கவிமழையைக் கண்டு களிப்பாய் என்பார், கவிமழை சிந்தக் கண்டு களிக்கும் கலாபமயிலே யென்றார். இச் செய்யுளின்கண் ஆசையால் எனக்கு விரைந்து அருள் செய் என்பது எஞ்சி நின்றது. முதலிரண்டிற்கும் உன் அருட் கடலுட் குளித்துத் தெள்ளமுதை யருந்துதற்குக் காலமென்று கூடுமோ என்பது கருத்தாகக்கொண்டு பொருள் கோடலுமாம். செழுமை சொல்வளமும் பொருள்வளமும்.

பொழிப்புரை :— கலைமகளே ! யான் தமிழாகிய அமுதத்தை யுண்டு உன்னருட் கடலுட் குளித்தற்கு அருள் செய் யென்பது.

2. வட நூற்கடலும் - வட நூல்களாகிய சமுத்திரத்தையும்; தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் - நிறைந்த செழிய தமிழாகிய செல்வத்தையும்; தொண்டர் செந் நாவினின்று காக்குங் கருணைக் கடலே - உன் தொண்டர்களுடைய செவ்விய நாவின் நின்று அழிவுபெறுமற் காக்கின்ற அருட் கடலே; சகல கலாவல்லியே—; தூக்கும் - பாட்டுக்களும்; பனுவல் துறைதோய்ந்த கல்வியும் - நூற்றுறைகளிற் பயின்ற கல்வியறிவும்; சொல்சுவை தோய் வாக்கும் - சொற் சுவை பொருந்திய வாக்கும்; பெருக - மேன்மேலும் உண்டாகும் படி; பணித்தருள்வாய் - அடியேனுக்குக் கட்டளையிட்டருள் வாய். எ - று.

தூக்குமென்பதைப் பனுவலுக்கு அடையாக்கி ஆராயப் படுகின்ற பனுவல் எனினுமாம். வடமொழியும் ஏனைய மொழிகளினும் பார்க்க் அதிகமான நூல்கள் உளவாதலின் கடலாக உருவகித்தார். செல்வம் போன்றதைச் செல்வம் என்றது உபசாரம். நின்று என்னும் செய்தெனெச்சத்தைச் செயவெனெச்சமாகத் திரித்துச் செல்வமும் நிலைபெற வெனப் பொருள் கூறினு மமையும்.

பொ — ரை :—கலைமகளே! எனக்குக் கவி பாடும் வன்மையும் நூற்பயிற்சியும் இனிய வர்க்கு வன்மையும் வளரும்படி அருள்செய்வாய் என்பது.

3. எழுதா மறையும் - எழுதப்படாத வேதத்திலும்; விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் — ஆகாயத்திலும் பூமியிலும் நீரிலும் நெருப்பிலும் கொடிய காற்றிலும்; அன்பர் கண்ணும் கருத்தும் - அன்பருடைய கண்களிலும் மனத்திலும்; நிறைந்தாய் - நிறைந்திருப்பவளே; சகல கலாவல்லியே—; பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் - பண்களும் பரதசாஸ்திர ஞானமும் வித்தையும் இன்சொற்களாற் றொடுக்கப்பட்ட நூல்களும்; எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய் - நான் நினைக்கும்பொழுதே எளிதிலடையும்படி உதவுவாய். எ - று-

பண் - பாலை, குறிஞ்சி முதலிய; பரதம் - நாட்டிய நூல். கல்வியென்பது ஏனைய வித்தைகளை. பனுவலென்றது தமிழ் நூலறிவை. கர்ண பரம்பரையாகக் கேட்கப்படுதலின் வேதம் எழுதாமறை எனப்பட்டது. சுருதி என்பதும் கேட்கப்படுவதுபற்றி வந்தபெயர். அதனுலுமுணர்க.

பொ - ரை: — வேத முதலியவற்றில் நிறைந்திருப்பவளே! எனக்குப் பண்களின் ஞானமும், பரத சாஸ்திர ஞானமும், ஏனைய வித்தைகளினறிவும், தமிழ்நூலறிவும் யான் விரும் புங் காலத்துத் தந்தருள்வாய் என்பது.

4. உளங்கொண்டு தொண்டர் தீட்டும் தமிழ்க்கலைத் தீம்பால் - உன்னை மனதிற் கொண்டு உன் தொண்டர்கள் எழுதுகின்ற தமிழ்நூல்களாகிய பாலையும்; அமுதம் - (தொண்டரல்லாதார் தீட்டுகின்ற உலகநூல்களாகிய) நீரை யும்; தெளிக்கும்வண்ணம் - தெளிந்தறியும்படி; காட்டும்- (உலகத்தாருக்கு) பிரித்துக்காட்டுகின்ற; வெள் ஓதிமப் பேடே - வெண்மையாகிய அன்னப்பேடு போன்றவளே!; சகல கலாவல்லியே —; பாட்டும் - பாட்டுக்களும்; பொரு ளும் - அதன் பொருள்களும்; பொருளாற் பொருந்தும் பய னும் - அப் பொருளை அடையும் பயனும்; என்பால் கூட்டும் படி - எண்கண் அடைவிக்கும்படி; நின் கடைக்கண் நல்காய் - நின் கடைக்கண் பார்வையை வைத்தருள்வாய். எ—று.

பாலையும் நீரையும் வேறு பிரித்துணர்த்தும் அன்னம் போல அன்பர்கள் சொல்லிய வீட்டுநூலையும் உலகநூலை யும் வேறு பிரித்துணர்த்துதல்பற்றிக் கலைமகளை அன்னப் பேடு என உருவகித்தார். வீட்டுநூலுக்குப் பாலும், உலக நூலுக்கு நீரும் உவமை. கட்கடை - கடைக்கண் என மாறி நின்றது. போலி. பேடை பேடு எனவும் வழங்கும்.

பொ — ரை :—கலைமகளே! பாட்டுக்களும், அவற்றின் பொருளும், அவற்றின் பயனும் என்பால் அடையும்படி அருள்செய் என்பது.

5. நளின ஆசனம்சேர் செல்விக்கு (சிதையாமை நல்கல்) அரிதென்று-தாமரை யாசனத்தையுடைய இலக்குமிக்கு(செல் வமாகிய தனதுபேற்றை இப்படி) அழியாமல் தருவது கூடா தென்று சொல்லும்படி; ஒருகாலமும் சிதையாமை நல்கும் கல்விப் பெருஞ் செல்வப் பேறே - ஒருகாலமும் அழியாமற் றரும் கல்வியாகிய பெருஞ்செல்வப்பேறு யுள்ளவளே: சகல கலாவல்லியே - சகல கலா வடிவாயுள்ளவளே; சொல்விற்ப னமும் அவதானமும் கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் - சொல்லுதலில் சாதுரியத்தை யும் (படித்தவற்றின்கண்) அவதான சிந்தையையும் கற்ற தைச் சொல்லவல்ல சாமர்த்தியத்தையும் தந்து என்னை அடிமைகொள்வாய். எ—று.

நளினுசனம் - வடமொழி முடிவு. செல்வம் ஒருவரிடத்து நிலைநில்லாது; அவ்வியல்பினதாகிய பெரும் செல்வத்தையே நளினுசனத்தளருள்வள்; நீயோ அடைந்தார்க்கு என்றுஞ் சிதையாத கல்விச் செல்வத்தைத் தரும் தன்மையுடையை. ஆதலால் நின்பேறே சிறந்ததென்பார், நளினுசனஞ்சேர்.... பேறே என்றார். செல்வப்பேறு - அன்மொழித்தொகை; செல்வப்பேற்றைத் தருபவள். (அவதானம்-ஞாபகசக்தி.)

பொ - ரை:—கலைமகளே! சொல்வன்மையும் ஞாபகசக்தியும் கல்விகற்பிக்கவல்ல சாமர்த்தியமும் தருவாய் என்பது.

II. ஈசனுவக்கும் இன்மலர் மூன்று

அடீ! தோழீஇ! அருள்வள்ளலாகிய கடவுளுடைய திருவடிக்குச் சிறந்த மலர், வெண்ணிறமான மல்லிகை மலரோ? வேறு எந்த வகையான புஷ்பமோ? இவற்றுள் எது? என்று வினவுவாயானுல்; உத்தமனூர் வேண்டுவதாகிய அம்மலர் வெண்ணிறப் பூவுமல்ல; வேறு எவ்வகையான புஷ்பமுமல்ல; உள்ளமாகிய கமல மலரேயாகும். எ - று

எதுவோ என்பதில் ஓ அசை; ஏனைய வினு, அடீ, அடி எனக்குறுகிற்று. மலர் எழுவாய், எது பயனிலை; வேண்டுவது எழுவாய், கமலம் பயனிலை.

பொ - ரை:—கடவுளுக்கு எப்பூவிலும் உள்ளப்பூவே சிறந்தது என்பதாம்.

2. அடீ! தோழீஇ! மாப்பிள்ளையாய் என்னை ஆட்கொள்ளும்படி வந்தவருக்கு ஏற்ற மலர் முறுக்கு அவிழ்ந்த தாமரை மலரோ? செங்கழுநீர் மாலையோ? இவற்றுள் எது? என்று வினவுவாயானுல்; தலைவராகிய அவர் விரும்புவதாகிய அம்மலர்; முறுக்கவிழ்ந்த தாமரை மலருமல்ல; கழுநீர் மாலையுமல்ல; கூப்பிய கைகளாகிய காந்தண் மலரேயாகும். எ - று

காப்பு - காவல் அலராமற் காப்பது அதுவாதலின் காப்பு என்றார். காம்பினையுடைய அவிழ்ந்த தாமரையுமாம். தாமரை - ஆகுபெயர். மாப்பிள்ளை - மணவாளன்; பக்குவமடைந்த ஆன்மாவைக் கூடிப் பேரின்பமளித்தல்பற்றி அங்ஙனம் கூறினர். அல்லவென்னும் வினையெச்சங்கள் அவாய்நிலையான் வந்த ஆகும் என்னும் வினைகொண்டு முடிந்தன.

பொ - ரை: — நங்கடவுளுக்குத் தாமரைப்பூவிலும் கழுநீர் மலரிலும் அஞ்சலித்த கைமலரே சிறந்ததென்பதாம்.

3. பிறப்புப் பிணி மூப் பிறப்புக்களால் வாட்டமுறுத வருக்குச் சிறந்த மலர், கொன்றை மலரோ? கற்பக மலரோ? சிறந்தது இவற்றுள் எது என்று வினவுவாயானால், தலைவரா கிய அவர் வேண்டுவது, கொன்றை மலருமல்ல; கற்பக மலருமல்ல; கண்ணாகிய நெய்தன்மலரேயாம். எ - று.

அளி - வண்டு; பாரில் இல்லாத - வானுலகத்திலுள்ள; உறுதவர் - வினையாலணையும்பெயர்; நாட்டம் - பார்வை.

பொ - ரை:—நங் கடவுளுக்குக் கொன்றைப் பூவிலும், கற் பகப் பூவிலும், கண்மலரே சிறந்ததென்பதாம்.

III. ஔவையார் பாடல்

1. எருத்துக்களும் இரண்டு உள்ளனவாகி; வீட்டின் இடத்தே வித்துக்களு முள்ளனவாகி; நீர்க்கரையே பொருந் திய நிலமுமாகி; தன்னூர்க்குச் சென்று வரக்கூடியதாக அணிமையும் உடையதாகி; பணிசெய்வாரும், தனது சொல் லைக்கேட்டு நடப்பார்களேயானால்; எப்பொழுதும் உழவு தொழிலே ஒருவனுக்கு எத்தொழிலும் இனியதாகும். எ—று

ஏர் — ஆகுபெயர்; கலப்பை இரண்டு எனக்கொண்டு, ஒன்று பழுதுறின் மற்றொன்று வேண்டுமாதலின், இரண்டு உள்தாய் என்றார் எனினுமாம். ஏகாரம் இரண்டினுள் முன் னையது அசைநிலை, பின்னையது பிரிநிலை. ஆய், ஆனல், இனிது என முடிக்க.

பொ - ரை:—ஒருவனுக்கு இங்கே சொல்லப்பட்டவாறு இருக்குமானல் உழவு தொழில் சிறந்ததென்பதாம்.

2. வான் குருவியின் கூடு - வானிற் பறக்கும் குருவிக் கூடும்; வல் அரக்கு - வலிய தேன் மெழுகும்; தொல் கறை யான் - பழைய கறையான் புற்றும்; தேன் - தேன் கூடும்; சிலம்பி - சிலம்பி வலையும்; யாவர்க்கும் செய் அரிது - எல்லா ருக்குஞ் செய்தல் கூடாதாகும்; யாம்பெரிதும் வல்லோம் என்று வலிமை சொல வேண்டாம் - (ஆதலால்)யாம் மிக வும் வலிமை யுடையோம் என்று சாமர்த்தியம் பேசவேண் டாம்; எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது - யாவர்க்கும் ஒவ் வொரு காரியமே எளிதாயிருக்கும்; எல்லாம் எளிதாகா. எ-று

ஆல், ஏ, காண் அசைகள். குருவியின் கூட்டைத் தேனீ செய்யமாட்டாது. தேனீ செய்யும் இறாலைக் குருவி செய்ய மாட்டாது; தேனீ எழிதாகச் செய்யும். குருவிக் கூட்டைக் குருவியே செய்யும். ஆதலால் எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது; அன்றி எல்லோருக்கும் எல்லாம் செய்யமுடியாது. ஆதலால் வல்லோம் என்று வலிமை பேசவேண்டாம் என்பதாம். கறையான், தேன், சிலந்தி ஆகுபெயர்கள். வான் குருவி - தூக்கணங் குருவி என்பாருமுளர்.

3. தளர்ந்தார்க்கு ஒன்று ஈயார் தனம் - வறுமையினால் தளர்ச்சியுற்றவர்களுக்கு ஒருபொருளையும் கொடாதவர்களுடைய செல்வம்; சுற்றும் கருங்குளவி சூரைத்தூறு ஆரியப்பேய்-சூழுகின்ற கருங்குளவிகளும், சூரைப்பற்றைகளும். மிலேச்சத்தனமான பேய்களும்; எற்றும் - எற்றுகின்ற; சுடுகாட்டு இடிகரையில் - சுடுகாட்டிலுள்ள இடிகரையிலே; புற்றில் - புற்றின்கண்; வளர்ந்த மடல் பனைக்குள் - வளர்ந்த மடற் பனைக்குள்; வைத்த தேன் ஒக்கும் - வைத்த தேனை ஒக்கும். எ-று.

இரண்டும் பயன்படா வென்பதாம். மடற்பனைக்குள் வைத்த தேனை எடுக்கச் செல்வார்க்குக் கருங்குளவி குற்றியும், தூறுகளின்முள் முதலியவைகள் காலைத்தாக்கியும், பேய் அடித்தும் வருத்தும். அன்றியும் சுடுகாடாதலால் அச்சம் உண்டாம்: அன்றியும் இடிகரையாதலால் இடியும் என்னும் அச்சம் உண்டாம்; அன்றியும் புற்றிருத்தலால் பாம்பு கடிக்கும் என்னும் அச்சம் உண்டாம்; அன்றியும் மடற்பனையாதலால் ஏறவும் முடியாது. இத்தன்மைகளால், அது எடுக்கமுடியாது கிடந்து அழிதல்போல அழிவடையும் என்பதாம்.

4 நல்ல குலாமாலை வேல்கண்ணாய் - நல்ல விளங்கும் மாலையணிந்த வேல்போலும் கண்ணையுடையாய்; பெரியர் சொல்லாமல் செய்வார் - பெரியோர் தருவேனென்று சொல்லாமற் செய்வார்; சிறியர் சொல்லிச்செய்வர் - சிறியர் சொல்லிச் செய்வர்; கயவர் சொல்லியுஞ் செய்யார் - கீழோர் சொல்லியுஞ் செய்யார்கள்; உறு உவமை நாடில் - இவற்குப்பொருந்திய உவமையை ஆராயில்: பலா மாவைப் பாதிரியைப் பார் - பலாவையும் மாவையும் பாதிரியையும் பார்க்குதி. எ - று.

வேற்கண்ணாய்! மகடூஉ முன்னிலை. பலா முதலிய மூன்றும் பூவாமற் காய்த்தற்கும், பூத்துக் காய்த்தற்கும்,

பூத்துங் காயாமைக்கும் உவமை. பூத்தல் சொல்லுதற்கு வமை. செய்தல்-கொடுத்தல்.

5. போந்த உதாரனுக்குப் பொன் துரும்பு - மிக்க கொடையாளனுக்குப் பொன் துரும்புபோன்றதாகும்; சூர னுக்குச் சேர்ந்த மரணம் சிறு துரும்பு - வீரனுக்கு அடைந்த மரணம் சிறு துரும்பு போன்றதாகும்; ஆய்ந்த அறிவோர்க்கு நாரியரும் துரும்பாம் - ஆராய்ந்த அறிவுடையோருக்கு பெண்களும் துரும்பு போன்றவராவர்; இல்லத் துறவோர்க்கு வேந்தன் துரும்பு - இல்லத்தைத் துறந்த துறவிகளுக்கு வேந்தனும் ஒரு சிறு துரும்பு போல்வன். எ - று.

கொடையாளன் பொன்னையும், வீரன் மரணத்தையும், அறிஞர் பெண்களையும், துறவிகள் வேந்தனையும் துரும்பாக மதிப்பர் என்பது கருத்து. போந்த - ஊழால் வந்த எனி னுமாம்,

6. தாயோடு அறுசுவை போம் - ஒருவனுக்கு தாய் உயிர் நீங்கும்போது அவளோடு கூட அறுசுவை உணவு ஒழியும்; தந்தையோடு கல்வி போம் - தந்தை இறக்கும் போது அவனோடு கூடக் கல்வி ஒழியும்; சேயோடு தான் பெற்ற செல்வம் போம் - புதல்வன் இறக்கும்போதே அவ னோடு கூடச் சம்பாதித்த செல்வமொழியும்; ஆய வாழ்வு உற்றாருடன் போம் - பொருந்திய உலக வாழ்வு சுற்றத்தார் அழியும்போதே அவரோடு போம்; உடன் பிறப்பாற் றோள் வலி போம் - சகோதரன் இறக்கும்போதே அவனோடு புய வலிபோகும்; பொற்றாலியோ டெவையும்போம் - பொன்னா லாகிய தாலியை யுடைய மனைவி இறக்கும்போதே இவைக ளெல்லாம் ஒழியும். எ - று.

அறு சுவை - இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, துவர்ப்பு என்பன. 'அறுசுவையுண்டி' என நாலடி யாரிலும் வருதல் காண்க. இதனால் ஒருவனுக்கு நல்ல உணவுக்குத் துணை தாயே என்பதும், கல்விக்குத் துணை தந்தையே என்பதும், தன் செல்வத்துக்குத் துணை புதல்வனே என்பதும், உலக வாழ்விற்குச் சிறந்த துணையாளர் சுற்றத் தார் என்பதும், தன் வலிக்குத் துணை சகோதரன் என்பதும், இவை எல்லாவற்றிற்குந் துணை மனைவி யென்பதும் பெறப் பட்டன.

போகும் - போம் என்றன. ஒரு - உடனிகழ்ச்சி.

நாலுகோடி கவி பாடியது

1. தன்னை மதியாதாருடைய முற்றத்தை ஒரு பொரு ளாக மதித்து ஒருதரஞ் சென்று மிதியாமலிருத்தல் கோடி மடங்கு பயன்தரும். எ-று.

மதித்து - நினைத்துமாம். மதியாமை - தொழிற்பெயர்; "மதியாதார் வாசல் மிதியாதே" என்பது பழமொழி. 'பெறும்' எனப் பாடங்கொண்டு "கோடி பொன் பெறும்" எனினுமாம். கோடி ஆகுபெயர். மேல்வருவனவு மவை.

2. உண்ணுங்கள் உண்ணுங்கள் என்று தம்மை உப சரியாதார் வீட்டில் உண்ணாமை கோடி பயன் தரும். எ—று. ஏ—அசை.

3. கோடி பொன் கொடுத்தும் உயர் குடியிற் பிறந்த வர்களோடு கூடுவதுதானே கோடி பயன் தரும். எ—று. ஏ - தேற்றம். கோடி - ஆகுபெயர்.

4. பலகோடி பொன் கொடுத்தாலும் தன்னுடைய நாக்கோடாமை கோடி பயன் தரும். எ—று. அனுகோடி - ஒத்தகோடி. கோடுதல்-ஒருபக்கஞ் சார்தல்.

IV. சந்திரமதி சுயம்வரம்

1

1. தொழுதி - பறவை: ஆலயம் - கோயில்; முன்றில் - முற்றம்; காலை - உதயகாலம்; கறங்குதல் - ஒலித்தல்.

2. முகூர்த்தம் ஒரேழெனச் சொன்ன நல்தினம் - முகூர்த்தநாள் இன்னும் ஒரேழு நாள் உள என்று மதிதய அரசன் சொல்லிய நல்லநாள்; கன்னல் - கரும்பு; திரு - அழகு; காவணம் - பந்தர்.

3. அரசர்களெல்லாரும் வந்து கூடினார்கள். பிராமணர்க ளும் வந்து கூடினார்கள். மற்றைய எல்லோரும் வந்து கூடி னார்கள். பெண்கள் எல்லோரும் வந்து கூடினார்கள். ஆராய்ந் துணர்ந்த நீதி மன்னர்களாகிய மந்திரிகளும் வந்து கூடினார் கள். அவ்வவருடன் சேர்ந்த சேனைகளும் வந்துகூடின எ—று.

4. வெற்றியைப் பொருந்தும்படி மன்மதன் ஒரு புறத்திலே வரவும் வண்டுகள் களிப்பை யுட்கொண்டு பாடிக்கொண்டு கூடவே வரவும் தேன் பாகுபோன்ற குளிர்ந்த சொல்லையுடைய பசிய வளையல்களை அணிந்த மயிற் சாயலைக் கொண்ட சந்திரமதியைக் கூட்டிக்கொண்டு தோழிமார்கள் வந்தார்கள். எ—று.

வாகை - பல அரசர்களையும் வெல்லுதல். உற்று—விரைவு பற்றி இறந்தகாலமாயிற்று. வரவரத் தோன்றினர் என முடிக்க. தோகை - உவமை ஆகுபெயர்.

5. தலையிலிருந்து இரண்டு சிறிதான கால்களளவும் மேகத்துள்ள மின்னலாலே அமைந்தாற்போலிருக்கிற சிவந்த திருமேனியைப் பொன்னுபரணங்களாலும் இரத்தினுபரணங்களாலும் மறையச் செய்துகொண்டு அழகுள்ள இளவயதுடைய சந்திரமதி கலியாணப் பந்தலுக்குள்ளே வந்தாள். எ — று.

அமைத்தன்ன என்பது அபூதவுவமை. அவளது இயற்கையழகை மறைத்ததன்றி, அவற்ருற் பயனில்லை என்பார் மறைத்து என்ருர்.

2

6. அந்தச் சமயத்திலே அழகிய கைகளை நீட்டிக் கரும்பின் இரசம்போலும் பெருமை பொருந்திய சந்திரமதியின் தோழிமார்கள் வந்திருக்கிற அரசர்கள் பெயரும் நாடுகளும் குலமுறைகளும் இன்ன இன்னபடியென எடுத்துச் சொல்லத் தொடங்கினுர்கள்.

ஏ - அசை காரிகை - அழகு. அது அழகையுடையாளை யுணர்த்தி ஆகுபெயராய் நின்றது.

7. அதிபார தனபார அதிரூப மலர்மாலை யனையாய்- அதிக கனங்கொண்ட தனபாரங்களையும் மிக்க அழகையுமுடைய தாமரை ஆசினியாகிய இலக்குமியை ஒத்த சந்திரமதியே!; இவன் - இங்கே இருக்கின்ற அரசன்; நதிபாய உயர்போதின் நறைபாய - ஆறு பெருகிப்பாய்தலினுலும் மேலே உயருகின்ற மலரிலுள்ள தேனெழுகுவதாலும்; நிறைவான சிறைவாவியில் - முழுதும் நிரம்புதலையுற்ற கட்டுக்குளங்களில்; மதியாமல் வலைபீறி - மதிக்காது வலையைக் கிழித்து; வெடிபோன பருவாளை - துள்ளிப் பாய்ந்த பருத்த வாளைமீன்கள்; வளைபூகமேல் குதிபாய - வளைவான

குலைகளையுடைய கமுகமரத்தின்மேலே குதிக்க; மடல்கீறி விழுதேறல் - அக்கமுகின் மடலானது கிழிந்து விழுகின்ற தேன் பெருக்கானது; கரைசாடு - குளக்கரையை யுடைக் கின்ற; குடநாடன் - குடநாடனாகிய சேரனாவான். எ - று.

அதி என்பது மிகுதிப் பொருளை உணர்த்தும் ஒரு உப சர்க்கம். பாய என்னும் செயவெனெச்சங்கள் ஏதுப்பொ ருட்டு.

8. இருள் நாறு நஞ்சொத்த விழியாய் - இருள் தோன் றுவதான விடத்துக்கொப்பாகிய கண்களை யுடையவளே!; துவண்டு எய்த்த இடையாய் - துவண்டு இளைத்திருக்கின்ற இடையை யுடையவளே!; இவன் - இந்த அரசன்; சுருள் நாக பந்தத்தினியல்பா - சுருண்டு பாம்பு மண்டலத்தி லிருக்கின்றது போல்வதாய்; மரும் - மருவுகின்ற; சித்ர தொடி யேவி - அதிசயத்தை விளைவிக்கின்ற (சிவன் கொடுத்த) வளையை விட்டு; முரண் ஆரம் அன்று இட்ட- வலிய ஒரு பதக்கத்தைத் தன் கழுத்திலே தேவலோகம் சென்ற அக் காலத்தில் இட்ட; மகவான் நெடுங்கொற்ற முடி சாடினோன் - இந்திரனுடைய நெடியதாகிய வெற் றியை உடைய திருமுடியை உடைத்தவனும்; சரணாரவிந் தத்து - தனது தாமரை மலர்கள்போன்ற திருவடிகளிலே; மகராலயந்துற்ற தமிழ்மாறன் - கடலரசனாகிய வருணன் வந்து வணங்கப்பெற்றவனுமாகிய தமிழையுடைய பாண் டிய அரசனாவான். எ - று.

தொடியேவி முடிசாடினோன் - உக்கிர குமார பாண்டியன். இச் சரித்திரத்தைத் திருவிளையாடற் புராணத்து இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம் நோக்கியுணர்க; சரண + அரவிந்தம் = சரணாரவிந்தம் - வடநூன் முடிபு.

9 மலிவாச மலர்பூசி - மிகுந்த வாசனையுடைய மகரந் தங்களைப் பூசிக்கொண்டு; அளிபாடும் - வண்டுகள் பாடு கின்ற; நறையோதி மயிலே - நறுமணம் பொருந்திய கூந் தலைக்கொண்ட மயில்போன்றவளே!; இவன் - இந்த அர சன்; ஒலியேறு திரைமோதும் - ஒலி மிகுந்த அலைகள் மோது கின்ற; உவர் ஆழி உலகேழும் உடனாக - உவர் நீரையு டைய கடல் சூழ்ந்த ஏழுலகங்களும் ஒன்றாக; வலியோர் கள் எளியோரை நலியாமல் - அங்குள்ள வலியவர்கள் எளி யவர்களை வருத்தாத படி; அசைநாதமணி வாயிலோன்- அசைகின்ற ஒலியையுடைய ஆராய்ச்சிமணி கட்டியிருக் கின்ற வாயிலையுடையவனும்; புலியேறு - தனது புலிக்

கொடியை; வடமேரு கிரிமீதில் - வடக்கினுள்ள மேருமலை யில்; இடும் - எழுதிய; மீளி - வீரனுமாகிய; புனல் நாடன்- நீர்நாட்டை யுடையவனுகிய சோழன். எ – று.

பூசிப் பாடும் ஓதி எனவும் ஆக நலியாமல் அசை நாதமெனவும் இயைக்க. உலகு முழுவதையுமாண்ட சக்கர வர்த்தி என்பார், உடனுக நலியாமல் அசைநாத மணி வாயிலான் என்றும் இடுமீளி என்றுங் கூறினர். நலியாமல் மல்லீற்று வினையெச்சம். நலி - பகுதி. ஆ - எதிர்மறை இடைநிலை.

10. அரிசிந்து விழியாய் - செவ்வரிகள் சிதறிய கண்க ளையுடையவளே!; இவ்வணிதேரின் மிசை ஏறி அடைகோ மகன் – இந்த அழகான தேரின்மே லேறிவந்த அரசன்; விரிசிந்து வினையுண்ட – பரந்த கடலையுண்ட; ஒருசிந்து முனிதங்கு - ஒப்பற்ற குறள் வடிவினையுடைய அகத் திய முனிவர் தங்குகின்ற; கிரிசிந்துகால் - பொதியமலை பெற்றுவருகின்ற தென்றற் காற்றினலே; அலர்புங்கு - அலர்ந்த புங்கு மரங்கள்; பொரிசிந்த - பொன்போலும் மலரைச் சிந்தவும்; பொறிவண்டினம் - புள்ளிகளையுடைய வண்டுக் கூட்டங்கள்; வரிசிந்த – பாட்டுக்களைச் சிந்தவும்; மகரந்தம் மலர் சிந்த - (அவைகளுக்கு பரிசிலாக) மகரந் தங்களை ஏனைய மலர்கள் சிந்தவும்; வருசிந்து வளநாடன்- பெருகி வருகின்ற சிந்துவென்னும் நதியையுடைய வளம் பொருந்திய சிந்து தேசத்தரசனுவான். எ – று.

புன்கம்பூ நெற்பொரிபோ லிருத்தலினலே, பொரிசிந்த அலர்புன்கு என்றும்; கொன்றைப்பூ பொன்னிறமாதலின், பொருள் சிந்த என்றுங் கூறினர். சிந்த, சிந்த, சிந்த, சிந்த வரும் சிந்து என்க. மகரந்தம் - பூந்தாது; தேனுமாம். இது சொற்பொருட் பின்வரும்நிலை என்னும் அலங்காரம்.

11, தேம் சாலும் இரு குன்றுகளையஞ்சும் இடையஞ்சு திருவே - மலையினின்றும் தேன்கள் ஒழுகுகின்ற இரண்டு தனங்களாகிய மலைகளைத் தாங்கமாட்டாமல் குறைபடுவ தாய இடையானது அஞ்சுகின்ற இலக்குமிக்கு ஒப்பான வளே!; இவன் - இந்த அரசன்; இருலானது – தேன்கூடா னது; ஈஞ்சாலும் இறவாலும் – ஈந்தின் முள்ளினலும் இருல் மீன்களாலும்; இடைபீறு இழிதேறலும் - நடுவே கிழிந்து வழிகின்ற தேனும்; காஞ்சு ஆலு கதிர்சாட - முற்றி யசைகின்ற சோழக்கதிர் மோத; மாஞ்சோலை இடைசோர்பு–

அதனாலே மாந்தோப்பிலே மாங்கனிகள் நைந்து; கனியூறலும் பாய்ஞ்சு - அக் கனியினின்று மொழுகுகின்ற தேனும் பாய்ந்து; ஆலை ஊறு வயற் பூஞ்சாலு விளைவு ஏறு — கருப் பாலையின் சாறு பெருகுகின்ற வயலிலுள்ள அழகிய நெற் களின் விளைவு முற்றியேறுகின்ற, பாஞ்சாலனே — பாஞ்சால தேசத்தரசன், எ — று.

ஈஞ்சு, பாஞ்சு என்பன போலி; இருல் - இருலின் விகாரம். ஈஞ்சாலும் இறவாலும் விளியென்க. ஆலுருபுகள் ஏதுப்பொருள். தேறலும் ஊறலும் பாய்ஞ்சு ஏறு பாஞ் சாலம் என்க. பாய்ஞ்சு ஏதுப்பொருட்டு.

12. தேம்போதின் ஈர்ந்தாது பூம்பாளை நீங்காத தேங் கோதையாய் - தேனையுடைய மலர்களின் மகரந்தங்களை யுடைய பொலிந்த பாளையினது பாளைபோல் நீங்காத மணம் பொருந்திய கூந்தலையுடையவளே!; கூம்பு ஓடி — சிகரமானது நீண்டு; வான்தோயும் - ஆகாயத்தை அளாவுவதான; மான் தேரின் — குதிரை பூட்டிய தேரிலே; ஈண்டு ஆசைகூர்ந்து ஏறினன் — இங்கே ஆசைமிகுந்து ஏறிவந்த இவ்வரசன்; தூம்பு ஓடு கூன்கோடு - மதகின் வழியே ஓடுகின்ற வளைந்த சங்கானது: வார்ந்து ஓடி - அந்த மதகின் நீருடனே அள்ளுண்டு ஓடிச்சென்று; மீண்டு ஏரிதோய்ந்து ஏற — மீளவும் குளத்திலே போய்ச்சேர; ஆரம் — அச் சங்கு பெற்ற முத்தானது; காம் போடு சேம்போடு சேர்ந்து — காம்புடனே நீண்ட நீர்ச்சேம் புடன் மோதி; ஆர்ந்து ஓடு — நிறைந்து நீரோடு செல் கின்ற; காந்தாரன் — காந்தார தேசத் தரசனுவன் எ—று.

ஓடு கோடு — வினைத்தொகை, ஏற ஓடு காந்தாரம் என இயைக்க; ஆற்று வளமுடையது காந்தாரம் என்றபடி சந்திரமதியே! இவன் காந்தாரதேசத் தரசன் என்பது கருத்து.

13. அடர்ந்தோடி — மிகவும் நெருங்கி நீண்டு; நெஞ் சங் கவர்ந்தேவரும் - ஆடவர்களுடைய மனதைத் தன் வசப்படுத்திக்கொண்டு வருவனவாகிய; கண் அணங்கே- கண்களையுடைய பெண்ணே!; இவன் — இவ்வரசன்; தடந் தோறும் — குளங்களெங்கும்; அங்கங்கு உளன்று - அங்கங்கே அலைந்து; ஊன் அருந்தும் - மீன் புலாலை உண்ணுகின்ற; சயங்கூர் கரா - வலியால் மிகுந்த முதலையானது; தொடர்ந்தோட - பின்தொடர்ந்துவர; (அதனால்) எங்குங் கலைந்து ஓடி - எவ்விடத்தும் நில்லாமல் ஓடிச்சென்று அஞ் சுஞ் சுணங்கு - பயப்படுகின்ற நீர்நாயானது; ஆழிநீர்

கடந்து ஓடி - அந்த ஆழமுள்ளதான குளத்துநீரை விட்டுப் போய்; என்றும் கரும்பு ஊடு உறங்கும் - எப்போதும் கருப் பந் தூரிலே துயிலுகின்ற; கலிங்கேசன் - கலிங்கநாட்டரச ஞனவன். எ — று

தண்ணுதல் - கருதுதல் - மறித்தல்; கண்ணணங்கு-வினைத் தொகை. கராத் தொடர்ந்து ஓடக் கலந்து ஓடி அஞ்சும் சுணங்கு கடந்து ஓடி உறங்கும் கலிங்கம் என முடிக்க. பகை வரை அஞ்சச் செய்கிறவன் என்பது கருப்பொருள்.

14. கடம் நாகம் ஒருகோடி - மதத்தினையுடைய யானை கள் ஒரு கோடியும்; வயவாசி பலகோடி - வெற்றி பொருந் திய குதிரைகள் பலகோடியும்; கடல்போல உடஞகை வர- கடலைப்போலத் தன்னேடு வர; மேக அளவாக ஒரு தேரில் உறு கோமகன் - மேகமண்டலத்தினளவு முயர்ந்த ஒரு தேரின்மேலே வருகின்ற இவ் வரசன்; மடல் பூகம் விரி பாளை - மடலையுடைய கமுகமரத்திலே விரிகின்ற பாளையை; நாணிவெளி மேய்கிலா விட நாகம் என அஞ்சி - வெளியே வந்து மேயாத விஷத்தையுடைய பாம்பென்றெண்ணி; மடன் நாகம் - அறிவில்லாத பாம்பை; மிசை - உண்ணு கின்ற; தோகை மயில் - கலாபியினையுடைய மயிலானது; ஏறி - அந்தக் கமுகமரத்தின்மேலேறி; மலருடு மறை - அதன் பாளையிலுள்ள பூவிலே மறைந்திருக்கின்ற; கேகயன்- கேகய நாட்டரசன். எ — று,

மடலையுடைய கமுகம் பாளையைப் பாம்பென்று மயில் ஏறி அதன் பூவில் மறை கேகயநாடு என்க. மடம் - மடன் எனப்போலியாயிற்று. உடஞகவர உறு கோமகன் கேகயன் என முடிக்க. மேய்கிலாது ஏறி மறை தோகை எனினு மாம். இப்பொருட்கு நாடி எனப் பாடங்கொள்க.

15. வாடிவிழு நூலும் இரு மால்வரையும் - துவண்டு விழுகின்ற நூலையும் இரண்டு பெரிய மலைகளையும்; நேர் இடை மாமுலையுஞ் சூடி - நேரிய இடையும் பெரிய முலையு மாகக் கொண்டு, மிகவான் இழிய - மிகவும் வானுலகமு மிழியும்படி; ஞாலம் விளையாடிவரு - பூமியிலே விளையாடிக் கொண்டு வருகின்ற; தோகை மயிலே - கலாபியையுடைய மயில்போன்றவளே!; ஆடி நிழல்போலும் உளம் மேவி - கண்ணுடியின் நிழலைப்போல உன் மனதிலே குடிகொண்டு; அணிதேர் மிசையும் ஆகி வருவோன் - அழகிய தேரின்மே லுந் தோன்றி வருகின்ற இவ்வரசன்; அறம் நாளும் நாடி

உயர் - தருமம் தினந்தினம் தேடித்தேடி வளர்கின்ற; கோச லமான - கோசலமென்கிற; குலநாடன் - சிரேஷ்டமான நாட்டையுடையவன். எ — று.

சூடி இழிய விளையாடிவரு மயிலே! என இயைக்க. மேவிஆகி வருவோன் இவன் நாடன் என முடிக்க. உம்மை இறந்ததுதழீஇய எச்சம். அங்குள்ளார் தருமம் வளர்ப்ப வர் என்பது போதர, நாடி அறம் நாளும் உயர் என்ருர்.

3

16. மந்தரமலைக் கொப்பான தோள்களைக் கொண்ட பிரபுவான அரிச்சந்திரனுடைய பேரைச் சொல்லும்போது அச் சந்திரமதியானவள், அவ்வாறு சொன்ன அழகான பெண்களுடைய தோள்களைத் தாழச் செய்து தன் கழுத்தை நீட்டித் தன்னுள்ளக் கருத்தை அரிச்சந்திர மகாராசனுக்குக் காட்டினுள். எ — று.

பகைவரை வெல்லத்தக்க வலிய தோள் என்பார் மந்தரமனைய தோள் என்ருர். தாழ்த்தி, நீட்டி, காட்டினுள் என்க. நீட்டல் — உயர்த்தல்.

17. அழகிய கையிலே வேலையுடைய அரிச்சந்திர மகா ராசனும் தனக்கு ஆசை மேன்மேலாக, சந்திரமதியினுடைய தாமரை மலர்போலு முகத்தைப் பார்த்தான். அவ் வண்ணம் பார்த்தவன், சிவந்த கயல்போலுங் கண்களையுடைய சந்திரமதியின் அழகிதான கழுத்திலே திருமங்கலிய சூத்திரம் பொருந்தி விளங்க அதையுங் கண்டான். எ—று.

நோக்கினுல் - முற்றும் வினையெச்சமாக்கல் சிறப்பின்று. உறீஇ — செய்தென் வாய்பாட்டு வினையெச்சம்.

18. இவள் விவாகமாகாத பெண்ணென்று நினைத்திருந் தோம். அப்படியன்றி, முன்னேதானே மங்கிலியஞ் சூட்டப்பட்ட பெண்ணுயிருக்கின்ருள். இன்னமும் ஒரு புருடனுக்குப் பாத்தியப்படத் தகுமோ! என்றரிச்சந்திர மகாராசன் (தன்னுட் சிந்தித்து) மாமனை மதிதய வரசனைப் பார்த்துச் சில சொற்கள் சொன்னுன். எ - று.

எண்ணினம் — உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்று. ஆய் இருக்கின்ருன் என்பன எஞ்சி நின்றன. எய்து - செய்யுமென்னும் வாய்பாட்டு முற்று. ஒகாரம் — வினு.

19. முன்னே யொருவன் தன் கழுத்தில் தரித்த மங்கிலியத்தைக் கட்டிக்கொண்ட பெண்ணை, அதை நீக்கி இரண்

டாவது கல்யாணம் ஒருவர் செய்து கொள்வாரோ? சிறியோர் இப்படிச் செய்துகொள்ளுகிறது உண்டு. கடல் சூழ்ந்த பூமண்டலத்திலே இச்செய்கையை நீங்களுஞ் செய்வதாகச் சுயம்வரம் நாட்டினிர்களென்று அதிக விவகாரங்களைச் சொன்னான். எ - று

பொறுத்துப் பூண்ட பேதை என்க. ஓகாரம் - வினா. ஒருவனால் முன் மணஞ் செய்யப்பட்டுத் தாலியோடு இருக்கிற பெண்ணைப் பெரியோர் இரண்டாவது மணம் முடிப்பாரோ? அவ்வண்ணமாக ஒருவன் பெண்ணாகிய இவளை இரண்டாவது மணஞ் செய்யும்படி சுயம்வரம் நியமித்ததும் செயல் சிறியோர் செயல் என்று பலவாறு பேசினான் என்பது கருத்து.

20. இவ்வாறு பிரபுவான அரிச்சந்திரன் சொன்னபோது மதிதயராசன் தனது மனத்தினின்றும் பொங்குகின்ற சந்தோஷமாகிய பெரிய வெள்ளத்தை யுள்ளே யடக்கிக் கொண்டு, அரசர்களே! இம் மன்னன் சொன்னனதிருட்டுத்தனமோ? அல்லது உண்மைதானோ? (சொல்லுங்கள்). எ - று.

ஏ - அசை. ஓகாரங்கள் ஐயம். இவர் கட்டுரைத்தது எனக் கூட்டுக. இப் பாட்டுக் குளகம்.

21. மதிதயவரசன் அரசர்களை நோக்கி இந்தப் பெண்ணினுடைய கழுத்திலே தாலியிருக்குமானால், உங்கள் கையால் கண்ணுக்குத் தோன்ற நீங்களே காட்டுங்களென்று சொல்ல, அதைக்கேட்ட அரசர்கள் தங்கள் சிவந்த கைகளைக் கட்டி அதிசயித்து, அழகிய மூக்கிலே விரலை வைத்து இந்த மகாப்பிரபுவான அரிச்சந்திரன் பொய்யனாயிருக்கிறான் என்றார்கள். எ - று.

விரல் என்பது - சொல்லெச்சம். கண்ணுற - பிரத்தியட்சமாக. உம்மை - சிறப்பு. சந்திரமதியின் தாலி தங்களுக்குப் புலப்படாமையால் பொய்யன் என்றார்.

22. மிகுந்த சாமர்த்தியத்தையுடைய அரசர்களே, இந்தப் பூமண்டலத்தை யாளுகின்ற அரிச்சந்திர மகாராசன் எங்கள் பெண்ணின் கழுத்திலே தாலியைக் கண்டதற்கும், நீங்களெல்லாம் காணாதிருக்கிறதற்கும் ஒரு தேவரகசியமுண்டென்று மதிதயராசன் அவ் விரகசியத்தைச் சொல்லுகிறான். எ - று.

இரகசியம் - இராசியம் என நீண்டது; குவ்வுருபுகள் தொக்கு நின்றன.

23. தெய்வ நாயகனுன சிவபெருமான் எனக்கு வரங் கொடுத்த காலத்திலே வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலே யுடைய இந்தச் சந்திரமதியுடனே பிறந்த திருமங்கலியத் தைக் கண்டவனே இவளுக்கு நாயகனென்று சொன்ன உறுதி வார்த்தை யுண்டு. அதுவன்றி, வேறேயுமொன் றுண்டு. கேளுங்கள். எ - று.

ஆல் - அசை, நாளையில் என்ற கட்டுரை உண்டு என இயைக்க. எச்சவும்மை தொக்கு நின்றது.

24. கங்காநதியைக்கொண்ட சடாமுடியை யுடைய பரமசிவனுனவர் கொடுத்த வரத்தினுலே இவள் பிறந்த நாள்முதற் கண்ணுடி நிழல்போல மங்கலியத்தைப் பார்ப் பதேயல்லாது, மையிட்ட கண்களை யுடைய அச் சந்திரமதிக் கும், அவருடைய அழகியதான கைக்குத் தீண்ட அகப்ப டாது மறைதலினுல் எங்கள் வீட்டிலுள்ள எல்லாரும் நானும் காணப்பெற்றிலேம். எ - று.

மஞ்சனம் - நீர். கழுவுவது என்பது பொருள். கண்ணு டியிற்றேற்று நிழல் கைக்ககப்படாதது போல கைப்படாது என்பார் கஞ்சனை நீழலில் என்றுர். நிழல் - பிரதிவிம்பம். எஞ்சல் என்பதற்குச் சுருங்கல் எனவே மறைதல் எனக் கொண்டு மறைதலினுல் என்பது பொருளாம்.

25. என்று சொல்லும் சமயத்து, சந்திரமதியானவள் தான் முன்னே நினைத்த அரிச்சந்திரனுடைய பெயரொன்றை யல்லது வேறேயொரு பெயரையும் தன்மனதில் நினையா தவளாய் இந்த மாலைபோய் அரிச்சந்திர மகாராசனுடைய மார்பிலே விழக்கடவதென்று நினைத்து, மணம் விரிகின்ற பூமாலையை ஆகாயத்திலே எறிந்தாள். எ — று.

தனக்கென்று வரித்த நாயகனையன்றி மற்றையோரை மனத்தினினைப்பினுங் கற்பழியுமாதலின் ''முன்னெண்ணிய நாமம் - ஒன்றலதுள்ளுற வுன்னல ளாகி'' என்றுர். மன்றல்- மன்ற என ஈறுகெட்டு நின்றது. இனி சபையில் ஒளியை விரித்த எனினுமாம்.

26. நச்சுப்பொருந்தின ஆபரணங்களை யணிந்த முலை களையுடைய சந்திரமதி எறிந்த மாலையும் அவள் மனமும் அந்தச் சபையிலேயிருக்கிற அரசர்கள் பற்பல பேர்களு டைய கண்களும் மாலைபொருந்தின வேலைக்கொண்ட அரிச்சந்திர மகாராசனுடைய மார்பிலே கூடிவிளங்கலா யின. எ - று

மார்பில் மாலே விழுந்ததை அரசர்கள் யாவரும் நோக்கினர் என்பார், கண்ணும் அணைந்து அலர்ந்தன என்ருர்.

27. அப்படிச் சந்திரமதி எறிந்த மாலேயை யணிந்து கொண்ட அரிச்சந்திர மகாராசனுடைய முகமானது சிவந்த சூரியனைப்போல நிலேகொண்டு விளங்க, அப்படிப்பட்ட வெப்பத்தையுடைய சூரியனுக்கு முன்னே சந்திரன்போல, அங்கு இருந்துள்ள அரசர்களுடைய தாமரை மலர்போன்ற முகங்கள் வாடி ஒளி மழுங்கின. எ - று.

அன்று, ஏ - அசைகள். செய்யக் கரிந்தன என முடிக்க, தமக்கு மாலே என்னும் நன்மையின்ருயிற்றே என்ற துக்கத்தால் ஒளிகெட்டனவாதலின் கரிந்தன என்ருர்.

28. அப்போது கடலோசை அடங்கும்படி பெண்களெல்லாரும் ஆரவாரித்தார்கள்; தேவர்களு மாரவாரித்தார்கள்; கீதங்கள் பாடுகிறவர்களு மாரவாரித்தார்கள்; சந்திரவதியினுடைய உறவின ரெல்லாரு மாரவாரித்தார்கள்; பாடுகிறவர்களு மாரவாரித்தார்கள்; துறவினராகும் முனிவர்களு மாரவாரித்தார்கள்; வேதப் பிராமணர்களு மாரவாரித்தார்கள். எ — று

கீதர் - கீதம்பாடுவோர்; வேதர் — வேதமோதுவோர் — பிராமணர்; அடங்க ஆர்த்தார் என இயைக்க. அடக்க எதிர் காலத்து வந்த செயவெனெச்சம்.

29. நல்ல இலக்கிய இலக்கண நூல்களே யுணர்ந்த வித்துவான்கள் பாடவும், பல வாத்தியங்களும் பலவகைப் பாடல்களு முழங்கவும், அகவிதழ்களேயுடைய பூமாலேயைச் சூட்டின சந்திரமதியும், சூடிக்கொண்ட அரிச்சந்திர மகாராசனும் படுக்கை வீட்டுக்குள்ளே போனுர்கள். எ — று.

பாட ஆர்ப்ப அணிந்து புக்கார் என இயைக்க. மல்ல மாலேயீட்டுத் தன்மையை நாவலர்பாட எனினுமாம். ஏ- அசை.

V. நான்மணிக்கடிகை

1. அகில் - அகிற்கட்டைகள்; கள்ளிவயிற்றிற் பிறக்கும் - கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும்; ஒள்அரிதாரம் - ஒண்மையாகிய அரிதாரம்; மான் வயிற்றிற் பிறக்கும் - மானினது வயிற்றிலே பிறக்கும்; பல்விலைய முத்தம் - மிக்க விலையுள்ள முத்துக்கள்; பெருங் கடலுட் பிறக்கும் - பெருமையாகிய கடலிடத்துப் பிறக்கும்; நல் ஆள் - நற்குண நற்செய்கைகளை யாளுதலை யுடையாள்; பிறக்குங்குடி - பிறக்குங் குடியை; அறிவார் யார் - முன் அறிய வல்லவர் யாவர்? ஒருவருமிலர். எ - று

2. கற்ருர் முன் - நூல்களைக் கற்றறிந்தவர்களிடத்து; கழிவு இரக்கம் - கழிந்த பொருளுக்கு இரங்குதல்; தோன்ரு - உண்டாகா; காதலித்த ஒன்று - விரும்பப்பட்ட ஒரு பொருளை; உற்ருர்முன் - தேடத் தொடங்கினுர் இடத்து; உரு முதல் - (அப்பொருள்) கிடையாத காரணங்கள்; தோன்ரு - உண்டாகமாட்டா; தெற்றென - தெளிய; அல்ல புரிந்தார்க்கு - தீவினைகளை விரும்பிச் செய்தவர்க்கு; அறம் தோன்ரு - அறச் செய்கைகள் தோன்றமாட்டா; வெகுண்டார் முன் - கோபித்தவரிடத்து; எல்லாம் - (பிறர் கூறும்) நன்மைகளெல்லாம்; தோன்ரு கெடும் - தோன்ருதனவாகிக் கெடும். எ - று.

3. பிறர் செய்த கடிய - (ஒருவர் தமக்கு) மற்றவர் செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில்; கன்ருமை வேண்டும் - வயிரம் கொள்ளாதிருத்தலே தகுதி; (பிறர் செய்த) நன்றியை - (தமக்குப்) பிறர்செய்த உபகாரத்தை; நன்ரு - நல்லதாக; கொளல் வேண்டும் - மறவாதிருத்தலே தகுதி; என்றும் - (பிறர்) பொறுக்கக்கூடாத தீங்கு செய்த காலத்தும்; தம்கண் வெகுளி - தம்மிடத் துண்டாய கோபத்தை; விடல்வேண்டும் - ஒழித்தலே தகுதி; ஆக்கம் - (தமது) செல்வத்தை, சிதைக்கும் வினை - கெடுக்கும் தொழிலை; அடல் வேண்டும் - கெடுத்தலே தகுதி. எ - று.

4. பண் அமையா - நரம்பிஞற் கட்டுதலமையாத; யாழின் - யாழிசையினும்; பறை நன்று - பறையோசை நன்மையுடையது; பீடு இல்லாத மாந்தரின் - பெருங்குணமில்லாத ஆடவர் தன்மையினும்; நிறைநின்ற - மனத்தைக் கற்புவழியில் நிறுத்தலமைந்த; பெண்ணன்று - பெண் தன்மை நன்மையையுடையது; பண்ணிழந்த - பதனழிந்த

உணவுகளை; ஆர்தலின் – உண்ணுதலினும்; பசித்தல் - பசியால் வருந்துதல்; நன்று - நன்மையுடையது; பசைந்தாரின்–உள்ளன்புடையாரினும்; தீர்தலின் - நீங்கி உயிர்வாழ்வதிலும்; தீபுகுதல் நன்று - தீயில் நுழைதல் நன்மையை யுடையது. எ – று.

5. இன்னுமை வேண்டின் – (ஒருவன்) இழிவை விரும்புவானுனல்; இரவு எழுக - (மானங்கெடவரும்) இரத்தற்கு எழக்கடவன்; இந் நிலத்து - இவ்வுலகில்; மன்னுதல் வேண்டின் – தான் நிலைபெறுதலை விரும்புவானுனல்; இசை நடுக-புகழை நாட்டக்கடவன்; தன்னோடு செல்வது வேண்டின்-(மறுமைக்குத்) தன்னுடனே செல்லுந்துணையாகுவதனை விரும்புவானுனல்; அறஞ் செய்க - தருமத்தைச் செய்யக்கடவன்; வெல்வது வேண்டின் - (தீய சிந்தைகளை) வெல்லுங் கருவியை விரும்புவானுயின்; வெகுளி விடல் – சினத்தை விடக்கடவன். எ - று.

6. ஒற்றுமை இன்மை - (தகுந்தவரோடு) ஒற்றுமைப்பாடில்லாமை; மெய் சிதைக்கும் - தன் வலிமையை அழிக்கும், பொய் - பொய்யானது; ஒருவனைப் பொன்போலும் மேனியை - (தன்னைக் கூறிய) ஒருவனது பொன்னையொக்கும் (உடலினது) நிறத்தை; சிதைக்கும் – அழிக்கும் ; பெய்த கலம் - (பாலை வார்த்த) கெட்ட பாத்திரமானது; பாலின் சுவையைச் சிதைக்கும் - அப் பாலினது மதுரத்தை யழிக்கும்; கூடார் கண் - நட்புச் செய்யத் தகாதவரிடத்து; கூடிவிடின் - நட்புச் செய்துவிட்டால்; குலஞ் சிதைக்கும் -(அந் நட்பானது) தன் குலத்தினது பெருமையை அழிக்கும். எ–று.

7. பிறவுயிரை - (தன்னின்) வேருயினவாகிய பிராணிகளை; அலைப்பான் - கொல்லுதற்பொருட்டு; ஆக்கலும் - வளர்த்தலும்; குற்றம் - குற்றமான காரியமாகும்; ஊன்-மாமிசத்தை; விலைப்பாலில் – விலையினது உரிமையினுல்; கொண்டு - வாங்கி; மிசைதலும் - உண்ணுதலும் ; குற்றம்-குற்றமான காரியமாகும்; சொலப்பால - சொல்லுதற்குரிய தன்மையுடையன; அல்லாத - அல்லாதனவாகிய சொற்களை; சொல்லுதலும் – சொல்லுதலும்; குற்றம் - குற்றமான காரியமாகும்; கொலைப்பாலும் – (ஒருயிரைக்) கொல்லுதலாகிய தன்மையும்; குற்றமேயாம் - குற்றமான காரியமேயாகும். எ - று.

8. கம்மியர் - கம்மாளர்; கண்டதே - (தாம்) கண்ட பொருள் போல்வதனையே; செய்ப - செய்யவல்லவர்; புலன்

ஆள்வார் - அறிவினை ஆளுதலையுடைய; உண்டு என - (பெரும் பயன்) உள்ளதென்று; கேட்டதே - (ஆசிரியரிடத்துக்) கேட்ட அறத்தையே; செய்ப - செய்யவல்லவர்; அமைந்தார் - (நற் குணங்களால்) நிறைந்தவர்; வேட்ட - தாம் விரும்பினவற் றுள்; இனியவே - (பிறர்க்கு) இனிமையானவற்றையே; செய்ப - செய்யவல்லவர்; திரு - திருமகள்; முனியாதார் - (தம்மின் எளியாரிடத்தும்) கோபஞ் செய்யாதவர்; முன்னி யவே - கருதினவற்றையே; செய்யும் - செய்வாள். எ - று.

9. கண்ணிற் சிறந்த - (உயிர்களுக்குக்) கண்ணைப்போல மேம்பட்ட; உறுப்பு இல்லை - வேறு அவயவமில்லை; கொண் டானின் - (குலமகளுக்குக்) கணவனைப்போல; துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர்; பிறர் இல்லை - மற்றவரில்லை; மக்களின் - (தாய்தந்தையருக்கு) நற்குணமுள்ள பிள்ளைக ளைப்போல; ஒண்மை ஆய் - ஒளியுள்ளன ஆகி; சான்ற பொருள் இல்லை - நிறைந்த பொருள்கள் வேறில்லை; ஈன்று ளின் - (பிள்ளைகளுக்குத்) தாய்போல; எண்ணக்கடவுளுமில்லை - (உயர்வாக) மதிப்பதற்குக் கடவுளுமில்லை. எ - று.

10. கைத்து - பொருள்; உண்டு ஆய் - உண்டாயிருக்க; காப்பாரின் - (பொருளாலாகும் பயனையடையாமல்) அதைக் காப்பவரினும்; கைத்து இல்லார் - அப் பொருளில்லாதவர்; நல்லர் (உலகத்தாரற் பழிக்கப்படாமையால்) - நல்லவராவர்; வைத்தாரின் - பொருளைவைத்து இறந்தவரினும்; வறியவர் - தரித்திரர்; நல்லர் - (வைத்து இறவாமையால்) நல்லவரா வர்; பைத்து எழுந்து - கோபித்து எழுந்து; வைதாரின் - நிந்தித்தவரினும்; பொறுப்பவர் - அந் நிந்தையைப் பொறுத் துக்கொண்டிருப்பவர்; நல்லர் - நல்லவராவர்; செய்தாரின் - உபகாரஞ் செய்தவரினும்; சிதையாதவர் - அவ்வுபகாரத்தை மறவாதவர்; நல்லர் - நல்வராவர். எ - று.

11. மகன் - புத்திரன்; தந்தை - தந்தையினுடைய; நலத்தை - நற்குணத்தை; உரைக்கும் - (தான் நற்குணமுடை மையாற் பிறர்க்கு) அறிவிப்பான்; ஒருவன் முகன் - ஒருவனு டைய முகம்; முன்னின்ற வேட்கை - (அவனது) மனத்தி லுள்ள விருப்பத்தை; உரைக்கும் - (பிறர்க்கு) அறிவிக்கும்; அகல் நீர் - பரவின நீரையுடைய; பிலத்து இயல் - பள்ளத் தினது நிலையை; புக்கான் உரைக்கும் - (அதில்) இறங்கின வன் பிறர்க்கு அறிவிப்பான்; நிலத்து இயல்பு - நிலத்தி லுள்ள மக்களது தன்மையை; வானம் - மழை; உரைத்து விடும் - (பெய்தும் பெய்யாது அவர்களுக்கு) அறிவிக்கும். எ - று.

12. எல்லாம் - எல்லாக்கலைகளையும்; அறிவான் ஒருவனும் - அறிந்திருபவனுகிய ஒருவனும்; யாது ஒன்றும் - ஏதொரு கல்வியையும்; அறியாதவன் ஒருவனும் - அறியாதவனுகிய ஒருவனும்; குணன் அடங்க - நல்லியற்கை இல்லாதிருக்க; குற்றம் உளான் ஒருவனும் - குற்றம் உள்ளவனுகிய ஒருவனும்; கணன் - அடங்க (-சந்தேக விபரீதமாகிய) சிறுமையில்லாதிருக்க; கற்ருன் ஒருவனும் - கற்றறிந்தவனுகிய ஒருவனும்; இல் - இவ்வுலகத்தில் இல்லை. எ - று.

VI குசேலோபாக்கியானம்

சுசீலை அறிக்கை

1. அந்தணன் என்றது குசேலரை. மாற்றம் - மறுமொழி. அகம்=செவி அஞ்செவியெனக் ககரங்கெட்டுப் புணர்ந்தது. 'அகமுனர்ச் செவிகை வரி னிடையன கெடும்' என்பது விதி. நந்தல் - கெடுதல்; உம்மை. அருளாகி - நீங்காளாகி; புந்தி - மனம்; கூறும் - கூறுவாள்;

2. கரிசு - காமம் குரோதம் முதலிய அறுவகைக் குற்றம். காந்தன் - நாயகன்; அது விளியுருபேற்றுக் காந்தனே! என நின்றது. இமைத்தல் - விளங்கல்; தாத்திரி - பூமி; உலைவு - கெடுதி; வித்துதல் - விதைத்தல்; வித்திலான் - விதையாதவன்.

3. வாய்த்தல் - கிடைத்தல்; உஞற்றுதல் - செய்தல்; மூன்ரும் நான்கா மடிகள் 'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்' என்னுங் குறட் கருத்து அமைந்தன. இன்மை - தரித்திரம்.

4. செயிர் - குற்றம்; செய்யவள் - இலக்குமி; அவள் மணாளன் - நாராயணன்; உன்னல் உனலெனக் குறைந்து நின்றது; தியானித்தல் என்பது பொருள்; ஓர்தல் - அறிதல்; உன்னலே நெறி என்று ஓர்ந்த கடலே என இயைக்க.

5. நித்தியமும் - நாடோறும்; அடல் - வலிமை, வெற்றி; கலம் - பாத்திரம்; பாலடிசில் - பாற்சோறு மிடல் - வலிமை; உஞது - எதிர்மறை வினையெச்சம்; அது ஒளிப்பன என்னும் வினைமுற்ருேடு முடியும். உடலல் உடல்

என முதனிலைத் தொழிற் பெயராய் நின்றது. பவம் – பிறவி ஆகரம் – இடம். ஆகும் உடல் பெயரெச்சத் தொடர். வரட்டுதல் - மெலியச் செய்தல்.

6. கரா – முதலை; மொய் வலி – மிக்க வலி; கறையடி அன்மொழித் தொகை; உரல்போன்ற அடியை யுடையது யானை. பொன்னன் – இரணியன்; கடல்வண்ணன் - விஷ்ணு; அலை – திரை; கடற்கு – அடைமொழி; எய்தல் - அடைதல்; அருமை - இன்மை.

7. கமலமேலவன் – பிரமன்; உந்திக் கமலன் - கொப்பூளாகிய தாமரை மலரையுடையவன் = விட்டுணு; தொடர்-பாசம்; மும்மலம்; - ஆணவம், கன்மம், மாயை; வேண்டிய-விரும்பிய பொருள்; வேண்டிய ஆங்கு - விரும்பியபடி; அகரம் தொக்கது.

8. பேறு – பாக்கியம்; அன்ன ஏறு - அன்னச் சேவல்-நான்மறை முனிவன் - பிரமன்; அனைய – ஒத்த; மால்; விஷ்ணு; உறில் - பெறில்; வேறு – பழிப்பு.

9. ஆதரவு - பற்றுக்கோடு; சீற்றம் – கோபம்; புரந்தரன்–இந்திரன்; ந-சிறப்புணர்த்தியது; நக்கீரன் என்பதிற்போல. தாழ்வுறுங்கொல் – தழ்வு உறுமோ; அதில் – அவ்விரத்தற்கண்.

10 மடவரல் – பெண்; வகுத்தல் – சொல்லுதல்; கொழுநன் - கணவன்; ஆசு மாசு – பளகு, குற்றம்; பாசம் முற்றும் - பாசமுழுவதும். உம்மை தொக்கது. பாசம் – பந்தம் = கட்டு; புரத்தல் – காத்தல்.

11. வகுக்க அரும் - சொல்ல முடியாத; அகரம் தொக்கது. இறைவன் - அரசன; அடல் – வலி; ஆற்றுதல் - செய்தல்; நினக்கு ஆற்றும் பணிவிடை என மாற்றுக. குவ்வுருபு தொக்கது. பணிவிடை - ஏவல்; எனக்குத் தானமும் தவமும் முதலிய யாவுமாம்; சிதர்தர - சிதற, நீங்க; செகுத்தல் – அழித்தல்.

12. புடவி – பூமி; மண்டிய – நிறைந்த; கமலை – இலக்குமி; உயிர்த்த – பெற்ற; பண்டைநூல் – பழைய வேதாகமங்கள்; பகர்தல் – சொல்லல்.

VII. குறத்திப் பாட்டு

பொதியமலை

1. மலையும் - மலையுமாகிய பொதியமலையே என் மலையென்க. திங்கள் - சந்திரன்; தமிழ் முனிவன் - அகத்தியன்; அங்கயற்கண் அம்மை - மீனாட்சி; பொழிவதெனத் தாங்கு மலையென இயைக்க.

2. உறங்கல் - துயிலல்; களிறு - ஆண்யானை; பிளிறல்- பிளிற்றொலி செய்தல்; குழவி - இளமையை யுடையது; குழவியாகிய தென்றற் கொழுந்து என்க. திளைத்தல் - படிதல்; பொழில் - சோலை; கூடல் - மதுரை; பிடி - பெண் யானை; கூந்தற் பிடி என்றது தடாதகையை. குடுமி - சிகரம்; அம்மே! விளி.

3. பிணை - பெண்மான்; விருந்து அயரும் - விருந்துண்ணும்; கண் - இடம்; கவிகை - குடை; அபிடேகவல்லியென்றது மீனாட்சியை.

4. கல்லுதல் - கிண்டுதல்; தேறல் - தேன்; தழை - மலராலும் தழையாலுஞ் செய்யப்பட்ட உடை; பாயல் - படுக்கை; கண்ணி கணி என நின்றது; வினை - பாவம்.

5. புல்வாய் - மான்; பார்வை - குட்டி; பாறை - பரந்த கல்; உணங்கல் - காய்தல்; விடர் - பிளப்பு; கடமான் - யானை; சில்வலை - சிறுவலை; ஏங்கல் - முழங்கல்; கொல்லை- தினைத்தோட்டம்; குறிச்சி - சிற்றூர்.

VIII. தனிச்செய்யுட்டிரட்டு

1. விரகம் - சாமர்த்தியம்; உரகன் - சேடன்; உரகன் சிரகம்பிதமும்; வாணன் கரகம்பிதமும் செய்யலாகும் என்க.

2. போதம் - அறிவு; ஓதை - ஓசை; மகிபன் - அரசன்; காண்பதற்கு வேதா வகுத்திலன் என்க. வேதா - பிரமா; சிரகம்பம் - தலையசைப்பு.

3. முன் நில்லாமல் சேர்ந்தார் என்க.

4. ஆடை - வஸ்திரம்; வைரவன் வாகனம் - நாய்; நான்முகன் வாகனம் - அன்னம், சோறு; நாராயணன் வாகனம் - கருடன்; மைவாகனன் - ஆட்டுக்கடா வாகனன், அக்கினி.

5. பாமாரி - பாமழை; ராகம் - இசை; மேகம் - பொழிந்து புகுந்தது என முடிக்க. ஆல் - அசை. போய் - போக; செயவெனெச்சத் திரிபு.

6. தூலம் - நுண்பொருளில்லாதது. தாரகை - நட்சத்திரம்; ஏற்றுலும் - யாசித்தலும்; கன்ன அவதாரன் - கன்னனுடைய அவதாரமாயுள்ளவன்; வடநூல் முடிபு.

IX. தேவதாசன் பாம்பினுற் கடியுண்டிறத்தல்

1. தந்திடுவழி - கொண்டுவரும் வழி; முனிவான் - கோபிப்பான்; வடம் - ஆலமரம்; இந்தனம் - விறகு; புதல் - பற்றை.

2. பறித்தல் - பிடுங்குதல், அரிதல்: கோள் - கொலே; அரா - பாம்பு; அக்கினிப்பொறி கண்களினின்று தெறித்துச் சிந்த, தீண்டிற்று - கடித்தது; வெறித்தல் - மயக்கல்.

3. மறுகி - சுழன்று; கருவிகளைவிட்டு உயிரடங்கியது.

4. ஆவி - உயிர்; பாவியூழ் என்றது வடநூன்மதம்; 'அழுக்காறென ஒருபாவி' என்றதுபோல. வடம் - ஆல்; காவி - கருங்குவளே.

5. பானு - சூரியன்; பரிதபித்தல் - வருந்தல்; தாரை - நீர்ப்பெருக்கு; கால - சொரிய.

6. மக்காள் - மக்களே; இணங்கி - கூடி; உணங்கி - வாடி; உயிர்த்தல் - மூச்சுவிடல்.

7. மடம் - பேதைமை; வல்லி - சந்திரவதி; குசை; தருப்பை; தடம் - மேட்டுநிலம்.

8. உடையோன் - அடிமையாக உடையோன்; சிறு தொழில் - குற்றேவல்; அகம் - வீடு.

9. பணி - ஏவல்; அற - முற்ற; அச்சிறை - அவ்விடம்.

10. வீணி - பயனற்றவளே; தவிர்க - ஒழிக.

11. அந்தரம் - வெளி, தனியிடம்; படி - பூமி; அடக்கி- அடக்கஞ் செய்து; கங்குல் - இரா.

12. ஒருகால் - ஒருதரம்; கடி - காவல்.

13. தாவி - பாய்ந்து; தயங்கி - வருந்துதல்.

14. அடிகள் - அடிச்சுவடுகள்; தூறு - பற்றை; தொட்டமாறுஎலாம் - தீண்டிய அச் செடிகளின் கணுக்களெல்லாம். அன்றி - அல்லாமல்.

15. கழுகு - ஒரு பறவை; குறள் - பூதம்; குழு - கூட்டம்.

16. முண்டகம் - தாமரை; அண்டர் - தேவர்.

X

1. மட்டு - தேன்; சூழ்ந்தாலும் - சுற்றினாலும்; பரிமளித்தல் - மணத்தல்; பரிந்து - விரும்பி; பரிந்து அ ஏட்டை எனக் கண்ணழிக்க. பாட்டினிட - பாட்டிலே போட; நளினம் - தாமரை.

2. நாகரிகம் - சதுரப்பாடு, சீர்திருத்தம்; இரை உணவு; கூப்பிடுகிறது என்பது மரீஇ கூப்பிடுது என்றாயிற்று.

3. கவி-புலவர்கள்; வாரணங்கள் - யானைகள்; கோளரி - சிங்கம். இன்று இச் செம்மற்பட்டி எனப் பிரிக்க. கற்பது - கற்றல்; தொழிற்பெயர்.

XI. தண்டலையார் சதகம்

1. பந்தி - சபை; படுக்கும் அமையச்செய்யும்.

2. புனம் - வயல்; இனம் - குலம்; கடிந்து - நீங்கி; சல சலப்பு ஒருவகை ஒலிக்குறிப்பு.

3. பன்னகம் - சர்ப்பம்; வேணி - சடை; சின்னவர் - சிறியோர்.

4. வஞ்சனை - உபாயம்; தென்னவனும் சோழனும் பணியும் தென்னவன் - பாண்டியன்; ஒட்டப்பம் வீட்டைச் சுட்ட கதையை நோக்கியுணர்க.

5. நேசம் - அன்பு; வேளை - சமயம்; இங்கிதம் - குறிப்பு; உசிதம் - இனிமை; அபிடேகம் - முழுக்கு; ஒட்டுவது - செலுத்துவது; தான் ஏ அசைகள்.

XII. நீதிநெறி விளக்கம்

1. அறம் - தருமத்தையும்; பொருள் - செல்வப்பொருளையும்; இன்பமும் - இன்பத்தையும்; வீடும் மோட்சத்தையும்; பயக்கும் - கொடுக்கும்; புறங்கடை - தலைவாயிலில்; நல்லிசையும் - குற்றமில்லாத கீர்த்தியையும்; நாட்டும் - நிலைபெறச் செய்யும்; உறும் - வரவேண்டியதாகிய; கவல் ஒன்று - ஒரு கவலை; உற்றுழியும் - நேரிட்டவிடத்தும்; கை கொடுக்கும் - உதவிசெய்யும்; (ஆதலால்) சிறு உயிர்க்கு - சில வாழ்நாளையுடைய உயிர்களுக்கு; உற்ற துணை - நீங்காத துணை; கல்வியின் ஊங்கு - கல்வியினும் மேம்பட்டது; இல்லை - இலதாம். எ — று.

புறங்கடை - புறவிடம் - தூரதேசம் எனினுமாம். இம்மைப்பயன், மறுமைப்பயன், வீடு என்னும் மூன்றையும் தருதலால் அறத்தை முதலினும், இம்மை, மறுமை என்னும் இரண்டையும் தருதலால் பொருளை அதன் பின்னரும், இம்மைப்பயன் ஒன்றையே தருதலால் இன்பத்தை அதன் பின்னரும் வைத்தும், அவற்றோடு சாத்தியமாய் நிரதிசய நித்திய இன்பமாகிய வீட்டிடை வேற்றுமை தோன்ற உம்மை கொடுத்துப் பிரித்தும், மக்களடைதற்குரிய பொருள் இந் நான்குமென்பது தோன்ற வீடும் என அவற்றுடனெண்ணியும் கூறினர் என்க. கல்வி, பயக்கும், காட்டும், கைகொடுக்கும் எனத் தனித்தனி முடிக்க. இவற்றிற்கு வினைமுதலாகிய கல்வி வருவிக்கப்படும். துணை - எழுவாய்; இல்லை - பயனிலை.

2. முற்றிழாய் - செய்து முற்றிய ஆபரணங்களை யுடையவளே; கல்வி - கல்வியானது; தொடங்குங்கால் - தன்னைத்

தொடங்குங்காலத்து ; துன்பமாய் - துன்பந் தருவதாய்; இன்பம் பயக்கும் - பின் இன்பத்தைச் செய்யும் ; மடம் கொன்று - (அன்றியும்) அறியாமையை நீக்கி ; அறிவு அகற்றும் - அறிவை விசாலமாக்கும் ; நெடுங் காமம் - (இனி) மிக்க காமமோவெனில் ; முன் - ஆரம்பத்தில் ; பயக்கும் - கொடுக்கிற ; சின்மைநீர் இன்பத்தின் - அற்ப நீர்மையுடைய இன்பத்திலும் பார்க்க ; பின் பயக்கும் பீழை பெரிது - பின்பு தரும் துன்பம் மிகப் பெரியது. எ—று.

எனவே காமத்திலும் பார்க்க விரும்பிக் கல்வியையே பயிலவேண்டுமென்பது இசையெச்சம். துன்பந் தருவதைத் துன்பமென்றது உபசாரம். கல்வி - எழுவாய். பயக்கும், அகற்றுமென்பன பயனிலைகள், பீழை - எழுவாய், பெரியது - பயனிலை.

இதன் கருத்து: காமம் முன் சிறிய இன்பந் தரும்; பின் பெரிய துன்பந் தரும். கல்வி முன் சிறிய துன்பந் தரும் ; பின் பெரிய இன்பந் தரும். ஆதலால் கல்வியையே ஒருவன் விரும்பிக் கற்க வேண்டும் என்பது.

3. அவை அஞ்சி - (கற்றவர் கூடிய) சபையை அஞ்சி; மெய்விதிர்ப்பார் கல்வியும் - உடம்பு நடுங்குவாருடைய கல்வியறிவும்; கல்லார் - மூடர்களுடைய; அவையஞ்சார் - சபையை அஞ்சாத; ஆகுலச்சொல்லும் - ஆரவாரச் சொல்லும்; நவையஞ்சி ஈத்து உண்ணுர் செல்வமும் — (பிறர் சொல்லும்) குற்றத்திற்கு அஞ்சி இரப்பவர்க்குக்கொடுத்துத் தாமும் உண்ணுதவர் செல்வமும்; நல் கூர்ந்தார் இன் நலமும் - தரித்திரருடைய இனிய இளமை அழகும்; பூத்தலின் பூவாமை நன்று - உளதாதலின் உளதாகாமை நன்று. எ — று,

கல்வியும், சொல்லும், செல்வமும், நலமும் பூவாமையே நன்று என முடிக்க. இவை நான்கும் பயனற்றன என்றபடி. பூவாமை எழுவாய், நன்று பயனிலை. பொருளிலாச் சொல் என்பார் ஆகுலச்சொல் என்ருர். இது பழிப்பு ஒப்புவமைக் கூட்டமென்னும் அணி. நவை அஞ்சுதல், ஈதலுக்கு விசேடணமாகும். நலம் என்பதற்கு கொடுத்தல் முதலிய நற்குணம் எனினுமாம்.

4. கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும் - சரஸ்வதியின் வாழ்வு (தன்) முகத்தினிடத்தாயினும்; மலரவன் வள்தமிழோர்க்கு ஒவ்வான் - பிரமன் வளவிய தமிழ்ப் புல

வர்க்கு ஒப்பாகமாட்டான்; (ஏனெனில்) இவர் புகழ் கொண்டு செய்யும் உடம்பு - இத்தமிழ்ப் புலவர் புகழ்பெறப் படைக்கின்ற (செய்யுளாகிய) உடம்புகள் மலரவன் செய் வெறு உடம்புபோல - பிரமன் படைக்கின்ற பயனற்ற உடம் புகள்போல; மற்று மாயா - அழிவனவல்ல (ஆத லால்). எ - று.

கொண்டு என்னுஞ் செய்தனெச்சம் செயவெனெச்ச மாகத் திரிக்கப்பட்டது. இனிப் புகழாற் செய்யுமுடம்பு எனப் பொருள்கொண்டு, புகழுடம்பு எனினுமாம்; 'நத்தம் போற் கேடும் உளதாகும் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது' என்றார் தேவரும். மற்று வினைமாற்று; அசையு மாம். இரு பொருள் வேற்றுமைச் சமம் என்னும் அணி.

5. மனைத்தக்காள் மாண்பு இலள் ஆயின் - இல் வாழ்க் கைக்கேற்ற மனைவியானவள் நற்குண நற்செய்கை இல்லா தவளானால்; மணமகன் பூண்ட நல்லறம் புலப்படாபோல- கணவன் மேற்கொண்டனவாகிய நல்ல தருமங்கள் விளங் காதனபோல; இலம்பாட்டார் கல்வி - வறியவர்களுடைய கல்வியும்; எத்துணையவேனும் - எத்துணைமிகுதி யுடையன வாயினும்; தினைத்துணையும் சீர்பாடு இல ஆம் - சிறிதேனும் மேம்பாடு இல்லன ஆகும். எ - று.

எனவேசெல்வ மில்லாதவர் கல்வி மேன்மையடையாது என்பதாம். தினை சிறுமைக்குக் காட்டுவதோரளவு. பூண்ட- வினையாலணையும் பெயர்.

6. கனம் குழாய் - கனத்த காதணியையுடையவளே!; முற்றும் உணர்ந்தவரில்லை - எல்லாமறிந்தவரில்லை; முழுவ தூம் கற்றனம் என்று களியற்க - எல்லாவற்றையும் படித் தறிந்தோ மென்று செருக்குக் கொள்ளற்க; கல்லும் சிறு உளியால் தகரும் - மலையும் சிறிய உளியாலுடையும்; கொல் உலைக்கூடத்தினுல் தகரா - கொல்லனது உலைக்களத்துள்ள சம்மட்டியா லுடையாது (ஆதலால்) எ - று.

பின்னிரண்டடியும் மிக்க கல்வியறிவுடையவனானாலும் வெல்லப்படாத ஒருவன் சிறிது கல்வியறிவுடையவனால் வெல்லப்படுவான் என்னும் பொருள்பட நின்று பிறிது மொழிதலாய் நின்றமையோடு ஏதுவாயும் நிற்றலால் இச் செய்யுள் கலவையணி. கல்லும் - உம்மைச் சிறப்பு. தகரா என்பதற்கு கல் எழுவாய்.

7. தம்மில் மெலியாரை நோக்கி - தம்மினும் எளியவரைப் பார்த்து; தமது உடைமை அம்மா பெரிது என்று அகம் மகிழ்க - நம்முடைய பொருள் அம்மா பெரிது என்று மனமகிழ்க; தம்மினும் கற்றாரை நோக்கி - தம்மைப் பார்க்கிலும் படித்தவரைப் பார்த்து; நாம் கற்றது எல்லாம் இவர்க்கு எற்றே என்று கருத்து அழிக - நாம் படித்தது முழுவதும் இவரது கல்விக்கு எத்தன்மையதாகு மென்று கருதி மனம் வருந்துக. எ - று.

இன் உருபு இரண்டும் உறழ் பொருள். அம்மா வியப்பின்கண் வந்த இடைச்சொல். உம்மை - உயர்வு சிறப்பு.

8. இல்லார் குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் - இல்லாதவர் தமது குறைகளைச் சொல்லி (செல்வராகிய) தமக்குமுன்னர் நிற்பர்; (அதுபோல) தாமும் தலைவணங்கித் தாழ்பெறின் - தாமும் தலைவணங்கித் தாழ்தலைப் பொருந்துவராயின்; கல்வியுடைமை பொருளுடைமை என்று இரண்டு செல்வமும் செல்வமெனப்படும் - கல்வியுடையராதலும் பொருளுடையராதலும் ஆகிய இரண்டு செல்வங்களும் செல்வம் என்று சொல்லப்படும். எ - று.

என்று - எண்ணிடைச்சொல். தலைவணங்குத லென்றது பெருமிதமில்லாமை. 'எல்லார்க்கும் நன்றாம் பணிதலவருள்ளுஞ் செல்வர்க்கே செல்வந் தகைத்து' என்றார் தேவரும். பெறின் என்பது வினையெச்சம். அது எனப்படும் என்பதோடு முடியும்.

9. ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட மீ செலவு காணின் நனி தாழ்ப - கல்விச் செல்வம் உடையவர் அவற்றிற் சிறியவராயினாரிடத்து உண்டாகிய வரம்பு கடந்த நடையைக் காணிற் றாம் மிகத்தாழ்வர்; தூக்கில் - நிறுக்குமிடத்து; துலைக்கு மெலியது மென்மேல் எழ செல்லச் செல்ல வலிது தாழும் - தராசுத் தட்டுகளுள் இலேசான பொருளுள்ள தட்டு மிக மேன்மேல் எழும்படி உயருந்தோறும் கனமான பொருள் உள்ள தட்டுத் தாழுகின்றது. எ - று.

துலைக்கு - உருபு மயக்கம். இது எடுத்துக்காட்டுவமை தாழ்ப - பலர்பாற் படர்க்கை வினைமுற்று.

10. அனல் கொழுந்து வெங்காரம் வெய்து எனினும் நோய் தீர்க்கும் - தீப்போலச் சுடும் வெங்காரமானது வெப்பமுடையதானாலும் நோயை நீக்கும்; சிங்கி மெய்ப்பொடிப்ப குளிர்ந்தும் கொல்லும் - சிங்கியானது உடம்பு களிக்

கும்படி குளிர்ந்திருந்தும் கொல்லும்; இனியவர் என்சொலி னும் இன் சொல்லே -(அதுபோல) அன்புடையர் கடுஞ் சொல்லைச் சொல்லினும் அது இனிய சொல்லேயாம். இன் னுர் கனியும் மொழியும் கடுவே - அன்பில்லாரது இனிய சொற்களும் விஷம்போன்றதாம். எ — று.

கடு - கடுப்போன்றது. உவமை ஆகுபெயர்.

11. பொய் குறளை வன்சொல் பயனில என்று இந் நான்கும் சொல்லின் எய்தாமை - பொய்யும், புறங்கூற லும், கடுஞ்சொல்லும், பயனில்லாத சொல்லும் ஆகிய இந் நான்கு குற்றங்களும் தாம் சொல்லும் சொல்லிற் பொருந்தாமலும்; மெய்யில் புலம் ஐந்தும் காத்து மனம் மாசு அகற்றும் - பொய்யான பொறிகளைந்தும் நெறிதப் பிச் செல்லாமலும் காத்துக்கொண்டு மனக் குற்றத்தையும் நீக்கிக் காக்கும்; நலம் நல்லாறு எனல் - நன்மையையே நன்னெறி என்று சொல்லப்படுவது. எ — று.

என்று - எண்ணுப்பொருளில் வந்த இடைச்சொல். குற் றம் — காமம், வெகுளி, மயக்கம், குறளை கோள் என்பாரு முளர். இதன் கருத்து: மனம் வாக்கு காயம் இம் மூன்று லும் குற்றமில்லாமல் ஒழுகலே நல்லொழுக்கம் எனப்படு வது என்பதாம்.

12. பல்பொறிச் செங்கண் புலியேறு - பல புள்ளிகளை யும் சிவந்த கண்களையுமுடைய ஆண்புலி; பைங்கண் புனத்த பைங்கூழ் அறப் பசித்தும் தின்னுவாம் -ஈரமான இடத்தை யுடைய புனத்திலுள்ள பசிய பயிரை மிகப் பசித்தாலும் தின்னுவாம்; நல்லாறு ஒழுக்கின் தலைநின்ருர் - நன்நெறி யில் நடப்பதில் வழுவாதவர்; நல்கூர்ந்தும் அல்லன செய் தற்கு ஒருப்படார் — வறுமை யடைந்தும் பாவத்தொழில்க ளைச் செய்தற்கு உடன்படார். எ — று.

அல்லன - நல்லவழி அல்லாதன. இது எடுத்துக்காட் டுவமை.

13. தம்முடையான் எப்பாலும் நிற்பது என - தம்மை ஆளாகவுடைய கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் அகத் தும் புறத்தும் நிறைந்து நிற்பதுபோல; எம்முடையர் - எம்மை ஆளாகவுடைய யோகிகள்; எவரெவர் எத்திறத் தார் அத்திறத்தராய் நின்று - யாவர் யாவர் எவ்வெப் பக் குவத்தை உடையவரோ அப் பக்குவத்துக்குத் தாமமைந்த வராய் நின்று; அவரவர்க் காவன கூறி - அவரவர்க்குத்

தகுந்த உறுதி மொழிகளைக் கூறி; எவரெவர்க்கும் உப்பாலாய் நிற்ப - எவரெவர்க்கும் புறம்பாகி இருப்பார்கள். எ - று.

நிற்ப - பலர்பாற் படர்க்கை வினைமுற்று; என - உவமை உருபு; மற்று - அசைநிலை; உப்பால் - ஈண்டுப் புறத்தை உணர்த்திற்று; 'ஊழையு முப்பக்கங் காண்பர்' என்பதில் உப்பக்கம் என்பதுபோல.

14. மெய்யுணர்ந்தார் பொய்மேல் புலம்போக்கார் - உண்மையை யறிந்தோர் நிலையற்ற இன்பங்களி லைம்புலன்களையுஞ் செலுத்தாமல்; மெய்யுணர்ச்சி கைவருதல் கண்ணு புலம் காப்பார் - மெய்ம்மையாகிய முதற்பொருளைப் பாவித்தல் சித்திப்பதே கருத்தாகப் புலன்களைத் தடுப்பர்; மெய்யுணர்ந்தார் - உண்மையை உணர்ந்தவர்கள்; காப்பே நிலையா - புலன்களை யடக்கலே வாசற் காலாகவும்; பழி நாணம் நீள் கதவா - பழிக்கு நாணுதலே பெருங் கதவாகவும்; நிறைத்தாழ் - நிறைக்குணமாகிய தாழ்க்கோலை; செறித்து - உறுதியாகப் போட்டு; சேர்ப்பார் - (முதற் பொருளைப் பாவித்தலில் மனத்தை) ஒருமைப் படுத்துவர். எ - று.

போக்கார் - வினையெச்சப் பொருளில் வந்த முற்று; ஆக என்பன ஆ என ஈறு குறைந்து நின்றன. மெய் - ஆகுபெயர்; மெய்யுணர்ந்தார் காப்பார்; மெய்யுணர்ந்தார் சேர்ப்பார் என முடிக்க. பின் இரண்டடியும் இயைபுருவகம்.

XIII. விநோத கவிகள்

1. சத்திமுற்றம் - ஓரூர்; பாடு - படுதல், சொல்லல்; கூடல் - மதுரை; மன்றம் - அம்பலம்; அலகு உயிதித்தன்ன பல்லினன் - கதுப்பு உதிர்ந்தாற்போன்ற பல்லையுடையவன்; குளிர்ச்சி மிகுதியால் ஒன்றோடொன்று தாக்கும் பல் என்றபடி; வேயாமையால் நனைந்த சுவரையுடைய கூரையைக் கொண்ட வீடு; பேழை - பெட்டி; உயிர்த்தல் - நெட்டுயிர்த்தல்; ஏழையாளன் - வறியோன்.

2. புற்கை - புல்லரிசிச் சோறு, கூழுமாம்; கிள்ளை - கிளி; ஆர்பதம் - உணவு; கலி - வறுமை; குறும்பு - குறுநில

மன்னன்; குடிதாங்கி – குடியைத் தாங்குவோன்; என்றது அரசனை.

3. அறமுரைத்தான் – தக்கிணமூர்த்தி - சிவன்; முப்பால் - திருவள்ளுவர் குறள்; குறுமுனி – அகத்தியன்;

4. நீள – நீண்டகாலமாக; என்னை நீங்காத நிழல்போலத் திரிந்தாய் எனக் கூட்டுக. காளத்தி நின்ற ஐ எனப் பிரிக்க. அகரந் தொக்கது. ஐ – தலைவன்; ஐக்கு - தலைவன் கண், உருபு மயக்கம்; சற்று – சிறிது.

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

TAMIL MANJARI

BOOK III

North-Ceylon Tamil Works Publishing House
Chunnakam